விலை ரூபா 20 பக்கங்கள் 44

# உதயன்




சுடர் 31 கதிர் 029 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 09, வெள்ளிக்கிழமை 25.12.2015

## புனர்வாழ்வுக்குப் பெயரிட்ட அரசியல் கைதிக்கு மறியல்

யாழ்ப்பாணம், டிசெ. 25
புனர்வாழ்வுக்குப் பெயரிடப்பட்ட அரசியல் கைதி ஒருவருக்கு, கண்டி உயர் நீதிமன்றம் அடுத்த ஆண்டு 5 ஆம் மாதம் வரையில் விளக்கமறியலை நீடித்து உத்தர விட்டுள்ளது.
கோவிந்தசாமி சுந்தரமணி (வயது -48) என்பவருக்கே கண்டி உயர் நீதிமன்றம் தடுப்புக் காவலை நீடித்துள்ளது.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதி 20 பேரு டைய பெயர்ப் பட்டியல் வெளி யிடப்பட்டது. குறித்த 20 பேரும் புனர்வாழ்வளிக்கப்படவுள்ளோர் என்று அமைச்சு தெரிவித்திருந் தது. அந்த 20 பேருடைய பெயர்ப் பட்டியலில், கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட் பக். 24



வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் உதயனின் இனிய நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

முச்சந்தி முரளி



நத்தாரோடையாவது நல்ல காலம் பிறக்குமோ இயேசு பாலனே...

# உள்ளகப் பொறிமுறை ஆலோசனையில் அரசு

## ஜனவரியில் வருகிறது இறுதி வடிவம்

கொழும்பு, டிசெம்பர் 25
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலுக்கான உள்நாட்டு நீதிப் பொறிமுறை அமைத்தல் தொடர்பில் பல்வேறு மட்டங்களில் ஆலோசனைகளை அரசு ஆரம்பித்துள்ளது.
இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
அத்துடன், பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அடுத்த மாதம் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதி வடிவம் உருவாக்கப்படுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

> “பொதுமக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, அடுத்த மாதம் உள்ளக விசாரணைப் பொறிமுறையின் இறுதி வடிவம் உருவாக்கப்படும்”

இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, பக். 24

வரலாற்றில் இடம் பிடிப்பாரா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன?



பக். 13

## சர்ச்சைக்குரிய படைத் தளபதி ஜெகத் டயஸ் இன்றுடன் ஓய்வு

கொழும்பு, டிசெ.25
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரில் வன்னி 57ஆவது படைப் பிரிவின் தலைமைத் தளபதியாகக் கடமையாற்றி போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் இன்றுடன் ஓய்வு பெறவுள்ளார்.



33 ஆண்டு கால இராணுவச் சேவையை இன்றுடன் முடித்துக் கொண்டு, இலங்கை இராணுவத்திலிருந்து அவர் ஓய்வு பெறுகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
இன்று தனது 55 ஆவது வயதை எட்டும் நிலையில் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் ஓய்வு பெறவுள்ளார். பக். 24



உலகமெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்று நத்தார் பண்டிகையைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்றனர். நத்தார் நள்ளிரவு ஆராதனைகள் குடாநாட்டுத் தேவாலயங்களிலும் நடைபெற்றன. இதில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர். யாழ்.மரியன்னை பேராலயத்திலும் புதிய ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நத்தார் ஆராதனை இடம்பெற்றது. (த-வ)

## விக்கி என்ற சுனாமி அலையில் சிக்கித் தவிக்கின்றார் சம்பந்தன்

### தினேஸ் குணவர்த்தன கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 25
விக்னேஸ்வரன் என்ற சுனாமிப் பேரலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் சிக்கித் தவிக்கின்றார் என்று தெரிவித்துள்ளார் மகிந்த ராஜபக்ச அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன.
விக்னேஸ்வரன் என்ற சுனாமிப் பேரலையில் சம்பந்தன் சிக்கித் தவிக்கிறார். இந்தச் சுனாமிப் பேரலையிலிருந்து சம்பந்தனால் மீண்டு வர முடியவில்லை.
வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் மக்கள் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளதன் மூலம் கூட்டமைப்புக்குள் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. விக்னேஸ்வரன் மேலே இருக்கிறார். சம்பந்தன் கீழே இருக்கிறார் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-5)

## தனியார் சம்பள உயர்வுக்கு அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, டிசெ. 25
தனியார் துறையினருக்கு சம்பள உயர்வு வழங்கும் சட்டவரைவுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக ஊடகத் துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
2016 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு இணங்கத் தனியார் துறையினருக்கு வேதன உயர்வு குறித்து தயாரிக்கப்பட்ட சட்டவரைவு தொடர்பில் அனுமதியினைப் பெற்றுக்கொள்வது சம்பந்தமாகத் தொழில் மற்றும் தொழிற்சங்க பக். 25

## மகிந்த அணியின் நிலைப்பாடு ஜனவரி 4ஆம் திகதி அறிவிப்பு

### அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்து

கொழும்பு, டிசெ. 25
அரசமைப்புச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான யோசனை தொடர்பில், தமது நிலைப்பாட்டை எதிர்வரும் 4ஆம் திகதி பொது எதிரணி எனத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு அணி அறிவிக்கவுள்ளது.
அரசமைப்புச் சீர்திருத்த நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்றத்தை அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றுவதற்கான யோசனையை எதிர்வரும் 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார். அன்றைய தினம் பக். 24

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக விசேட வழிபாடு

**கத்தோலிக்க ஆணைக்குழு அழைப்பு**


யாழ்ப்பாணம், டிசெ. 25
இலங்கை சிறைச்சாலைகளில் பல வருடங்களாக விசாரணைகளின்றி, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாது தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி பக். 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையில் 2016 இல் பெரியளவு மாற்றங்கள்

*நீதியமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ.25
வழக்குகள் தாமதமாவதைத் தடுப்பதற்கு அடுத்த ஆண்டு நீதித் துறையில் பெரியளவிலான மாற்றங்களைச் செய்யப் போவதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.



அதில் முதற் கட்டமாக இணக்க சபைக்கு வரக்கூடிய வழக்குகளின் நிதிப் பெறுமதியை 5 லட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாக நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இணக்க சபைக்கு தற்போது 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருக்கும் வழக்குகளின் நிதிப் பெறுமதியை 5 லட்சம் ரூபா வரை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 5 வருட காலப் பகுதியில் இணக்க சபைக்கு வந்த வழக்குகளில் 51 வீதமானவை தீர்க்கப்பட்டுள்ளன. அது வழக்குகள் தாமதமாவதை தடுப்ப தற்குப் பெரியளவில் பங்காற்றியுள்ளது.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அதிக வழக்குகள் காணப்படுவதனால் அந்தத் திணைக்களத்துடன் பேசி குறித்த தவறுகளுக்காக அபராதம் விதிப்பதனூடாக மாத்திரம் தீர்வுகளை பெற்றுக் கொடுக்கும் நடைமுறை ஒன்றைச் செயற்படுத்த நீதியமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

அத்துடன் சிவில் மற்றும் குற்றவியல் வழக்கு ஏற்பாடுகளில் திருத்தம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. -என்றார். (த-வ)

# சிறையில் இந்திய மீனவர் அரைநாள் உணவு தவிர்ப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25
இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யாழ்.சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் 51 பேர் நேற்று அரைநாள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தம்மை விடுதலை செய்யக் கோரியே நேற்று முற்பகல் தொடக்கம் அவ்வாறு மீனவர்கள் உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர். இந்தியத் தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்ட பின்னர் உணவு தவிர்ப்பைக் கைவிட்டு மதியச் சாப்பாட்டை உட்கொண்டதாகச் சிறைச்சாலைத் தரப்பினர் தெரிவித்தனர்.

அத்துமீறி எல்லை தாண்டி வந்து மீன்பிடித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள அவர்கள் நீதிமன்றங்களின் உத்தரவுப்படி யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பருத்தித்துறை மற்றும் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்களாவர்.

இந்த நிலையில் பண்டிகைக் காலங்கள் வருவதால் தம்மை விடுதலை செய்யக் கோரியே அவர்கள் அவ்வாறு உணவு தவிர்ப்பில் ஈடுட்டனர்.

இலங்கையின் சிறைச்சாலைகளில் இந்திய மீனவர்கள் 65 பேர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இந்திய மீனவர்கள் 51 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4-101-106)

# ஆலயத்தில் 3 வருடங்கள் பிள்ளையாரின் அதிசயம்

புதுக்குடியிருப்பு,டிசெ.25
உடையார்கட்டு குரவையர் மாங்கனிப் பிள்ளையார் ஆலயத்தில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் பிள்ளையார் தோன்றும் அதிசயம் இடம்பெற்று வருவதாகக் குறித்த ஆலயத்தின் தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து குறித்த ஆலயத்தில் நடைபெறும் பிள்ளையார் கதையின்போது ஏதோ ஒரு அதிசயம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. 2013 ஆம் ஆண்டு ஆலய வளாகத்தில் நின்ற மாமரம் ஒன்றில் காய்த்த மாங்காயில் பிள்ளையார் உருவம் தோன்றியது. அதேபோல் 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற பிள்ளையார் கதையின்போது அதே ஆலய வளாகத்தில் நின்ற தென்னை மரத்தில் காய்த்த தேங்காயில் பிள்ளையார் உருவம் தோன்றியுள்ளது.

இந்த வருடம் மீண்டும் குறித்த ஆலயத்தில் உள்ள மா மரத்தில் காய்த்த மாங்காயில் பிள்ளையார் உருவம் தோன்றியுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் மாங்கனிப் பிள்ளையார் ஆலயத்தில் பிள்ளையார் உருவம்தோன்றுகின்றமை ஆலயத்துக்கு வரும் பக்தர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளதோடு, ஆலயத்தின் மீதான பக்தியையும் கடவுள் நம்பிக்கையையும் மேலோங்கச் செய்துள்ளது என குறித்த ஆலயத்தின் தர்மகர்த்தா தெரிவித்துள்ளார்.

(த-ஐ-21.ரி3)

# சொந்த மகளுடன் தகாத உறவு தகப்பனாருக்கு விளக்கமறியல்

அம்பாறை,டிசெ.25
தனது சொந்த மகளுடன் தகாத உறவு கொண்டு, அவரைக் குழந்தை ஒன்றுக்குத் தாயாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தகப்பன் ஒருவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கில், சந்தேகநபரும், தாயாக்கப்பட்ட பெண்ணின் தகப்பனுமான சாய்ந்த மருதைச் சேர்ந்த 60 வயது ஓட்டோ சாரதி கடந்த புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேக நபர் மீண்டும் பதில் நீதிவான் எம்.கே. பேரின்பராஜா முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி வரை தொடர்ந்தும் குறித்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பதில் நீதிவான் வழக்கை அந்தத் தினத்துக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, குறித்த சந்தேகநபரையும், சம்பந்தப்பட்ட அவரது மகள் மற்றும் பிறந்துள்ள குழந்தையையும் மரபணு பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், பதில் நீதிவான் பேரின்பராஜா பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

அத்துடன் குறித்த பெண் பிரசவத்தின் பின்னர் குழந்தையை வைத்தியசாலையில் கைவிட்டுச் சென்றுள்ளதால் குழந்தையை திருமலையிலுள்ள குழந்தைகள் பராமரிப்பு நிலையத்தில் சேர்ப்பதற்கான அனுமதியையும் வழங்கினார்.

குறித்த சந்தேகநபர், குற்றச்சாட்டை மறுத்துள்ள போதிலும், சம்பந்தப்பட்ட அவரது 23 வயது மகள் இருவருடகாலமாகத் தனது தகப்பன் தன்னுடன் தகாத உறவு கொண்டுவந்துள்ளதாகப் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-30)

# நடிகர் விஜயை அதிகம் தேடியுள்ள இலங்கையர்

*கூகுள் ஆய்வில் தகவல்*

கொழும்பு, டிசெ.25
இலங்கை மக்கள் அதிகளவில் கூகுள் என்ற இணையத் தேடு தளத்தின் ஊடாகப் பிரபல தென்னிந்திய நடிகர் மற்றும் பாடகர் விஜயை தேடியுள்ளனர்.

கூகுள் நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது. ஒவ்வொரு நாடுகளிலும் இந்தத் தேடு தளத்தை பயன்படுத்தி, யார் பற்றிய விவரங்களை அதிகளவில் மக்கள் தேடியிருக்கின்றார்கள் என்பது பற்றிய ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, இலங்கையர்கள் அதிகளவில் தென்னிந்தியத் திரைப்பட நடிகர் விஜய் பற்றிய விவரங்களையே தேடியுள்ளனர்.

குறிப்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ச, வசிம் தாஜுதீன் மற்றும் ரோசி சேனநாயக்க ஆகியோரை விடப் பெருமளவு இலங்கையர்கள் நடிகர் விஜயை தேடியுள்ளனர் எனக் கூகுள் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

இதேவேளை, உலக அளவில் அதிகளவில் தேடப்பட்டவர்களாக ஆர்ஜென்ரீனா கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி மற்றும் பிரபல மொடல் அழகி கிம் கெர்டிஸியன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். (த-வ)

# பனிக்கங்குளத்தில் ரயில் கடவை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,டிசெ.25
முல்லைத்தீவு பனிக்கன்குள கிராமத்துக்குச் செல்லும் ஒரே ஒரு பாதையான பனிக்கன்குள வீதியின் குறுக்காக உள்ள ரயில் தண்டவாளத்துக்கு ஒரு கடவையை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



தமது வீடுகளுக்குச் செல்ல ஒரேயொரு பாதையே உள்ளதாகத் தெரிவிக்கும் அந்தப் பகுதி மக்கள், தமது பாதையின் ஊடாகச் செல்லும் ரயில் பாதையில் கடவை அமைக்கப்படாததால் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதில் பாதிப்பை எதிர்கொள்வதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

மாணவர்கள் காலையில் பாடசாலை செல்லும் வேளையிலும், வீடு வரும் வேளையிலும் ரயில் செல்லும் நேரமாக இருப்பதால் தமக்கு அச்சமாக உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக ரயில் மோதி உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், தமக்கு உடனடியாக ரயில் கடவை அமைத்துத் தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பனிக்கன்குளம் கிராமத்தின் அமைப்புக்கள் பலவும் உரியவர்களிடமும், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபரிடமும், அரசியல் தலைவர்கள் பலரிடமும் தெரிவித்துள்ளபோதும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என குறித்த பகுதியைச் சேர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லாட்சியை முன்னெடுப்பதில் நீதிமன்ற முறைமை தடை

*ஆசிய மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டு*

கொழும்பு, டிசெ.25
நல்லாட்சியை முன்னெடுக்க நீதிமன்ற முறைமை தடையாக அமைந்துள்ளதாக ஆசிய மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர்ரணில்விக்கிரமசிங்கஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தக் கடிதத்தில் கூறப் பட்டுள்ளதாவது:-

பொலிஸ் நடவடிக்கைகள், தண்டனை விதித்தல் மற்றும் நீதி முறைமை போன்றன தொடர்பில் முன்வைக்கப்படும் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் சட்டத்துறை நீதித்துறையில் மாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற பெரியளவிலான குற்றச்செயல்கள் தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதற்கு சட்டம் மற்றும் நீதித்துறையில் நிலவி வரும் பிரச்சினைகளே காரணமாகும்.

நீதித்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு காண வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## அனைவருக்கும் ஒளிமயமான தினமாக அமையவேண்டும்

*வாழ்த்துச் செய்தியில் பிரதமர்*

கொழும்பு, டிசெ.25
அனைவருக்கும் ஒளிமயமாக, அர்த்தபூர்வமாக நத்தார் தினம் அமையவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அன்பு, தியாகம், அர்ப்பணிப்பு என்பவற்றின் மூலம் தெய்வீகத்தன்மை மற்றும் மனிதத்துவம் ஐக்கியப்படும் முறையை முழு உலகுக்கும் கற்றுக் கொடுத்த கர்த்தரின் பிறப்பைக் கொண்டாடும் மகிமை மிக்க நிகழ்வு நத்தார் ஆகும்.

விடுதலையின் பாதையைக் கற்றுத் தருவதற்கு, அன்பின்வாழ்க்கையை விளக்கித் தருவதற்கு மனிதராகப் பிறந்த தேவ புத்திரரின் பிறப்பை மிகவும் விமரிசையாகக் கொண்டாடும் நாம், அவருடைய வாழ்வின் முன்மாதிரி மூலம் எமது வாழ்வையும் கட்டியெழுப்ப முயற்சியெடுக்க வேண்டும்.

தற்கால சமூகம் வேண்டி நிற்பதும் இன, மத, பேதத்தைக் கருத்திற்கொள்ளாத சமாதானம், மகிழ்ச்சி நிறைந்த தெய்வீகத் தன்மை மற்றும் மனிதத்துவத்துடன் கைகோர்த்த நற்பண்புகள் மிகுந்த ஒரு சூழலையும். சட்டம், ஒழுங்கு மற்றும் நீதி நிலைநாட்டப்படும் சிறந்த ஒரு தேசத்தையுமாகும்.

அதற்காக வேண்டி ஒன்றுபட்டு, ஒரே மனதுடன் செயற்படுவது எமது கடமையாகும். இயேசுநாதர் அவர்களின் பிறப்பு இடம் பெற்ற நத்தார் தினத்தைக் கொண்டாடும் எம் அனைவருக்கும் அப்போதுதான் நத்தாரை அர்த்தபூர்வமானதாக மாற்றிக்கொள்ள முடியும்.

உங்கள் அனைவருக்கும் ஒளிமயமான, அர்த்த பூர்வமான நத்தார் தினமாக அமையவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்-என்றுள்ளது. (த-சி)

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நத்தார் தின வாழ்த்துக்கள்
திரேசா தளபாடம்
கதிரைகள், கட்டில்கள், மெத்தைகள், மேசைகள்,
பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள் என்பனவற்றை
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள


தொ.பே.021 222 7941
137, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Lakeland Inter-American School
முற்று முழுதான ஆங்கில மொழி (ENGLISH MEDIUM AMI Method) மூலம் முன்பள்ளிச் சிறார்களுக்கு எமது பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எமது பாலர் முன்பள்ளிக்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
எமது பாடசாலை செயற்பாடுகளாவன:-
- மழலைகள் தங்களது விருப்பத்திற்கு ஏற்ப செயல்படுதிறன்களையும் பழக்க வழக்கங்களையும் வேலைகளையும் புத்திசாதுரியமாக வெளிக்கொணர்தல்.
- பாலர் முன்பள்ளியில் கல்வியயிலும் பிள்ளைகள் தமது திறமைகளை வெளிக் கொணர்வதற்கும் தமது ஆற்றல்களை பெருக்குவதற்கும் சிறந்த களமாக அமைந்து, அறிவை பெருக்குதல்.
- பிள்ளைகளுக்குப் புத்திக்கூர்மை, சுதந்திரம், பொறுப்புணர்வு, கடமையுணர்வு ஆகியவற்றை எமது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் உதவியுடன் மகிழ்ச்சிகரமான சூழ் நிலையில் புகட்டுதல்.

உங்கள் பிள்ளைகளின் திறமைகளை வெளிப் படுத்துவதற்கும் வளர்ப்பதற்கும் உங்களின் தெரிவு எமதாகட்டும்.
உங்கள் நம்பிக்கைக்கான தெரிவு Lakeland Inter-American School.
விரையுங்கள் உங்கள் 2016 ஆம் ஆண்டுக்கான பதிவுகளுக்கு.
வயதெல்லை 2½ - 5½.
தொடர்புக்கு:-
No-154, Brown Road, Jaffna.
T.P No- 021 222 6242
aerolankajaf@gmail.com

A MEMBER OF
P.T.JOYAL
Manager
Jo Enterprises
MOUNT SPRING
Bottled Drinking Water

#23 Chapel Street, Jaffna
Mobile : 077 2543253
077 0755005

British College of Beauty Studies Olialakan Studio

இணைந்து
நடத்தும் பாடநெறிகள்
எங்கள் கல்லூரியில் என்ன விசேடம்?
01. வெளிநாடு செல்பவர்களுக்காக, சுயதொழில் செய்ய விரும்புபவர்களுக்காக O/L,AL எழுதிய மாணவர்களுக்காகவும் விசேடமாக 20 பாடநெறிகளை பெண்களுக்காகவே வழவமைத்துள்ளோம்.
02. அதிக புள்ளிகள் பெறுபவர்களுக்கு Awards, Certificate வழங்கப்படும். Tour அழைத்துச் செல்லப்படும்.
03. பண உதவி செய்து தரப்படும்.
04. ஒரு வகுப்பில் 10 மாணவர்கள் மட்டுமே.
எங்கள் கல்லூரியில் ஒருநாள்
அழகு கலைப் பயிற்சி பட்டறை இடம்பெற உள்ளது
இணைய விரும்புபவர்கள் தொடர்புகொண்டு
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
குறிப்பிட்டளவு மாணவர்களே இணைக்கப்படுவார்கள்
Alaris Lanka Private limited
British College of Beauty Studies
இவர்களும் இணைந்து நடத்துகின்றார்கள்
Palaly Road,
Thirunelvely Junction
076 701 1645

மணமகள்கள் தேவை
- 83 இல் பிறந்த 2இல் சூரியனும் செவ்வாயும் 49 ½ பாவமுடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 83 இல் பிறந்த 4இல் செவ்வாய் 47½ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 79 இல் பிறந்த 8இல் செவ்வாய் 116 ¾ பாவமுடைய அரசநிறுவனத்தில் பணிபுரியும் பட்டதாரி மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 84 இல்பிறந்த 2இல் செவ்வாய் 64½ பாவமுடைய தனியார் நிறுவனத்தில் பொறுப்பாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 44½ பாவமுடைய அரசநிறுவனத்தில் கிளாக்காக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 26¼ பாவமுடைய வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த 6 இல் சூரியனும் செவ்வாயும் 26 பாவமுடைய MSC இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த 10 இல் சூரியனும் செவ்வாயும் 29 பாவமுடைய பட்டதாரி ஆசிரியருக்கு படித்த மணமகள் தேவை.
- 81இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 11½ பாவமுடைய அரசநிறுவனத்தில் முகாமைத்துவ உதவியாளராக பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9இல் சூரியனும் செவ்வாயும் 41½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் சைவபோசன மணமகனுக்கு அரசபணி[illegible] மணமகள் தேவை.

தொடர்பு : கமலக்கண்ணன் திருப[illegible]
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, குடாவடி.
077 607 0862

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பதவி வெற்றிடம்

பூநகரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆளணியில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் விவரப்படியான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 09.01.2016 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர் பூநகரி, பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம், A-32 வீதி மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுய விவரங்களடங்கிய தெளிவான விண்ணப்பங்களைத் தபாலுறையிலிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

வயதெல்லை - 18 - 45

கூட்டுறவு சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

**பதவி 01 விற்பனை உதவியாளர் ( Sales Assistant)**

பதவிச் சம்பள குறியீட்டு இலக்கம் 308 / 15
சம்பள அளவுத்திட்டம் 13515- 110 x10- 120x10- 15812
(13/2015 இன்படி)

வெற்றிடம் - 1

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளத் திட்ட விற்பனை உதவியாளர் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த. (சாதாரணம்) எண்கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 06 (ஆறு) பாடங்களில் சித்தி.

**பதவி 02 விற்பனை உதவியாளர் ( Sales Assistant)**

பதவிச் சம்பள குறியீட்டு இலக்கம் 308 / 17
சம்பள அளவுத்திட்டம் 12800 - 100x10- 110x10- 10300
(13/2015 இன்படி)

வெற்றிடம் - 2

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஸ்ர தரச்சான்றிதழ்.

அல்லது

ஆ) 08 ஆம் வகுப்பு சித்தியுடன் விற்பனை அலுவல்கள் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**பதவி 03 சாரதி ( Driver)**

பதவிச் சம்பள குறியீட்டு இலக்கம் 312 / 14
சம்பள அளவுத்திட்டம் 13875 - 115x10- 125x10- 16275
(13/2015 இன்படி)

வெற்றிடம் - 1

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) 05 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் அல்லது லொறி அல்லது இழுவைப் பெட்டியுடன் டிராக்ரர் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு (04) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**பதவி 04 காரியாலய சேவகர் ( Karyala Karya Sahayaka)**

பதவிச் சம்பள குறியீட்டு இலக்கம் 317 / 16
சம்பள அளவுத்திட்டம் 13160 - 105x10- 115x10- 15360
(13/2015 இன்படி)

வெற்றிடம் - 1

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட பதவியொன்றில் ஒரு (01) வருடத்துக்கு குறையாத அனுபவத்துடன் 08 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்.

அல்லது

ஆ) 08 ஆம் வகுப்பு கல்விச்சான்றிதழ்.

**பதவி 05 கனினிப் பக்க உருவாக்குனர்**

பதவிச் சம்பள குறியீட்டு இலக்கம் 322 / 15
சம்பள அளவுத்திட்டம் 13515 - 110x10- 120x10- 15815
(13/2015 இன்படி)

வெற்றிடம் - 1

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி மற்றும் கணிதம்/ எண் கணிதம் உள்ளடங்கிய 6 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 3 மாதங்களுக்கு குறையாத முழுநேர Ms Office அல்லது அதனையொத்த கணினி பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்தமைக்கான தகைமைச் சான்றிதழ் [illegible] எதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஓராண்டுக்[illegible] செயல் அனுபவம்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்.

(63600)(11,15,18)


## அமெரிக்க இராஜதந்திரிகளின் இலங்கைப் பயணத்தில் சந்தேகம்

*ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு*

கொழும்பு,டிசெ.25
அமெரிக்க இராஜதந்திரிகளின் இலங்கைக்கான தொடர்பயணங்கள் சந்தேகத்துக்குரியவை. எனவே இந்தப் பயணங்கள் தொடர்பில் அரசு தெளிவுபடுத்தவேண்டும் என ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜதந்திரிகளின் தொடர் பயணங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசு மேற்கத்தேய நாடுகளின் சார்பு அரசியலையே மேற்கொண்டு வருகின்றது. எனினும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் பயணத்தையோஅல்லதுசர்வதேச இராஜதந்திரிகளின் இலங்கைப் பயணத்தையோ எம்மால் விமர்சிக்க முடியாது.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில், சர்வதேச தரப்பினர் வருகை தருவது பெரிய விடயம் இல்லை. ஆனால், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இராஜதந்திரிகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை மற்றும் அமெரிக்கப்பிரதிநிதிகளின்பயணம் சற்று அதிகமாகவே உள்ளன.

இலங்கையில் அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்துள்ளன எவ்வாறான உடன்படிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது தொடர்பில் அனைவர் மத்தியிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

ஆகவே இந்த விவகாரங்கள் தொடர்பில் அரசு தெளிவான விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகத்தை அரசே நிவர்த்தி செய்ய வேண்டும் என்றார். (த-ஐ-10)


**விற்பனைக்கு** தொடர்பு: 077 440 3087

NPHF xxxx இலக்க கூலர் வாகனம் விற்பனைக்கு உண்டு.

(e/28129)
(11,15,18)



**புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**புலோலி கிழக்கு பருத்தித்துறை**

கேள்வி கோரல் - வெதுப்பகம் குத்தகைக்கு வழங்கல்

சங்கம் தனக்கு சொந்தமான வெதுப்பகத்தை குத்தகைக்கு வழங்க தீர்மானித்துள்ளது, பெற்றுக்கொள்ள விரும்புவோர் சங்க நிபந்தனைகளுக்கு அமைவாக பெற்றுக்கொள்ளலாம். நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் சங்க பிரதம காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

கேள்வி கோரல் முடிவுதிகதி - 10.01.2016

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

பொதுமுகாமையாளர்
புலோலி ப.நோ.கூ.சங்கம்.



**விசேட பொதுக்கூட்டம்**
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. யாப்பு சீர்திருத்தம், நிதிசார் மூவர் குழுவின் அறிக்கை என்பன ஆராயப்படவுள்ளன.

அனைத்துப் பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(யாப்பு சீர்திருத்தப் பிரதிகளை
எமது சங்க அலுவலகத்திலும்
எமது இணையத் தளத்திலும் பார்வையிடலாம்)

செயலாளர்.

(சி/28126)
(11,15,17,18)


## நூற்றாண்டு மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.25
வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு மலர் வெளியீட்டு நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

ஓய்வுபெற்ற வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளில், பிரதம விருந்தினராக வடமாகாணசபைத்தலைவர் சி.வி.கே.சிவஞானமும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ் துறை தலைவர் எஸ்.சிவலிங்க ராஜா, கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப்பல்கலைக்கழக முன்னாள் வணிக பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா நிகழ்த்துவார். (த-ஐ-ரி2)

## ஒளிவிழா

சாவகச்சேரி,டிசெ.25
சாவகச்சேரி கத்தோலிக்க பங்கு மக்களின் கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

பங்குத்தந்தை அருட்திரு யோசேப் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெறும் இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் அருட்திரு கே.ஜேம்ஸ் சிங்கராயர் கலந்துகொள்வார். நிகழ்வில் இறை வழிபாடுகளுடன், கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (த-ஐ-9)


**ஆங்கில வகுப்புக்கள்** தொடர்பு: 077 252 8824

அனுபவம் மிக்க ஆசிரியரால் தரம் 6-11 [illegible] ஆங்கில வகுப்புக்கள். வீடுகளுக்கும் வந்து கற்பிக்கப்படும். சாவகச்[illegible] நகரசபைக்குட்பட்ட பகுதி [illegible] மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(66147)(11,15)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு** தொடர்பு: 077 348 4932

தடுப்பூசி ஏற்றப்பட்ட 60 நாள்கள் நிரம்பிய காலிகுயின், றோமன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌதீகவியல்,இணைந்த கணிதம், தமிழ்/ஆங்கிலமொழி வகுப்புக்கள்

### A/L - 2018, 2017, 2016

பிரபல கல்லூரிகளில் (3பிரபல தேசிய பாடசாலைகள் உட்பட) பல ஆண்டுகள் மேற்படி பாடங்களை கற்பித்த மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற ஆங்கில மொழிமூல விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் (தனிப்பட்டமுறையிலும்) மேற்படி பாடங்களை இரு மொழிகளிலும் ஏராளமான பயிற்சிகளுடன் (30 வருட A/L வினாத்தாள் உட்பட) மிகச்சிறப்பாக கற்பிக்கப்படுகின்றது. 2017,2016 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (2015repeat)


தொ.பே. 077 242 3400
077 887 1217
077 517 8727

ஆசிரியர் R. பாலசுப்பிரமணியம் B.Sc.PGDE
42/1, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(67042)(13.15)

# KANDY HOMES & Construction

நவீன வடிவமைப்புக்களில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்திர முறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.





81. Pallaly Road,
Illupaiyadi Junction,
Jaffna.

T.P :- 0777462889
0777463469
0217917623

Email :- kandyhomes11@gmail.com



உ
ஸ்ரீ ராம ஜெயம்
ஓம் ஆஞ்சநேயாய வித்மஹே
வாயு புத்ராய தீமஹி
தந்நோ ஹனுமந்தப் பிரசோதயாத்

## ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி விழா (சங்காபிஷேகம்)

### 09.01.2016 சனிக்கிழமை

### ஸ்ரீ ஜெயவீர பஞ்சமுக ஆஞ்சநேயர் (மூல விக்கிரகம்)

நிகழும் மங்களகரமான மன்மதவருடம், மார்கழித்திங்கள் 24ம் நாள் சனிக்கிழமை (09-01-2016) மூல நட்சத்திரமும் அமாவாசைத் திதியும் கூடிவரும் சுபதினத்தில் காலை 6.00 மணிக்கு கடல் தீர்த்தத்துடன் ஆரம்பித்து மு.ப. 9.00 மணிக்கு ஸ்ரீ ஹனுமன், ஸ்ரீ நரசிம்மர், ஸ்ரீ கருடாழ்வர்,ஸ்ரீ வராஹீஸ்வரர்,ஸ்ரீ ஹயக்ரீவர் ஆகிய பஞ்சமுகங்களினால் மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் (மூலவர்) ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயப் பெருமானுக்கு அதிவிஷேட சங்குத் திரவியங்களைக் கொண்ட 409 வலம்புரிச்சங்கினால் அபிஷேகம் நடைபெறும். முறையே விஸ்வரூப தரிசனம் எஜமான அனுக்ஞை, சங்கல்பம் புண்யாகவாசனம், நவகலச பூஜை, ஹோமம், பூர்ணாகுதி அதனைத்தொடர்ந்து விஷேட ஆராதனைகளுடன் உச்சிக்கால பூஜை விஷேசமாக நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் சிறப்பாக நடைபெறும். மாலை 5.00 மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயருக்கு விஷேட வடைமாலை அலங்காரம், குரு பாத பூஜை, திருவூஞ்சலுடன் உற்சவ அருட்காட்சி நடைபெற்று இராப் போசனமும் வழங்கப்படும்.

**கிரியகால உற்சவம்.** **முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.**

| திகதி | கிழமை | உற்சவம் | ஆரம்பநேரம் | நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 29.12.2015 | செவ்வாய் | ஸ்ரீ மகா கணபதி ஹோமம் | 9.00 காலை | ஆயிலியம் |
| 30.12.2015 | புதன் | நவக்கிரக ஹோமம் | 9.00 காலை | மகம் |
| 31.12.2015 | வியாழன் | சிவன் பார்வதி பூஜை | 9.00 காலை | பூரம் |
| 01.01.2016 | வெள்ளி | ஸ்ரீ இராமர், இலட்சுமணர், சீதா, ஸ்ரீ ஆஞ்சநேயர் பூஜை | 9.00 காலை | உத்தரம் |
| 02.01.2016 | சனி | ஸ்ரீ தன்மந்திரி ஹோமம் | 9.00 காலை | அத்தம். |
| 03.01.2016 | ஞாயிறு | சுதர்சன ஹோமம் | 9.00 காலை | சித்திரை |
| 04.01.2016 | திங்கள் | ஸ்ரீ முருகன், ஸ்ரீ வள்ளி, ஸ்ரீ தெய்வானை பூஜை | 9.00 காலை | சுவாதி |
| 05.01.2016 | செவ்வாய் | ஸ்ரீ நாகபூசனி, ஸ்ரீ மகா காளி, ஸ்ரீ வைரவர் பூஜை | 9.00 காலை | விசாகம் |
| 06.01.2016 | புதன் | ஸ்ரீ துர்க்கா, ஸ்ரீ இலட்சுமி, ஸ்ரீ சரஸ்வதி, குபேரன் பூஜை | 9.00 காலை | விசாகம் |
| 07.01.2016 | வியாழன் | ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் பூஜை | 9.00 காலை | அனுசம் |
| 08.01.2016 | வெள்ளி | தேர்திருவிழா - இரத பவனி உற்சவம் | 7.00 காலை | கேட்டை |

**09.01.2015 சனி ஜெயந்தி விழா** - காலை 6.00 மணிக்கு கடல் தீர்த்தத்துடன் ஆரம்பித்து முற்பகல் 9.00 மணிக்கு 409 வலம்புரி சங்குகளினால் சங்காபிஷேகமும், விசேஷ பூஜையும் நடைபெறும். மலை 5.00 மணிக்கு பஞ்முக ஆஞ்சநேயருக்கு விஷேட வடைமாலை அலங்காரம், குருபாதை பூஜை திருவூஞ்சலுடன் உற்சவ அருட்காட்சி நடைபெறும்.

**12.01.2016 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு வைரவர் மடை நடைபெறும்.**

இத்தினங்களில் பகலில் அன்னதானம் வழங்கப்படும்.

அடியார்கள் இயன்றயளவு பால், தயிர், இளநீர், பூக்கள், வில்வமிலை, துளசி, வேப்பிலை, மாவிலை, நெய், தேன் மற்றும் அன்னதான பொருட்களை ஆலயத்தில் சமர்பிக்கலாம்.

**கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பூஜை பதிவு செய்யலாம்**


## ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயம்

3/11, ஸ்ரீ போதிருக்காராம வீதி (விகாரை லேன், வெள்ளவத்தை) களுபோவில, தெஹிவளை.
தொலைபேசி இல. 011 2 726 444
Web – www.anjayaneyar.com | Email – anjatemp@sltnet.lk




சாமியே சரணம் ஐயப்பா!

## சகல சௌபாக்கியங்களையும் வாழ்க்கையில் கிடைக்கச் செய்யும் ஐயப்ப சுவாமியின் அருள்மகிமை பற்றி காரை மணி கண்டன்



எங்கும் எதிலும் எப்போதும் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சபரிமலை ஐயப்பன் சாமி வேண்டுவார் வேண்டுவதைக் கொடுக்கின்ற தனிப்பெரும் தெய்வம். நாங்கள் போற்றித் துதிக்கும் ஐயப்பனின் அருளுக்கு எல்லையே இல்லை. புலிப்பால் கொண்டுவந்து புதுமை மிகு அற்புதம் செய்தருளுகின்ற அதிஉயர்ந்த தெய்வம். ஆனந்தத்தை அள்ளித் தந்திடும் அன்புத் தெய்வம்.

இதுவரை காலமும் இலைமறை காயாக இருந்த இந்த ஐயப்பன் வழிபாடு இப்போது உத்வேகம் கொண்டுள்ளது. "சரணம் ஐயப்பா! சாமியே சரணம் ஐயப்பா!" என்ற பக்தி ரசம் ததும்பும் கோஷம் செல்லுமிடமெங்கும் கேட்கின்றது. சபரிமலை ஐயப்பனின் அருட் கடாட்சம் எங்கும் பரந்து விரிந்து பரவத் தொடங்கியுள்ளது. விரத காலத்தில் வீதி வழியாகப் போகும் போதும் வரும்போதும் ஐயப்பனின் மாலை அணிந்து நோன்பிருக்கின்ற அடியார்கலைக் காண்கின்றோம். எங்கள் வழிபடு தெய்வமான ஐயப்பனின் தூய திருவருட் கடாட்சம் வெளிக்கொணரப்பட்டுள்ளது எங்கள் மனதுக்கு மிகுந்த திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றது.

மானிட சமுதாயத்தில் உண்மையும் நேர்மையும் மிகவும் அவசியமானது. காலச்சக்கரமானது உருண்டோடுவது போல மனிதனுக்கு இன்பமும் துன்பமும் மாறி மாறி வருகின்றன. இஃது உலக நியதியாகும். இன்பத்தைக் கண்டு மகிழ்வதும் துன்பத்தைக் கண்டு துவளுவதும் மனிதனுடைய இயற்கை சுபாவமாகும். கஷ்டத்திலும் கவலையிலும் கிடந்து உழலும் மனிதனுக்கு நிம்மதியும் நித்திரையும் கட்டாயத் தேவையாகும். இந்த அத்தியாவசிய தேவையை நிறைவேற்றி வைக்கின்ற ஓர் உன்னதமான உயரிய தெய்வம் எங்களது ஐயப்பன் சாமியே! எங்களுடைய வாழ்க்கையில் ஆறுதலும், தேறுதலும் தருகின்ற உண்மைத் தெய்வமும் ஐயப்பனேயாவான். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக மிளிர்கின்ற தனிப்பெருங்கடவுள் ஐயப்பனே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

உண்மையான நம்பிக்கையுடன் கைத்தொழுபவர்களை ஐயப்பன் ஒரு போதும் கைவிடமாட்டான். எமது வாழ்க்கை வளம்பெற ஐயப்பனின் விரதம் நோற்கும் அடியார்கள் குறைந்தது 41 நாள் விரதங்காக்கவேண்டும். சபரிமலைக்குப் பலமுறை யாத்திரை சென்று வந்த ஐயப்பசாமிப் பக்தர்களில் ஒருவரைக் குருவாக ஏற்றுக்கொண்டு அவரது திருக்கரங்களால் மாலை அணிய வேண்டும். அல்லது தாய்தந்தையர் மூலமாக மாலை அணிந்து கொள்ளலாம்.

மாலை அணிந்தவர்கள் குருசாமியை முழுமனதுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். "சாமியே சரணம் ஐயப்பா!" என்ற தாரக மந்திரத்துக்கு அமைய நடந்துகொள்ள வேண்டும். ஐயப்ப விரதம் இருப்பவர்கள் முதலாவதாக கறுப்பு நிறத்திலேயே ஆடை அணிய வேண்டும். அதுதான் சிறப்பு மிக்கது. பின்னர் விரத காலம் கடந்து அடுத்தடுத்த வருடங்களில் பச்சையோ அல்லது மஞ்சள் நீலமோ என்று ஏதாவது ஒரு நிற ஆடையை மட்டுமே அணிந்து கொள்ளுதல் வேண்டும்.

அத்துடன்

ஐயப்பமாலை அணிந்து மலைக்குச் செல்பவர்களை ஒருக்காலும் தடுத்து நிறுத்தக் கூடாது. தர்மசாஸ்தா சொற்படி கேட்டு நடத்தல் வேண்டும். இம்மியளவும் கொஞ்சம்கூட ஒழுக்கம் தவறவே கூடாது. ஐயப்பன் விரதகாரர் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியது பிரம்மச்சாரியமாகும். தினசரி நீராடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து நெற்றியிலே திருநீறு தரித்து காலையும் மாலையும் ஐயப்பனை நினைந்து பக்தியுடன் வழிபாடியற்றுதல் வேண்டும்.

மேலும் இந்த ஐயப்ப விரதகாரருக்கு ஆலய வழிபாடு மிகவும் முக்கியமானது. தீய எண்ணங்கள் ஆகாது. அதை மறந்தே விடவேண்டும். உடலில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதும் முக சவரஞ்செய்வதும் தங்கநகைகள் அணிவதும் காலணிகள் போடுவதும் தவிர்க்கப்பட வேண்டும். இது மிகவும் முக்கியம்.

அதுமட்டுமன்றி நவக்கிரகங்களின் செய்பாட்டையும் தீய விளைவுகளையும் முற்றாகத் தகர்த்தெறியும் அதீத சக்தி படைத்தவன் ஐயப்பன். நவக்கிரகங்களிலேயுள்ள சனீஸ்வரன் கூட ஐயப்ப விரதகாரர்களை அணுகமாட்டார். இது முற்றிலும் உண்மையே! இதனாலேயே ஐயப்ப விரதம் காப்பவர்கள் கறுப்பு நிறத்திலான ஆடை அணிய வேண்டுமென நம்முன்னோர் விதித்திருக்கின்றார்கள். ஆகவே வாழ்க்கைக்கான அனைத்து ஐஸ்வரியங்களையும் தரும் ஐயப்பனின் திருவடிகள் பணிந்து இவ்வுலகில் நலமுடன் வாழ வழிவகுப்போமாக.

கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம் - சமாதான நீதிவான்
காரை மணிகண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
1935.04.03

மறைவு
2015.11.26



## அமரர் சிவகுரு விநாயகசுந்தரம்
(ஊமையப்பா)

கடந்த 26.11.2015 வியாழக்கிழமை சிவபத மடைந்த அன்புக்கும் பாசத்துக்குமுரிய அமரர் சிவகுரு விநாயகசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.12.2015) சனிக் கிழமை காலை 5 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கடற்கரையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வி லும் அன்னாரின் வீட்டுக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்**

நடராசா வீதி,
வல்வெட்டித்துறை.

**குடும்பத்தினர்.**




*நல்லபோராட்டத்தைப் போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தை காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது.*
*(II தீமோ 4:7-8)*

# 31 ஆம் நாள் நினைவு நினைவஞ்சலி ஆராதனை

பூமியில்
14
.
01
.
1936

மகிமையில்
24
.
11
.
2015



## போதகர் ஜோர்ச் (பொபி) அரியராஜா அரியநாயகம்
*(இயேசு நிலையம் உடுப்பிட்டி திருச்சபை ஸ்தாபகர்)*

அன்னாரின் பிரிவு துயரில் மூழ்கியிருந்த வேளை எம்மை தன்னுடைய அன்பாலும், உதவிகளாலும், ஜெபத்தாலும் தாங்கிய எமது உள்நாட்டு, வெளிநாட்டு உறவுகள், நண்பர்கள், நலன்விரும்பிகள், வடமராட்சி யாழ் மாவட்டம் மற்றும் இலங்கையில் உள்ள கிறிஸ்தவ போதகர்கள், விசுவாசிகள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.


I have fought the good fight, I have finished the race, and I have remained faithful, and now the prize awaits me - the crown of Rightteusnees...
(2 Timothy 4:7-8)

Remembering the life, service and ministry of pastor george (Bobby) Ariyarajah Ariyanayagam (1936 - 2015), Founding Pastor, Yesu Nilayam
Udupiddy - 31 st day Remembrance and Thankgiving on 25th Dec, 2015.
The family of Pastor George (Bobby) Ariyanayagam and the Church at Yesu Nilayam. Udupiddy wish to thank all relatives, Friends, well wishers and the Christian Community of Pastor and Believers in the Vadamarachy region, Jaffna District, Srilanka and Abroad for their love, prayers, sympathy wishes and help during this time of bereavement.

**போதகர்.ஜோர்ச் அரியராஜா அரியநாயகம் குடும்பத்தினர்.**
**இயேசு நிலையம் திருச்சபையார்.**


## வருடாந்தம் 5 லட்சம் மெற்றிக் தொன் பிளாஸ்ரிக்,பொலித்தீன்கள் இறக்குமதி

கொழும்பு,டிசெ.25
வருடாந்தம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப் படும் 5 லட்சம் மெற்றிக் தொன் பிளாஸ் ரிக் மற்றும் பொலித்தீன்களுள் 2




லட்சத்து 10 ஆயிரம் மெற்றிக்தொன்கள் வரை கழிவுப்பொருள்களாகச் சுற்றாடலில் சேர்வதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட ஆய் வொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்த ஆய்வின் பிரகாரம், சுற்றாடலில் சேரும் பொலித்தீன் வகைகள் உக்கிப் போவதற்கு 500-1000 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தேவை.
இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்களில் நூற்றுக்கு 70 வீதமானவை நாட்டுக்குள் பயன்படுத்தப்படுவதோடு, ஏனைய 30 வீதம் மீளவும் வேறு உற்பத்திகளாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.
இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்ரிக் மற் றும் பொலித்தீன்களில் 40 ஆயிரம் மெற் றிக்தொன் கொண்ட பொலித்தீன்களில் ஒரு பகுதி மீளுரு வாக்கத்துக்கு உள்ளாக் கப்படுகின்றன.
அத்துடன் இலங்கைக்கு இறக்குமதி செய் யப்படும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித் தீன் களில் பிரதானமானவைகளாக ஐஸ்கிறீம், யோக்கட் கப்கள் மற்றும் லஞ் சீற்றுக்கள் பயன்பாட்டில் உள்ளன.
இந்த நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைவாக 20 மைக்கோனுக்குக் குறைந்த பொலித் தீன் பாவனைக்குத் தடை விதிக் கும் சட்டம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கடுமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ -22)


# மறைந்தாலும் மறக்க முடியாது மனத்திரையில் மலரும் எண்பத்தி மூன்றாவது பிறந்த நாள்

உ
ஸ்ரீ வாராஹி அம்பாள் துணை

1932-12-25



2015-12-25

## அமரர் சுப்பையா நல்லையா (சின்ன மாம்பழம்) அவர்கள்

பிறப்பிடம்: கொக்குவில்
வசிப்பிடம்: 'வெண்மதி' ஆனைக்கோட்டை

ஐயனே!
தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் காலக் குதிரையின் ஓட்டம் எண்பத்திரண்டாவது மைல் கல்லுடன் நின்று விட்டதே! 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற நியதிக்கேற்ப வாழ்ந்து வாழ்க்கைச் சரித்திரத் திற்கு முகவுரை, முடிவுரை எழுதி நிறைந்து விட்டீர்களே. தங்கள் பொற்கரம் பிடித்த காலம் முதல் ஆண்டு தோறும் வந்து சென்ற தங்கள் பிறந்த நாள்களின் பசுமை நினைவுகளை என் நெஞ்சம் மறக்கவில்லையே!

வையகம் எங்கும் கொண்டாடும் இறைமகன் இயேசுபிரான் வந்துதித்த இப்பொன்னாளில் தாங்களும் நம் தாய் மண்ணில் மாதாமடி வந்தடைந்தீர்கள். தங்களை மனக் கோவிலில் வைத்து வணங்கும் நம்புதல்விகள், மருமக்கள், வம்ச முத்துக்கள், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் தங்கள் பிறந்த நாளாகிய இன்று தங்களை மானசீகமாக நினைவு கூர்ந்து பிறந்தநாள் வாழ்த்துக் கூறுகிறார்கள் நம் இல்லத் தலைவரே!

என் அன்புத் தெய்வமாகிய இனிய கணவருக்கு விழிமலர்களில் நீர் ததும்ப, இதயம் விம்ம அன்பு மனைவி இந்திராவும் பிறந்தநாள் வாழ்த்துக் கூறுவது செவிமடலில் கேட்கிறதா அப்பனே!

மறுபிறவி என்பது நிஜமானால் பத்துமுறை பிறந்தாலும் உங்கள் பக்கத்துணையாக நான் அமைய அருள்மிகு அம்பிகை ஸ்ரீ வாராஹி நல்வரம் தருவாள் அன்பின் வடிவே!

ஓம் சக்தி! ஓம் வாராஹியே போற்றி!

தகவல்
திருமதி இந்திராணி நல்லையா
'வெண்மதி' ஆனைக்கோட்டை
25.12.2015


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.இராமச்சந்திரனின் 28ஆவது நினைவு தினம்

யாழ்ப்பாணம்,டிசெ.25
தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்தியப் பிரபல நடிகருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 28 ஆவது நினைவு தினம் நேற்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.



யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு, எம்.ஜி.இராமச்சந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ். எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்துத் தீபம் காட்டி அஞ்சலி செலுத்தினார். அதனைத் தொடர்ந்து கல்வியங்காடு வர்த்தக சங்கத் தலைவர் ஆ.கேதீஸ் மற்றும் வர்த்தகர் சங்க முன்னாள் தலைவர் ரவி ஆகியோரும் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.
இந்த நிகழ்வில் வர்த்தகர்கள் எம்.ஜி.ஆர் ரசிகர்கள் என பலர் கலந்து கொண்டு எம்.ஜி இராமச்சந்திரனுக்கு அஞ்சலி செலுத்தினர். (த-ஐ-10)

# ரயிலுடன் ஓட்டோ மோதியதில் படுகாயமடைந்த இளைஞர் சாவு

சாவகச்சேரி, டிசெ. 25
மீசாலைச் சந்தியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் இடம்பெற்ற ரயில் – ஓட்டோ விபத்தில் காயமடைந்த இளைஞன் 11 தினங்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் சாவடைந்தார்.
கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற ரயில் மீசாலைச் சந்தியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடந்த வேளையில் ஓட்டோ ரயிலுடன் மோதியதில் இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.
அவர் 11 தினங்களின் பின்னர் நேற்றுச் சிகிச்சை பயனின்றி சாவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். மரணம் தொடர்பாக திடீர் சாவு விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார்.
மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை – பிரசன்னா (வயது 22) என்னும் இளைஞனே சாவடைந்தவராவார்.
மீசாலை – புத்தூர் சந்தியில் கடை வைத்துள்ள இவர் காலையில் மீசாலையில் உள்ள ஆலயமொன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பும் போது விபத்து இடம்பெற்று பலத்த காயங்களுக்கு இலக்கானமை குறிப்பிடத்தக்கது. விபத்தில் ஓட்டோ பலத்த சேதமடைந்தது. (த-9)

# புற்றுநோயாளருக்கு அன்பளிப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் புற்றுநோயாளர்களுக்கான அன்பளிப்பு வழங்கல் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கானை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் தலைவர் க.புஸ்பராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக யாழ் றோட்டரிக் கழகத் தலைவர் சி.அனுராஜும் கலந்து கொள்வர். (த-ஐ-10)

# காப்பெற் வீதியாக மாறும் அச்சுவேலி பிரதான வீதி

யாழ்ப்பாணம்,டிசெ.25
அச்சுவேலி, தம்பாலை, வளலாய் பிரதான வீதியை காப்பெற் வீதியாக மாற்றியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த வீதி காப்பெற் வீதியாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது.
வீதி அபிவிருத்தி அதிகார சபையினரால் இந்தப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
வீதியின் புனரமைப்புக்கான இயந்திர வசதிகள் மற்றும் காபெற்றுக்கான பொருள்கள் என்பன கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.
முன்னர் தார் வீதியாகவும் போக்குவரத்து செய்யமுடியாமலும் இருந்த இந்த வீதி சேதப்பட்டும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(த-ஐ-17)

# அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ. 25
கிளிநொச்சி, இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிபரை நியமிக்கும்படி கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர், 2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து இதுவரை அதிபர் நியமிக்கப்படவில்லை.
இப்பாடசாலையில் 316 மாணவர்களும் 23 ஆசிரியர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.
(த)

# கடற்றொழிலாளர்களுக்கு கஞ்சா கொடுத்தவர் கைது

## கெற்பேலிக் கடற்கரையில் சம்பவம்

சாவகச்சேரி,டிசெ.25
கடற்றொழிலாளர்களுக்கு போதைப் பொருளான கஞ்சா கொடுக்கச் சென்ற மற்றொரு கடற்றொழிலாளியை மறைந்திருந்த சாவகச்சேரி பொலிஸார் கைது செய்ததுடன் அவரிடமிருந்து 4 கிராம் கஞ்சாப் பொதியையும் கைப்பற்றினர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலி கடற்கரையில் இடம்பெற்றது.
தினமும் சாவகச்சேரிச் சந்தைக்கு கடல் உணவு கொண்டு வரும் கெற்பேலிப் பகுதிக் கடற்றொழிலாளர்கள் மதுபோதையில் காணப்படுவது குறித்து சாவகச்சேரிப் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்படவே அந்தப் பகுதி கடற்றொழிலாளர் ஒருவருடன் பழகி விசாரித்தபோது கஞ்சா விநியோகம் தொடர்பாக அறிந்துள்ளனர்.

> “சாவகச்சேரிப் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்படவே அந்தப் பகுதி கடற்றொழிலாளர் ஒருவருடன் பழகி விசாரித்தபோது கஞ்சா விநியோகம் தொடர்பாக அறிந்துள்ளனர்.”

இதனையடுத்து நேற்று முன்தினம் மாலை சிவில் உடையில் சென்ற பொலிஸார் அங்கு காத்திருந்து, கடற்றொழிலாளர்களுக்கு கஞ்சா விநியோகம் செய்யும் நபர் கடற்கரைக்கு வந்தவேளையில் சோதனையிட்டபோது கஞ்சா வைத்திருந்தமை கண்டு அவரைக் கைது செய்ததுடன் அவரிடமிருந்து கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர். (த-ஐ-9)

# டைனமற் பாவித்த மீனவர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,டிசெ.25
புங்குடுதீவுக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட டைனமற் வெடிமருந்தைப் பாவித்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மீனவரை ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணை, மற்றும் 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்ல ஊர்காவற்றுறை நீதிவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று முன்தினம் அனுமதியளித்தார்.
கடந்த 18ஆம் திகதி டைனமற் பாவித்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் புங்குடுதீவு கடற் பரப்பில் வைத்து குருநகர் பகுதியைச் சேர்ந்த மீனவரைக் கடற்படையினர் கைது செய்து யாழ். கடற்றொழில் நீரியல் வளத் துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.
இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது. நீதிவான் பிணையில் செல்ல அனுமதியளித்தார்.
(த-ஐ-107)

# படம் மாறிப் பிரசுரம்





உதயனில் நேற்று முன்தினம் புதன்கிழமை 8 ஆம் பக்கத்தில், சிவில் பாதுகாப்புப் பிரதிநிதிகள் முன்மாதிரியாக திகழவேண்டும் என்ற செய்தியில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சத்தியசீலனின் படம் பிரசுரமாகியிருக்கவேண்டும். ஆயினும் தொழில்நுட்பத் தவறு காரணமாக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனின் படம் அந்த இடத்தில் பிரசுரமாகியுள்ளது. இதில் முதல் படத்தில் உள்ளவரே கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபராவார். இரண்டாவது படத்தில் உள்ளவர் போக்குவரத்து அமைச்சின் செயலாளர். தவறுக்கு வருந்துகின்றோம். (த)

# பனை வெல்ல உற்பத்தி 2016 இல் அதிகரிக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.25
2016 ஆம் ஆண்டில் பனை வெல்லத்தின் உற்பத்தியை அதிகரிக்க வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தீர்மானித்துள்ளதாக சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூர் உற்பத்தியாக பனை வெல்லத்தின் பயன்பாட்டை மக்கள் மத்தியில் அதிகரிக்கப் பனை வெல்லத்தின் உற்பத்தி 2016 ஆம் ஆண்டில் அதிகரிக்கப்படவுள்ளது.
இந்த வருடம்; பனை வெல்லத்தின் உற்பத்தி குறைவாகவே மேற்கொள்ளப்பட்டது. எனினும் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லத்தின் விற்பனை கூடுதலாக இடம்பெற்றது. அதனை மக்கள் அதிக ஆர்வத்துடன் பெற்றுப் பயனடைந்தனர்.
இதன் காரணத்தால் பனை வெல்ல உற்பத்தியை மேலும் அதிகரிக்க சமாசம் தீர்மானித்துள்ளது.
முன்னர் குறிப்பிட்ட சில பனை தென்னைவளச் சங்கங்களே இந்தப் பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டன. 2016 ஆம் ஆண்டில் மேலும் சில சங்கங்கள் பனை வெல்ல உற்பத்தியில் ஈடுபடவுள்ளன.
(த-ஐ-17)

# 35 லட்சம் ரூபா நிதியில் பாடசாலைக் கட்டடங்கள்

சாவகச்சேரி,டிசெ.25
தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில் 35 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அதிபரின் அலுவலகம் உள்ளிட்ட [illegible] தொகுதி வேலைகள் [illegible] யடையும் நிலையில் உள்ளன.
ஏற்கனவே தளப் பகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் [illegible] அபிவிருத்தி கொடைத் திட்டத்தில் இந்த வருடம் ஒதுக்கப்பட்ட நிதியில் மாடிக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஊடகவியலாளர் மீது வவுனியாவில் தாக்கு

வவுனியா,டிசெ.25
வவுனியா, தர்மலிங்கம் வீதியில்செய்திசேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் மீது, வர்த்தக நிலையம் ஒன்றில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-
வவுனியா, தர்மலிங்கம் வீதியில் போக்குவரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் விளம்பரங்கள், கொட்டகைகள் அமைத்து வியாபாரம் மேற்கொண்டவர்களை வவுனியா நகர சபை அகற்றியுள்ளது.
இதன்போது குறித்த சம்பவங்களைப் பதிவு செய்து செய்தி சேகரிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊடகவியலாளர் ஒருவர் மீது வர்த்தக நிலையத்தில் பணியாற்றும் நபர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.
இதன் போது குறித்த ஊடகவியலாளரின் புகைப்படக் கருவியும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், ஊடகவியலாளர் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலி ஒன்றும் காணாமற் போயுள்ளது.
இதனையடுத்து, நகரசபை உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பொலிஸார் ஆகியோரினால் தாக்குதலாளிகளிடம் இருந்து பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
பாஸ்கரன் கதீசன் என்ற ஊடகவியலாளரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவராவார்.
இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.
(த-ஐ-402)

## மக்கள் போசாக்கை பேண செயற்குழுக்கள் அமைப்பு

அச்சுவேலி,டிசெ.25
பொதுமக்களின் போசாக்கு நிலையை உயர்நிலையில் பேணுவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு போசாக்குக்கான செயற்குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.
இந்தப் போசாக்குக்கான செயற்குழுக்கள் ஜனாதிபதியின் வழிப்படுத்தலுக்கு அமைய, மாவட்ட, பிரதேச செயலர் பிரிவு, கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் நிறுவப்பட்டு வருகின்றன.
நாடளாவிய ரீதியில் பொது மக்களின் போசாக்கு நிலையை மேல்நிலைப் படுத்தல், போசாக்கு உணவு வகைகளை உட் கொள்ளல், தொற்றா நோய்கள் மற்றும் தொற்று நோய்களில் இருந்து மக்களை பாதுகாத்தல் போன்ற நடைமுறை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் போசாக்குக்கான செயற்குழுக்கள் ஈடுபடவுள்ளன.
மாவட்ட, பிரதேச செயலக, கிராம அலுவலர் பிரிவு மட்டத்திலான போசாக்குக்கான செயற்குழுவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், உள்ளூர்ப்பிரமுகர்கள் இடம் பெறுகின்றனர். (த-ஐ-11)

# நாகர்கோவிலில் விடுவித்த காணிகள் புனரமைப்பதற்கு ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.25
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் விடுவிக்கப்பட்ட 90 ஏக்கர் நிலப்பரப்பை துப்புரவு செய்வதற்கு 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
விடுவிக்கப்பட்ட இந்த நிலப்பரப்பில் கண்ணி மற்றும் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
இதனை அடுத்து இந்த நிலப்பரப்பைத் துப்புரவு செய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சு 2.5 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தற்போது இந்த நிலப்பரப்பு முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்ட பின்னர் உரிய மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

> இந்த நிலப்பரப்பைத் துப்புரவு செய்வதற்கு மீள்குடியேற்ற அமைச்சு 2.5 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இந்த நிலப்பரப்பு பயிர்ச்செய்கை, மக்கள் மீள்குடியமர்வு இன்றிப் பற்றைகள் அடர்ந்து வளர்ந்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.
(த-ஐ-17)



# ஆபத்தான குழியை மூடுமாறு கோரிக்கை

கிளிநொச்சி,டிசெ.25
கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் இருந்து கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள பாலத்தின் முன்னால் காணப்படும் ஆபத்தான குழியை மூட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பிரதேச மக்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ 9 வீதியில், இரணைமடுச் சந்தியில் இருந்து கனகாம்பிகை அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள பாலம், முன்னால் வீதியின் மையப் பகுதியில் காணப்படும் ஆபத்தான குழியை உடன் மூட வேண்டும்.
இந்தப் பாலத்துக்கு அண்மையில் ஒரு சிறுவர் இல்லம் உள்ளதுடன், குறித்த பாதையின் ஊடாக தினமும் பல ஆயிரக்கணக்கான மக்களும், நூற்றுக்கணக்கான படையினர் மற்றும் அரச அதிகாரிகளும் பயணிக்கின்றனர்.
இருப்பினும் இந்தப் பாலத்தின் முன்னால் ஏற்படும் இந்தக் குழி தொடர்பில் எவரும் உரிய நடவடிக்கையை இது வரைக்கும் மேற்கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டும் பிரதேச மக்கள் இடர் ஏதும் நிகழ்வதற்கு முன்பு இதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
(ஐ-101)

## மாணவன் காயம்

பளை,டிசெ.25
பிரதான பாதையொன்றில் போடப்பட்டிருந்த முட்கிளுவைக் குவியலுக்குள் சைக்கிள் சிக்கியதில் மாணவர் ஒருவர் காயங்களுக்கு இலக்கானார்.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை பளை மாசார் பாடசாலை வீதியில் இடம்பெற்றது.
ரியூசனுக்கு சென்று விட்டு திரும்பிய குறித்த மாணவன் எதிரே வந்த வாகனத்துக்காக, வீதியோரம் சைக்கிளைச் செலுத்தியபோது அங்கு குவிக்கப்பட்டிருந்த முட்கிளுவைக் கழிவுக்குவியலுக்குள் சைக்கிள் சிக்கி வீழ்ந்துள்ளார்.
முட்கள் குத்தப்பட்டு சைக்கிள் சில்லுகள் சேதமடைந்ததுடன் முட்களுக்கு மேல் வீழ்ந்ததில் மாணவனின் உடலின் பல இடங்களில் முட்கள் குத்தி காயம் விளைவித்துள்ளன.
பாதிப்புக்குள்ளான மாணவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
(த-ஐ-9)

## யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்புக்கு விண்ணப்பம்

அச்சுவேலி,டிசெ.25
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி கலைமாணி பட்டப் படிப்புக்கு (புதிய பாடத்திட்டம்) தகுதியானவர்களைத் தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களைப் "பல்கலைக்கழக திறந்தமற்றும்தொலைக்கல்வி நிலையத்தில்'' பெற்றுக் கொள்ளலாம்.
ஜி.சி.ஈ. உயர்தர பரீட்சை 2013 அல்லது அதற்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தி அடைந்திருப்பதுடன், பொது அறிவுப் பாடத்தில் 30 வீதமான புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள் அல்லது தேசியக் கல்வியியல் கல்லூரியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்கள் அல்லது ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பயிற்றப்பட்ட அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் அல்லது பல்கலைக்கழக மூதவையால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய மேற்குறித்த தகைமைகளுக்கு தொடர்புடைய அல்லது சமமானது எனக் கருதப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக உதவிப் பதிவாளர் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். (த-ஐ-11)

# கவனிப்பாரின்றி இருந்த பஸ் நிலையம் ரூ. ஒரு மில்லியன் நிதியில் புனரமைப்பு

நீண்ட காலமாக கவனிப்பாரின்றி குன்றும் குழியுமாக இருந்த பளை பஸ் நிலையம் ஒரு மில்லியன் ரூபா செலவில் கல்லுப் போட்டு தார் ஊற்றிச் செப் பனிடப்பட்டுள்ளது. இதனால் சிரமத்துடன் நடமாடிய மக்கள் தற் பொழுது நிம்மதியுடன் தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர்.
கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசத்தல் பளை நகரில் அமைக்கப்பட்டிருந்த பஸ் நிலையம், மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பின்னர் கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் மாடிக் கட்டடமாகக் கட்டப்பட்டிருந்தது.
இந்த நிலையில் பஸ் நிலையத்தைச் சுற்றிய பகுதி குண்டும் குழியுமாக இருந்ததால், மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று பயணிகளுக்கு மட்டுமல்ல வாகனப்போக்குவரத்துக்கும் இடையூறாக இருந்தது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளானார்கள்.
பஸ் நிலையத்தில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் பிரதேச சபை செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்த பொதுமக்கள் பயணிகளின் நலன் கருதி பஸ் நிலையத்தைப் புனரமைக்குமாறு கோரியிருந்தனர்.
இவர்களின் கோரிக்கையைத் தொடர்ந்து செயலாளர் எடுத்துக் கொண்ட முயற்சியால் தற்போது பஸ் நிலையம் ஒரு மில்லியன் ரூபா செலவில் கல்லுப்போட்டுத் தார் ஊற்றிச் செப்பனிடப்பட்டுள்ளது.

> பஸ் நிலையத்தில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் பிரதேச சபை செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்த பொதுமக்கள் பயணிகளின் நலன்கருதி பஸ் நிலையத்தைப் புனரமைக்குமாறு கோரியிருந்தனர்.

(த-ஐ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற் சிகிச்சைப் பிரிவுகளில் உரிய வசதிகள் வேண்டும்

## வடக்கு வைத்தியசாலைகள் சார்பில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25
வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இயங்கும் பல் சிகிச்சைப் பிரிவுகளுக்கு அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் மருந்து விநியோகப்பிரிவின், பணிப்பாளர், வைத்தியக் கலாநிதி பன்னம்பிட்டிய தலைமையிலான குழுவினர், முதன்முறையாகக் கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், வைத்தியசாலைகளின் மருந்தாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலைப் பண்ணை சுகாதாரக் கிராமத்தில் உள்ள கட்டடத்தில் நடத்தினர்.

இதன்போது, யாழ்.மாவட்டத்தில் உள்ள பல் சிகிச்சைப் பிரிவுகளில் பல் பிடுங்குதல் மற்றும் பல் அடைத்தல் ஆகிய பணிகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. தற்போது பல் அடைக்கும் பசை வழங்கப்படாததால் பல் கட்டுதல் உட்பட ஏனைய தேவைகளுக்குத் தனியார் பற்சிகிச்சைப் பிரிவுகளை நாடவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட் டுள்ளது.

> “சுகாதார பிராந்திய நிலையங்களில் உள்ள மருந்துக் களஞ்சியங்கள் போன்று, மாகாண மருந்துக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு மருந்துகள் களஞ்சியப்படுத்தப்பட வேண்டும்.”

இதனால் பெரும் நிதிச் செலவை மக்கள் எதிர்கொள்கின்றனர். தென்னிலங்கைப் பகுதி வைத்தியசாலைகளில்உள்ளவைபோன்று வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் இயங்கும் பற்சிகிச்சைப் பிரிவுகளுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படவேண்டுமென அனைத்துதரப்பினராலும் கோரிக்கை விடப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட பணிப்பாளர், விரைவில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது சுகாதார பிராந்திய நிலையங்களில் உள்ள மருந்தக் களஞ்சியங்கள் போன்று மாகாண மருந்துக் களஞ்சியம் ஒன்று அமைக்கப்பட்டு அங்கு மருந்துகள் களஞ்சியப்படுத்தப் படவேண்டும்.

பிராந்திய களஞ்சியங்களில்மருந்துகள் இல்லாத வேளையில், அடுத்த தடவை மருந்துகள் வரும் வரை நோயாளர்கள் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

ஒவ்வொரு மருந்து வகைகளும் பிராந்தியங்களிலிருந்து அனுப் பப்படும் பார ஊர்திகள்மூலம்பெறப்படுகின்றன. மாகாணத்துக்கென ஒரு மருந்துக் களஞ் சியம் இருப்பின் ரயில் மூலம் மருந்துகள் பெறப்பட்டுக் களஞ்சியப் படுத்தும் பட்சத்தில் பிராந்தியங்கள் தமக்குத் தேவையான மருந்துகளை உரிய வேளையில் பெற்றுக் கொள்வதுடன், மருந்துகள் ஏற்றி வர பார ஊர்திகளை கொழும்புக்கு அனுப்ப வேண்டிய தேவை ஏற்படாது எனவும் கோரிக்கை விடப்பட்டது.

இது குறித்து தேவையான நடவடிக்கை மேற்கொள் வதெனவும் பணிப்பாளர் பன்னம்பிட்டிய தெரிவித்துள்ளார்.

(த-ஐ-9)

## சிறப்புற நடைபெற்ற வடக்கு பாடசாலைகள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25
வட மாகாண முதன்மைப் பாடசாலைகள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வட மாகாணத்தின் 12 வலயங்களைச் சேர்ந்த சகல பாடசாலைகளிலும்கடந்தஆண்டு ஜீ.சி.ஈ. சாதாரணம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் பெறுபேற்றுகளின் அடிப்படையில் தேர்வான 23 பாடசாலை களுக்கும், மாகாண மட்ட கற்றல் வள நிலையப் போட்டிகளில் பங்கு கொண்ட 4 வகைப் பாடசாலைகளில் 12 பாடசாலைகளுக்கும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட சகல மாணவர்களையும் உள்ளடக்கிய 125 பாடசாலைகளுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை, பாடசாலைகளில் கடைப்பிடிக்கப்படும் சுகாதார மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 47 பாடசாலைகளுக்கு தங்கப்பதக்கங்களும், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 132 பாடசாலைகளுக்கு வெள்ளிப்பதக்கங்களும், 60புள்ளிகளுக்கு மேற்பட்ட 154 பாடசாலைகளுக்கு வெண்கல விருதுகளும் என்ற நிலையில் 333 பாடசாலைகளுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. (த-ஐ-101)

## புதிதாக பஸ் தரிப்பு நிலையம் கைதடி ஏ-9 வீதியில் அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25
ஏ9 பிரதான வீதியில் கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு அருகில் பஸ் தரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடந்த பல வருடங்களாகப் பஸ்தரிப்பு நிலையம் ஒன்று இல்லாத காரணத்தால், பயணிகள் மழை, வெயிலுக்கு மத்தியில் சிரமப்பட்டே பஸ்ஸுக்குக் காத்து நின்று வந்தனர். நீண்ட காலமாக இது தொடர்பில் மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இத்னை அடுத்து வடமாகாண போக்குவரத்து அமைச்சால் இந்தப் பஸ்தரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

இந்தப் பஸ்தரிப்பு நிலையத்தால் இந்தப் பகுதியில் உள்ள அரச, தனியார்துறை அலுவலகப் பணியாளர்கள், நவீல்ட் பாடசாலை, முதியோர் இல்லம், விழிப் புலனற்றோர் தொழிற்பூங்கா போன்றவற்றின் பணியாளர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

(த-ஐ-17)

## தென்மராட்சியில் 5 பாடசாலைகளுக்கு நவீன கழிப்பறைகள்

சாவகச்சேரி,டிசெ.25
கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைகள் மற்றும் ஆயிரம் பாடசாலைகளின் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த 5 பாடசாலைகளில் தலா 20 லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் கூடிய கழிப்பறைகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, வரணி மத்திய கல்லூரி, மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளில் இந்தத் திட்டம்மேற்கொள்ளப்படவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)



## விதை உற்பத்திப் பண்ணையை பார்வையிட்டார் கனடா தூதுவர்

யாழ்ப்பாணம், டிசெ. 25
புன்னாலைக்கட்டுவனில் உள்ள யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உற்பத்திப் பண்ணையைக் கனடாத் தூதுவர் ஷெலி வைற்னி கடந்த புதன்கிழமை பார்வையிட்டார்.

இந்தப்பண்ணையில்யு.என். டி.பி. நிறுவனத்தின் உதவியுடன் பயன் தரும் பழமரக்கன்று உற்பத்தி ஆரம்பிக்கப்பட் டுள்ளது.

இந்தப் பழமரக்கன்று உற்பத்திப் பண்ணையைப் பார்வையிட்ட தூதுவர், பின்னர் பண்ணையில் மரக் கன்று ஒன்றையும் நடுகை செய்தார்.

வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், சிட்கோ பொது முகாமையாளர் தி.ரவிமயூரன், யூ.என்.டி.பி நிறுவன திட்டப்பணிப்பாளர் சர்வானந்தா உட்பட விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(த-ஐ-17)

## ஊர்காவற்றுறைப் பகுதியில் திண்மக் கழிவுத் தொட்டிகள்

### சுகாதாரம் பேண நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25
ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை இலகுவாகத் தரம் பிரிப்பதற்கு வசதியாகவும் சுத்தம், சுகாதாரத்தைப் பேணும் வகையிலும், கண்ட கண்ட இடங்களில் திண்மக் கழிவுகள் போடப்படுவதை கட்டுப்படுத்தும் நோக்குடன் பல இடங்களில் பல லட்சம் ரூபா செலவில் திண்மக் கழிவுத் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் கட்டுப்பாடின்றித் திண்மக் கழிவுகள் வீதிகளில் குவிக்கப்படுவதால் அவற்றை அப்புறப்படுத்துவதிலும் உக்கும் திண்மக்கழிவு, உக்காத திண்மக் கழிவு எனத் தரம் பிரிப்பதிலும் பிரதேச சபைக்குச் சிரமம் ஏற்படுவதுடன் நேரவிரயமும் ஏற்பட்டு பணமும் விரயமாகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்த முன்வந்துள்ள பிரதேசசபை, ஊர்காவற்றுறை நகரை அண்டிய பகுதிகளில் ஏற்கனவே பல லட்சம் ரூபா செலவில் ஆறு திண்மக் கழிவுத் தொட்டிகளை அமைத்திருந்தது. பிரதேச சபையால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்துக்கு மக்கள் மத்தியில் வரவேற்பும் ஆதரவும் கிடைத்ததுடன், மேலும் பல தொட்டிகளை அமைக்குமாறும் பிரதேசசபையிடம் மக்கள் கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையைத் தொடர்ந்து பிரதேசசபை வலுவூட்டல் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான எட்டுத் திண்மக் கழிவுத் தொட்டிகளை அனலைதீவு, புளியங்கூடல், பருத்தியடைப்பு, தம்பாட்டி, செருக்கன் உட்படப் பல கிராமங்களில் அமைத்து வருகின்றது.

(த-ஐ-115)

## விபத்தில் இளைஞன் காயம்

சாவகச்சேரி,டிசெ.25
வீதியில் தாம் சென்ற மோட்டார் சைக்கிளின் முன்சக்கரத்தின் காற்று திடீரெனக் குறைந்ததால் இளைஞரொருவர் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு மட்டுவிலில் இடம்பெற்றது.

மட்டுவில்தெற்கைச்சேர்ந்தகுறித்த இளைஞர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியாசலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## யாழில் மட்டத்தேள் கறி வழங்கிய கடைக்காரருக்கு மீண்டும் வழக்கு

யாழ்ப்பாணம்,டிசெ. 25
மட்டத்தேள் கறியுடன் சாப்பாடு வழங்கிய கடைக்காரர், அதன் பின்னரும் சுகாதாரச் சீர்கேடாக உணவுக் கடையை நடத்தி வந்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிராக யாழ். நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அந்தவழக்கு எதிர் வரும் 4 ஆம் திகதி மீள எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை வீதியிலுள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராகவே குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் வர்ணப் பூச்சு வேலையில் ஈடுபட்டிருந்த பணியாளர்கள் மதியச்சாப் பாட்டைப் பெறுவதற்காக குறித்த சாப்பாட்டுக் கடைக்குச் சென்றுள்ளனர். அதன்போதே அவர்களுக்கு வழங்கப்பட்ட கறியில் மட்டத் தேள் இருந்தமை தெரிய வந்தது. அது தொடர்பில் கடை நடத்துநருக்குத் தெரிவிக்கப்பட்டபோது, அதனை அவர் கவனத்தில் கொள்ளவில்லை. எப்போதாவது அவ்வாறு நிகழும் என்று கூறியுள்ளதாகப் பணியாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், அதன் பின்னர் குறித்த கடைக்குச் சென்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசோதனையில் ஈடுபட்டபோது அங்கு சுகாதாரச் சீர்கேடு இருந்ததை அவதானித்துள்ளார். அதன்படி அங்கு வைக்கப்பட்டிருந்த உணவுகள் தூய்மை கெடும் நிலையில் இருந்தமை, உரிய முறையைப் பயன்படுத்தாது உணவு பரிமாறப் பட்டமை, சமையலறைச் சுகாதாரம் பேணப்படாமை, உணவு பரிமாறும் ஊழியர்கள் உரிய சீருடை அணிந்திருக்காமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அந்த வழக்கு யாழ்.நீதிமன்றில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலை யில் அந்த வழக்கு எதிர் வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இது தவிர, யாழ்.கஸ்தூரியார் வீதியிலிருந்து ஜும்மா வீதியிலுள்ள ஒரு கடைக் கும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கூறப்பட்ட குற்றச்சாட்டுக் களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப கத்தோலிக்க சமூகம் முழு ஆதரவு

## கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ 25

இலங்கையில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்ப ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு கத்தோலிக்க சமூகம்முழுஆதரவையும்நல்கும். இவ்வாறு கொழும்பு பேராயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

சமாதானத்துக்காக சிங்களவர், தமிழர், மு ஸ்லிம்கள் அவைரும் ஒன்றிணையவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலகத்தின் ஆதரவில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற நத்தார் பண்டிகை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிறிஸ்தவ மத விவகாரங்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (தி)

# புதிய அரசமைப்புக் குறித்து ஆராய பொது எதிர்க்கட்சியும் நிபுணர் குழு

## அமைப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, டிசெ 25

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து ஆலோசனைகளைப் பெற நிபுணர் குழுவொன்றை நியமிக்க நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்குணவர்த்தனதலைமையிலான பொது எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது. இந்த நிபுணர் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றதன் பின்னரே புதிய அரசமைப்புத் தொடர்பாக பொது எதிர்க்கட்சி ஆராயவுள்ளது என்று அதன் உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பந்துல குணவர்த் தன தெரிவித்தார்.

கொழும்பு 08இலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற பொது எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாக பொது எதிர்க்கட்சியின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புதிய அரசமைப்பை உருவாக்கும் யோசனை எமக்கு அரசால் வழங்கப்பட்டுள்ளது.இது குறித்து நாம் இன்னமும் ஆராயவில்லை. அரசமைப்பைஉருவாக்கம்குறித்து ஆராய பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட அரசமைப்பு உருவாக்க விடயத்தில் நிபுணத்துவம் பெற்ற நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை அமைக்கவுள்ளோம். இந்தக் குழுவிடம் ஆலோசனை பெற்றதன் பின்னரே எமது கருத்தை வெளியிடுவோம். இது தொடர்பாக நாமும் ஆழமாக ஆராய வேண்டியுள்ளது–என்றார். (த-சி)

# எம்.பிக்கள்-மாகாண சபையினர் சந்திப்பை உடனே நடத்துங்கள்

## கூட்டமைப்பின் தலைவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25

மாகாண சபையினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான சந்திப்பை உடனடியாக நடத்துமாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம், வடக்கு மாகாணசபைஉறுப்பினர்கள்நேரில் சென்று வலியுறுத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் வரவு - செலவுத் திட்டம் மற்றும் தமிழ் மக் கள் பேரவை தொடர்பாகவும் கலந் துரையாடுவதற்கே இந்தச் சந்திப்பை உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் ஒரு தொகுதி உறுப்பினர்கள், கடந்த செவ்வாய்க் கிழமை கொழும்புக்குச் சென்று, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு மாகாணசபையின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது. அமைச்சுக்களுக்கு ஒதுக்கிய நிதி உரியமுறையில் செலவு செய்யப்படாமல் உள்ளது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒதுக்கிய நிதியில் 58 சதவீதமான நிதியே செலவு செய்யப்பட்டு முடிக்கக் கூடிய சாத்தியம் இருப்பதாகவும், எஞ்சிய நிதி திரும்பிச் செல்லும் நிலையில் இருப்பதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராயப்படவேண்டும்என்றுசம்பந்தனிடம் மாகாண சபை உறுப்பினர்கள் கோரியுள் ளனர்.

தமிழ் மக்கள் பேரவை உரு வாக்கப்பட்டுள்ள நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் அதில் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பிலும் ஆராயவேண்டும் என்று மா காண சபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்காக, மாகாண சபை உறுப்பினர்கள் – நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தை உடனடியாகக் கூட்டவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் 27 ஆம் அல்லது 28 ஆம் திகதிகளில் கூட்டத்தை நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இறுதி முடிவு எட்டப்படவில்லை. (த-5)

# இவ்வருட பண்டிகைக் காலத்தில் சீன வெடிகள் உற்பத்தியில் வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.25

தொடர் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக பண்டிகைக் காலத்துக்குத் தேவைப்படும் சீன வெடி உற்பத்தி இந்த முறை 50 வீதம் வரை குறைந்துள்ளதாக சீனவெடி உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சீன வெடிகள் உள்ளிட்ட வாண வேடிக்கை உற்பத்திகளுக்கு இந்தப் பண்டிகைக் காலத்தில் அதிக கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வருடம் அந்தக் கோரிக்கைகளுக்கு அமைய அவற்றை விநியோகிக்க இயலாது போயிருப்பதாகவும், இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வோரின் சங்கத்தின் கண்டி மாவட்டத் தலைவர் சேன தயானந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் கடந்த சில மாதங்களாகக் கொட்டித் தீர்த்த கடும் மழை காரணமாக இந்த முறை சீன வெடி உற்பத்தியில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளதோடு, அதைவிட தொழிலாளர்களைத் தேடிக் கொள்வதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொழிலுக்கு நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி விடுவதற்கு எந்தவிதமான செயற்றிட்டமும் இல்லையெனவும், சீனா, இந்தியா போன்ற நாடுகளில்இதுஏற்றுமதித்தொழிற்துறைகளில் ஒன்றாகியிருப்பதால் எமது நாட்டில் தேவைக்கு அதிகமாக உற்பத்திசெய்வதற்கு இயலாத நிலைப்பாடொன்றே உருவாகியிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (த-ஜ-22)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
பாலசிங்கம் மயூரதன்



தோற்றம்
21.10.1992

மறைவு
25.11.2015

முப்பத்தோர் தினங்கள் மறைந்தனவே மயூரா
நீங்குமா உந்தன் பிரிவின் துயர்
உந்தன் பாசம் குறும்புத்தனம்
எம்மை விட்டு அகலுமா
நிர்க்கதியாய் பரிதவிக்க விட்டுச் சென்றாயா
எத்தனை காலங்கள் சென்றாலும்
மறக்குமா உந்தன் நினைவுகள் ஆலமரம் சரிய
அதை அண்ணார்ந்து பார்ப்பது போல் - எம்
கண்முன்னே எங்களை விட்டுச் சென்றாயா
கைகளில் தவழ்ந்திருந்த காற்றை நழுவவிட்டு மூச்சடைத்து நிற்கின்றோம்
எங்கள் உயிர் உள்ளவரை உந்தன் நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

வலவந்தை லேன்,
புகையிரதநிலையவீதி,
கொக்குவில் தெற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

# மாணிக்கக்கல் துறை அபிவிருத்தி செய்யப்படும்

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு,டிசெ.25

அதிகளவான எண்ணிக்கையில் மாணிக்கக்கல் துறை சார்ந்த டிப்ளோமாதாரிகளை உருவாக்கி புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்து இந்தத் தொழிற்றுறையை அபிவிருத்திசெய்வதேஇன்றையஎமதுதேவை இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையின் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- இலங்கை மாணிக்கக்கற்கள் தொடர்பில் மிக நீண்டகாலவரலாற்றுப்புகழைப்பெற்றுள்ளது. புதிய அரசென்ற ரீதியில் நாட்டின் மாணிக்கக்கல் தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வதற்கு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

கடந்த சந்தர்ப்பமொன்றில் மாணிக்கக்கல் வர்த்தகர்களால் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு மாணிக்கக் கற்கள் அகழ்வதற்கு மற்றும் அந்தத் தொழிற்றுறை சம்பந்தமான அனுமதிகள் வழங்கப்படக் கூடாதென்ற கோரிக்கையொன்று விடுக்கப்பட்டிருந்தது.

வெளிநாட்டவர்களுக்கு மாணிக்கக்கல் தொழிற்றுறை சார்ந்த விசேடமான அகழ்வுகளுக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதை நான் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது எமது நாட்டு உற்பத்திகளான தேயிலை, இறப்பர், தேங்காய், நெல் உள்ளிட்ட விளைபொருள் பொருளாதாரங்களை நோக்குகையில் இன்று சர்வதேசச் சந்தையில் தேயிலையும் இறப்பரும் மிகக் குறைந்த விலை மட்டங்களையே கொண்டுள்ளன.

ஆனால்மாணிக்கக்கல்தொழிற்றுறைக்கு நாளுக்கு நாள் சர்வதேசச் சந்தையில் பெறுமதி ஏறிக்கொண்டே போகிறது. எமது நாட்டின் மாணிக்கக்கற்களுக்கு உலகில் நல்ல வரவேற்பு இருப்பதால், ஏற்றுமதி வர்த்தகச் சந்தையில் மாணிக்கக்கல் தொழிற்றுறைக்கு மிகுந்த முக்கியத்துவம் வழங்கி, அதைச்சிறப்பாகஅபிவிருத்திசெய்து எமதுதேசியபொருளாதாரத்தைப்பலப்படுத்த அரசு காத்திரமாகச் செயற்படும்.

டிப்ளோமாதாரிகளை உருவாக்கி, இந்தத் துறை சம்பந்தமாகத் தேவையான தொழில்நுட்ப மற்றும் ஆய்வு வசதிகளைப் பெற்றுக் கொடுத்து இந்தத் தொழிலை மேலும் பலப்படுத்தி புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்து இந்தத் தொழிற்றுறையை அபிவிருத்தி செய்வதே இன்றைய எமது தேவை – என்றார். (த-ஜ-10)

Digitized by Noolaham Foundation | noolaham.org | aavanaham.org

# விவாதத்துக்கு வருமாறு தேரருக்கு ரிஷாத் சவால்

## வில்பத்து விவகாரம் தொடர்பில்

கொழும்பு, டிசெ.25



"என் மீதும் வடபுல முஸ்லிம் அகதி சமூகத்தின் மீதும் அவதூறுகளையும், அபாண்டங்களையும் பரப்பிவரும் மாத்தறை ஆனந்த சாகர தேரருடன் எந்த இடத்திலும் நான் பகிரங்க விவாதம் நடத்தத் தயார்" என்று அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று முன்தினம் சவால் விடுத்துள்ளார்.

வில்பத்துவில் முஸ்லிம்கள் அத்துமீறிக் காட்டை அழிப்பதாகவும், அந்தக் காட்டைப் பயன்படுத்தித் தான் போதை வஸ்து வியாபாரம் செய்வதாகவும், கொழும்பு விகாமகாதேவி பூங்காவுக்கு எதிரில் அண்மையில் ஆர்ப்பாட்டம் நடத்தி கருத்துத் தெரிவித்தமைக்காகவே இவ்வாறான சவாலைத் தான் விடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு வொக்ஷால் வீதி சதொச கட்டடத்தொகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு அமைச்சர் சவால் விடுத்தார்.

ஆனந்த சாகர தேரர் உண்மையான மதகுருவாக இருந்தால், தான் விடுக்கும் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு விவாதத்திற்கு முன்வரவேண்டும் என்றும், இல்லையேல் ஊடகங்களின் மூலம் தனக்கும் தனது சமூகத்திற்கு எதிராகவும் தெரிவித்த கருத்துக்களை வாபஸ்பெறவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஆனந்தசாகர தேரரின் இந்த விசமத்தனமான கருத்துகள், தென் இலங்கை வாழ் பெரும்பான்மைச் சமூகத்தைத் தவறான வழியில் திசைதிருப்பக்கூடியவை எனவும், இதன்மூலம் இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கத் தேரர் முற்படுகின்றார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விகாரமகாதேவி பூங்காவில் கடந்த சனிக்கிழமை அப்பாவி மக்களைத் தவறாக வழிநடத்தி இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடுசெய்து தன்னை அவமானப்படுத்தியமைக்காக, தான் அன்றைய தினம் கறுவாத்தோட்ட பொலிஸில் முறைப்பாடு செய்ததாகவும், தனது சட்டத்தரணியூடாக தேரரிடமிருந்து இரண்டு வெவ்வேறு கருத்துகளுக்குமாக தலா நூறு கோடி ரூபா நஷ்டஈடு கோரி கோரிக்கைக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

> இறைவன் எனக்கு வழங்கிய பதவிகள் மூலம் நான் சார்ந்த சமூகத்துக்குப் பணியாற்றுவதற்கு எவரும் எனக்குத் தடைகள் விதிக்க முடியாது.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு நானும் எனது கட்சியும் ஆதரவளித்ததைத் தொடர்ந்து இனவாதிகள் என் மீது அபாண்டங்களைப் பரப்பி வருகின்றனர். எனது அரசியல் வாழ்வையும் என்னையும் அழிப்பதற்குப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

இனவாத இயக்கங்கள் சிங்கள, ஆங்கில ஊடகங்களைப் பயன்படுத்தி இந்த முயற்சியை மேற்கொள்கின்றன. என்னதான் பிரசாரங்கள் மேற்கொண்டாலும், நான் எனது சமூகத்துக்கான பயணத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்கமாட்டேன். எனது உயிர்போனாலும் நியாயமாக மனச்சாட்சியுடன் மேற்கொள்ளும் எனது காரியங்களை விட்டுக்கொடுக்க மாட்டேன். அதேபோன்று சிறுபான்மைச் சமூகத்துக்கு எதிராக எந்த அநியாயம் நடந்தாலும் நான் பார்த்துக்கொண்டு இருக்கப்போவதில்லை.

நானும் சிறுவயதிலே அகதி முகாம் வாழ்க்கையை அனுபவித்து அல்லல்பட்டவன். இறைவன் எனக்கு வழங்கிய பதவிகள் மூலம் நான் சார்ந்த சமூகத்துக்குப் பணியாற்றுவதற்கு எவரும் எனக்குத் தடைகள் விதிக்க முடியாது. வில்பத்து காட்டில் ஓரங்குல நிலத்தையேனும் முஸ்லிம்கள் அபகரிக்கவில்லை. எம்மை மீள்குடியேற்றுமாறு நாங்கள் வெளிநாடுகளிலோ ஐ.நா. சபையிலோ முறையிடவும் இல்லை.

கடந்த அரசின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடமும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடமுமே மீள்குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்தோம். ஜனாதிபதி விசேட செயலணி மூலம் விடுவிக்கப்பட்ட, தமக்குச் சொந்தமான காணிகளிலேயே முசலி பிரதேச மக்கள் குடியேறி வருகின்றனர்– என்றார். (த-சி)

---

## சுயாதீனமாக செயற்பட அனுமதிக்குமாறு 38 எம்.பிக்கள் சபாநாயகரிடம் கோரிக்கை

கொழும்பு, டிசெ.25

நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்பட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்த்தரப்பிலுள்ள மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 38 பேர் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைக்குச் சபாநாயகரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காவிட்டால், அடுத்த வருடம் நாடாளுமன்றத்தை இதே முறையில் கொண்டு செல்ல இடமளிக்க முடியாது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு–08 இலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொது எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்ட கருத்தை வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, மேலும் தெரிவிக்கையில்,

பொது எதிர்க்கட்சியாகச் செயற்படும் தமக்கு நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு–செலவுத் திட்ட விவாதங்களில் சரியான நேர ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஜே.வி.பியினருக்கு ஒதுக்கப்பட்ட நேர அளவுகூட எமக்கு ஒதுக்கப்படவில்லை. எமது உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்பதை நாம் சபாநாயகரின் கவனத்துக்கும் கொண்டு வந்தோம்.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் எதிர்க்கட்சித் தரப்பிலுள்ள 38 நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். இருப்பினும், அவரிடமிருந்து இன்னமும் பதில் கிடைக்கவில்லை. தற்போதைய நாடாளுமன்றத்தில் தொடர்கின்ற நிலைமையே அடுத்த வருடத்திலும் தொடருமாயின், சபையை இதே முறையில் கொண்டு செல்ல இடமளிக்க முடியாது.

மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் சிறப்புரிமையைப் பாதுகாக்கவேண்டிய முழுப்பொறுப்பு சபாநாயகருக்கு உள்ளது. எனவே, எமது கோரிக்கைக்கு அவரிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கின்றோம்–என்றார். (து)

---

## தபால் அமைச்சின் இணைப்புச் செயலர் கட்டுநாயக்காவில் கைது

கொழும்பு,டிசெ.25

முஸ்லிம் மத விவகார மற்றும் தபால் அமைச்சின் இணைப்புச் செயலாளர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்குத் தங்கம் கடத்தி வந்த குற்றச்சாட்டின் பெயரிலேயே அவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 20 இலட்சம் ரூபா பெறுமதியான 4 தங்க பிஸ்கெட்டுகளைச் சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-10)



2016 ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை யாத்திரைக்கான பருவகாலம் நேற்று பூரணை தினத்தோடு ஆரம்பமாகியுள்ளது. இரத்தினபுரி, பெல்மதுளை, கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக நேற்று மலை உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகச் சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தேரர் தெரிவித்துள்ளார். (த-ஜ-10)

---

## ஆழிப்பேரலை இடரின் நினைவுநாள் 26ஆம் திகதி

அம்பாறை,டிசெ.25

ஆழிப்பேரலை இடர் (சுனாமி) ஏற்பட்டு 11 ஆம் வருட நினைவுநாள் நிகழ்வுகள், நாளை 26 ஆம் திகதி கிழக்கிலங்கையின் பல் வேறு பிரதேசங்களிலும் நடைபெறவுள்ளன.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கையின் கரையோரங்களைத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்திய ஆழிப் பேரலை இடரில் வடக்குக் கிழக்கின் பல பிரதேசங்களும் பேரழிவைச் சந்தித்ததுடன், பல்லாயிரக் கணக்கான உயிர்களும் காவு கொள்ளப்பட்டன.

இந்தப் பேரழிவால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிழக்கில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் பதினோராம் வருட நினைவு நாளை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆழிப்பேரலை இடரில் உயிர் நீத்த, காணாமற்போனோர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்களில் நினைவு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

குறிப்பாக இடர் ஏற்பட்ட உரியவேளையில், உயிரிழந்த தமது உறவுகளுக்காக நினைவுத் தூபிகளில் மக்கள் சுடர் ஏற்றி நினைவேந்தல் நிகழ்வுகளையும், மத அனுஷ்டானங்கள், நினைவுப் பேருரைக் கூட்டங்களையும் நடத்தவுள்ளனர். (த-ஜ-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சகல இனங்களும் சமத்துவமாக வாழ வழி சமைப்பது எப்போது....?

மனுக்குலத்தின் மேய்ப்பன் -- இறைதூதன் -- இயேசுபிரான் அவதரித்த நத்தார் (கிறிஸ்மஸ்) -- நன்னாள் -- இன்று டிசெம்பர் இருபத்தைந்தாம் திகதியாகும்.

சமாதானத்துக்காக, மானிட அமைதிக்காக, தமது சொல்லால் மட்டுமன்றி, செயலாலும், ஜீவனாலும், நற்பணி புரிந்த மேய்ப்பர்; அதற்காகவே தமது உயிரையும் உடலையும் அர்ப்பணித்தார்.

கஷ்டப்பட்டோர் பேறுபெற்றவர்கள். ஏனெனில் மகிமையில் உள்ள ஆண்டவரின் ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டு என்பதும், அவர் மொழிந்த உன்னதமான வாக்கியம்.

இலங்கைத் தமிழ் மக்களின், அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு 2001 ஆம் வருடத்தில், கிறிஸ்தோதயத் திருநாளின் நம்பிக்கை ஒளிக்கீற்றுடன் பிறந்தது. அந்த ஆண்டில் டிசெம்பர் ஐந்தாம் திகதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவியேற்றது.

எனினும் அந்த ஒளிக்கீற்று மறைந்து போனமையும், போர் வீச்சுப் பெற்றமையும் சரித்திரமாகியது.

மீண்டும் 2003 ஆம் ஆண்டில், நத்தார் கொண்டாட்டத்தை அண்டி, ரணில் அரசின் அமைதி முயற்சி பஸ்பமாகியது. ஜனாதிபதி சந்திரிகாவின் சூட்சுமமான செயற்பாடுகளால், நாட்டு மக்கள் மிகக் குறிப்பாகத் தமிழர்கள் அந்த ஆண்டின் நத்தாரை அவநம்பிக்கையுடன் கொண்டாட நேரிட்டது.

அதற்குப் பின்னர், அச்சம் தரும், பீதியை உண்டாக்கும், பயப் பிராந்தியை மேலுயர்த்தும் அனுபவங்களோடு,தமிழ் மக்கள் தேவசுதன் பிறப்பின் நாளை எதிர்கொள்ள நேர்ந்ததும் ஒரு சரித்திரமே.

இப்போது, மீண்டும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில், புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சிக் காலத்தில், மீண்டும் நல்லிணக்கம் குறித்து முணுமுணுக்கப்படுகிறது.

இறைமகன் இயேசுபிரான் காட்டிய இன, மத சமாதானத்தை உருவாக்குவதற்கு, தென்னிலங்கையின் ஆட்சித் தலைவர்களும் சமயத் தலைவர்களும் எப்போது மனம் கொள்ளப் போகிறார்கள்?

மிகப்பெரும் தேசியப் பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு, நிரந்தரத்தீர்வு காண பெரும்பான்மை இனத்தவர்களின் ஆட்சித் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் அப்பழுக்கற்ற நிலை நின்று, நாட்டில் இன உறவை மேலோங்க வைப்பதற்கு மனம் கொள்வார்களா?

வெளிநாட்டார் உதவி, பங்களிப்பு என்று காத்திராமல், காலம் கடத்தாது, இரண்டு சகோதர இனங்களும் தமக்குச் சேரவேண்டிய உரிமைகளை அனுபவிக்க வழிசெய்ய ஆட்சியாளர்களால் இயலாதா? அன்றேல் அவர்கள் அதற்கான திறமை அற்றவர்களா?

நாடு முன்னேறுவதற்கு, முதலில் அரசியல் தலைவர்களுக்கு நல்ல மனம் அமைதல் வேண்டும்.

ஓரினத்தை, மற்றோர் இனம் ஒடுக்குவதற்குப் பதிலாக, ஒன்றுபட்டு நாட்டை முன்னேற்றுவது சகல அரசியல் தலைவர்களினதும் பெரும் கடமையாகும். அது தட்டிக் கழிக்கக்கூடாத பொறுப்பு என்பதை மறந்துவிடாதீர்கள்.

இயேசு பாலனின் பிறப்பின் தத்துவத்தை உணர்ந்தாவது, இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டில் சகல இனத்தவர்களும் சமத்துவமாகவும் அன்னியோன்னியமாகவும் வாழத்தக்க நிலையை ஏற்படுத்த முனைவார்களா? அதற்கான முயற்சிகளை இதயபூர்வமாக முன்பெடுப்பார்களா...?

# நத்தார்ப் பண்டிகையை நம்பிக்கையுடன் வரவேற்போம்

மு.ஈழத்தமிழ்மணி



உலகில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இறைதூதர் இயேசுகிறிஸ்து இந்த உலகில் அவதரித்த திருநாளை உலகளாவிய கிறிஸ்தவ மக்கள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இன்றைய நத்தார் தினமானது, மகத்தானதொரு பண்டிகையாகக் கொள்ளப்படுகின்றதொரு பெருவிழாவாகும்.

இன்றைய நாளில், இலங்கைத் தமிழ் மக்களுக்கான சமாதான நல்வாழ்வானது இன்னமும் ஏற்பட்டுவிடவேயில்லை என்ற ஏக்கப் பெருமூச்சு நிறையவே உண்டு. இலங்கையில்போர் முடிவடைந்த பின்பும்கூட சுமார் ஏழு ஆண்டுகளாக ஏக்கச்சுமையைச் சுமந்து கொண்டே தமிழர்களாகிய நாம் இந்தப் பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

மக்களின் பாவத்தை ஏற்றுக் கொண்டு, அதற்காகத் தனது வாழ்நாளை அர்ப்பணித்த புனிதரை நினைவுகூரும் நத்தார் பண்டிகை, அவரது விசுவாசிகளுக்கு மட்டுமன்றி, உலகெங்கிலும் வாழும் அனைத்து மக்களினாலும் விரும்பிக் கொண்டாடப்படுகின்றதொரு சிறப்புப் பண்டிகையாகும்.

பாலன் பிறந்து விட்டார் என்ற அர்த்தபுஷ்டியான நாமத்தை அதிகாலை 12 மணிக்கு கிறிஸ்தவ உள்ளங்களில் மட்டுமன்றி அனைத்துலக மக்களும் அவரது பிறப்பைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியடைகின்றனர்.

நத்தார்ப் பண்டிகைத் திருநாள், காலம் காலமாக தமிழ் மக்களின் இதயங்களில் ஒரு நிரந்தரமான இடத்தைப் பிடித்துள்ளது.

இயேசுநாதர் அகிம்சை என்ற கோட்பாடு கொண்ட அவதார புருசராக இந்த மண்ணில் தோன்றினார். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் காட்டு என்று அவர் கூறிய வேதவாக்கானது, இவ்வுலகில் அகிம்சை, அன்பு, சகிப்பு, பொறுமை ஆகியவை உருவாகக் காரணமாகியது. இந்தக் கோட்பாடுகளுக்கும் தமிழர்களுக்கும் இன்றுவரை நீண்ட உறவு இருந்து கொண்டே வருகின்றது. ஆகவேதான் நத்தார்ப் பண்டிகை, தமிழர்கள் மத்தியிலும் நிரந்தரமான இடத்தைப்பிடித்திருக்கின்றது எனக்கூற முடிகின்றது.

சுமார் 65 வருட காலங்களுக்கு மேலாக பல்வேறு வழிகளிலும் எமது இனம் அடக்குமுறைகளுக்குள் சிக்குண்டிருந்தபோதும் இத்தகைய இறை நம்பிக்கைகளே எம்மை மீட்டெடுத்துள்ளன. அந்த வகையில், தொடர்ந்தும் எமது சத்துருக்களின் கைகளிலிருந்து விடுபட மீட்சி வரவேண்டும் என்பதற்காக, இந்த நாளில் பிரார்த்தனைகளைச் செய்வோமாக.

'நீ பலம் கொண்டு திடமானதாயிரு நான் உன்னோடு இருப்பேன்' என்ற அவரது வேதவாக்கு இன்றைய காலகட்டத்தில் எமக்கு மிக அவசியமானதொன்றாக இருக்கின்றது. போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகளாகி விட்ட நிலையில், இந்தக் கொடூரப் போரானது தமிழ் மக்களை ஆறாத்துயரில் கொண்டு வந்துவிட்டது. அதுமட்டுமன்றி 2004 ஆம் ஆண்டு நத்தார் தினத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலையும், தமிழ் மக்களைப் பெரும் துயருக்குள்ளாக்கியிருந்தது.

உயிரிழப்புக்கள், உடைமையிழப்புக்கள், தொழிலிழப்புக்கள், கடத்தப்பட்டு காணாமற்போனோர், மட்டுமன்றி தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, சொந்த மண்ணிழப்புக்கள், தொடர்ந்தும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற அகதி வாழ்க்கை என்ற பல்வேறு

> “அகிம்சைக் கோட்பாட்டைக் கொண்ட அவதார புருசரான இயேசு கிறிஸ்து நாதரின் நம்பிக்கை, வழிகாட்டல்கள் எமக்கு உறுதுணையாக அமையும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.”

பிரச்சினைகளையும் நாம் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். பல நத்தார்ப் பண்டிகைகள் வந்து போயுள்ளன. எந்தவொரு மாற்றமும் ஏற்பட்டு விடவில்லை.

எமது மண்ணில் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக தமிழினம் இன்னமும் தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டங்களின் வடிவங்கள் மாறுபட்டாலும்– அவை சிதறடிக்கப்பட்டபோதும், அதன் மீதான உறுதிப்பாடு எந்தவொரு சக்திகளாலும் தகர்க்கப்பட முடியாததொன்றாகவேயுள்ளது.

2014 ஆம் ஆண்டு நத்தார் பண்டிகையின்போது நாட்டின் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். அதுவே நாட்டின் சமாதானத்துக்கும், தமிழருக்கும் நிரந்தரமானதொரு விடிவைத் தரும் என்ற அந்த நம்பிக்கையின் பயனாக 13 நாள்களின் பின்னர், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இன்றைய நத்தார் பண்டிகையின் காலத்தில் புதிய ஆட்சியானது, மக்கள் மத்தியில் புதியதொரு நம்பிக்கையைத் தரும் என்றவொரு நம்பிக்கையுடன், இன்று மலர்ந்துள்ள நத்தார்ப் பண்டிகை அதற்கும் கட்டியம் கூறுவதாகவுள்ளது.

காணாமற் போனோரின் உறவுகளின் சாட்சியங்கள் யாவும் எமது கண்களைகுளமாக்கிக்கொண்டிருக்கின்றன. கடந்த கால ஆட்சியின் சூழல்கள், தமிழினம் வைத்திருந்த நம்பிக்கைகளைச் சிதறடித்திருந்தது. நாட்டின் தற்போதைய புதிய மாற்றமானது, நம்பிக்கையைத் தோற்றுவித்திருக்கின்றது. இரண்டு கட்சிகள் ஒன்று சேர்ந்த கூட்டரசு தற்போது பதவியிலிருக்கின்றது. இத்தகைய சூழலில் பல்வேறு நம்பிக்கைகளை மனதில் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தேடித் தமிழினம் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இந்தப் பயணம் சாத்தியமாக அமைய வேண்டும் என்ற அவா, இந்த நத்தார்ப் பண்டிகைக் காலத்திலும் மேலோங்கியிருக்கின்றது.

அகிம்சைக்கோட்பாட்டைக்கொண்ட அவதாரபுருசரான இயேசுகிறிஸ்து நாதரின் நம்பிக்கை, வழிகாட்டல்கள் எமக்கு உறுதுணையாக அமையும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இந்த நம்பிக்கையின் வெளிப்பாடாக இன்று மலர்ந்துள்ள இந்தப் புனிதத் திருநாளில் எமது தமிழினத்தின் எதிர்கால விடிவுக்காக பிரார்த்திப்போம்.

இயேசுவின் பிறப்பு நாளோடு, தமிழ் மக்களின் சமூக, சமய, கலாசாரத்துடன் மக்களை பிறப்பின் உரிமைகளோடு வாழ்வதற்கு சிங்கள சமூகத்தினரும் தங்களது நல்லெண்ண வெளிப்பாடுகளை உதட்டளவிலில்லாது, தங்களது உள்ளத்திலிருந்து வெளிக்கொணர வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இடம் பிடிப்பாரா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன?

வந்தியத்தேவர்



கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த நிலங்களை, தொழில்களை இழந்து முகாம்களில் கையேந்தி வாழும் தமிழ் மக்களது பிரச்சினைகளை அரசு தட்டிக்கழித்தே காலத்தைக் கடத்துகின்றது. வலி.வடக்கு மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையால் மூடப்பட்டு, தமது சொந்தக்காணிகளுக்குச் செல்லவிடாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரதேசம் வடக்கின் விவசாய முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. எவரது உதவிகளையும் எதிர்பாராது தமது சுயஉழைப்பின் மூலம் செல்வாக்குடன் வாழ்ந்த இந்த மக்கள் தமது சிறிய தேவைகளுக்குக்கூட அடுத்தவரை எதிர்பார்க்க வேண்டிய நிலைக்குத்திட்டமிட்டேதள்ளப்பட்டுள்ளனர். இவர்களின் நிலங்களில் உல்லாச விடுதிகளை அமைத்தும் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடும் படையினர் தமது பணிக்குப் புறம்பான வருமானத்தை ஈட்டிக் கொண்டிருக்க, தமது அன்றாடச் சீவியத்துக்கே இந்த மக்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்.

> “இப்போது வலிகாமம் வடக்கு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியும் இறுதியில் நிறைவேறாமல் போவதற்கு பிரதமரோ இராணுவமோ காரணமாவதற்கு ஜனாதிபதி அனுமதிக்கக்கூடாது. இந்த விடயத்திலாவது நல்லாட்சிக்கான ஓர் அடையாளத்தைசமிக்ஞையைக் காட்ட திடம் கொண்டவராக வேண்டும்.”

### அரசுக்குத் தொடர்ச்சியான கோரிக்கைகள்

தமது சொந்த இடங்களில் குடியேறத் தம்மைஅனுமதிக்குமாறுஅரசுக்குத்தொடர்ச்சியாகக் கோரிக்கைகளை விடுத்தபடி இருக்கும் இந்த மக்கள், அதற்காக உணவுத்தவிர்ப்புப்போர், ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் அடுக்கடுக்காக அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக போராட்டங்களை நடத்தி, நீதிமன்றத்தில் தமக்கு நீதி கேட்டுத் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றபோதிலும், அவர்கள் அரசால் கைவிடப்பட்ட பிரசைகளாகவே உள்ளனர். ஜனாதிபதி, பிரதமர் என அரசுத் தலைவர்கள் அடிக்கடி வடக்குக்கு வருகை தரும் போதெல்லாம் வலி.வடக்கு மக்கள் தமது பிரச்சினைகளை அவர்களிடம் முன்வைத்தபோதும், எல்லாம் வெல்லலாம் என்ற ரீதியில் ஏதாவது ஒரு பதிலைக் கூறிச் சமாளித்து, வடபகுதி மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்; உரிய நடவடிக்கை எடுக்கப்படும்; என்றெல்லாம் மக்களை நம்பவைத்துச் சென்று விடுகின்றனர். எனினும் நிலைமையில் சிறிதளவு மாற்றம்கூட நிகழ்வதாக இல்லை. இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த ஓர் அரசுக்கு எத்தனை ஆண்டு கால அவகாசம் தேவை? எங்களுக்கு உங்களது எந்த உதவியும் தேவையில்லை. எங்களை எமது காணிகளில் குடியேற அனுமதியுங்கள் என்பதுமட்டுமேஅந்தமக்களின்கோரிக்கை. தென்பகுதியில் உள்ள மக்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியேற்ற வேண்டும். தமிழ் நிலங்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற சிந்தனையுடன் தமிழ்ப் பகுதியில் உள்ள காடுகளை அழித்து துரித குடியேற்றங்களை மேற் கொள்ள முனைப்புடன்செயற்படும்அரசும் அதன் அதிகாரிகளும் தமிழ் மக்கள் தமது சொந் தக் காணிகளில் குடியேறுவதை மட்டும் அனுமதிக்காது எதற்காகக் காலம் கடத்தவேண்டும்? வடக்கில் உள்ள படையினர் தமது வருமானத்தை அதிகரிக்க இந்த நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்பதற்காகத்தானா?

### உயர் பாதுகாப்பு வலயம்

போர் முடிவடைந்து மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேறும் நிலைவந்தும்கூட, உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வளமான பூமிகளைத் தமதாக்கிக் கொண்டு ஏனைய பகுதிகளை வறண்ட தரிசு நிலங்களாக மாறும் சூழ்நிலையை உருவாக்கிய முன்னைய ஆட்சியின் அடிச்சுவட்டை தொடர இன்றைய அரசும் தயாராகிவிட்டதா? ஆட்சி மாற்றம் ஒன்றின்கீழ் மகிந்த ஆட்சியின் கொடூரங்களுக்கு முற்றுப்புள்ளியிடக் காரணமாக இருந்த தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு, நேர்மையான, நீதியான தீர்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கை சிதைந்து கொண்டு போவதுபோல் தென்படுகின்றது. தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் எந்த ஒரு பிரச்சினைக்கு முழுமையாகத் தீர்வு காணப்பட்டதாக இல்லை. காணாமற்போன உறவுகளுக்காக அவர்களின் நிலை என்ன? அவர்களைக் காண்பியுங்கள், விடுவியுங்கள் என்று ஒரு சாரார் கண்ணீர் சிந்த, எந்தவிதக் குற்றமும் இன்றிச் சிறையில் வாடும் தமிழ்க் கைதிகள் தம்மை விடுவிக்கக் கோரி போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்க, அதிகரித்துக் கொண்டிருக்கும் வன்முறைகளையும் துன்பியல்களையும் நிறுத்துங்கள் என்று கோசமும் ஊர்வலங்களுமாக மக்கள் வீதிகளில் இறங்க, இப்போது வலி.வடக்கு மக்கள் பிரச்சினைக்கு ஆறு மாதங்களுக்குள் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதி கூறியுள்ளார்.

### ஜனாதிபதியின் உறுதிமொழி

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக அவர் அளித்திருந்த உறுதி மொழி பின்னர் நிறைவேறமுடியாத நிலை இருந்தது. அதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காரணமாக இருந்தார். இப்போது வலிகாமம் வடக்கு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியும் இறுதியில் நிறைவேறாமல் போவதற்கு பிரதமரோ இராணுவமோ காரணமாவதற்கு ஜனாதிபதி அனுமதிக்கக்கூடாது. இந்த விடயத்திலாவது நல்லாட்சிக்கான ஓர் அடையாளத்தை, சமிக்ஞையைக் காட்ட அவர் திடம் கொண்டவராக வேண்டும். மகிந்த தரப்பினர் வடக்குக்கு வந்து இங்குள்ள மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிய வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழில் இருந்து விடுத்த அழைப்பு நியாயமானதே. காப்பெற் வீதிகளைப் போடுவித்து, அலுங்காமல் குலுங்காமல் நகருக்குள் வந்து சென்ற முன்னைய ஜனாதிபதி மகிந்த, ஒருதடவை குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டால்தான் எவ்வளவுக்கு தமிழ் மக்கள் மீது கொடூரமாக நடந்துள்ளேன் என்பதைத் தெரிந்து கொள்ளுவார் என்பதால்தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவ்வாறானதொரு அறிவிப்பை வெளியிட்டிருப்பார்.

ஒரு நல்ல ஜனாதிபதியாக மட்டுமன்றி, ஒரு நல்ல மனிதராகவும் வாழவிரும்பும் சாதாரண விவசாயி ஒருவரின் மகன், தமிழ் மக்களின் பிரச்சினைகளில் காலத்தை இழுத்தடிக்காது, தமது வாக்குறுதிகளை நிறைவேற்றி, மக்கள் பிரச் சினைகளுக்குத் துரித தீர்வு காண்பதன் மூலம் படுகுழியில் வீழ்ந்து கொண்டிருக்கும் இலங்கையைப் பாதுகாத்த மனிதராக வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டும். இடம்பிடிப்பாரா மைத்திரிபால சிறிசேன?.

## வீதியின் புனரமைப்பு விரைவில் இடம்பெறுமா?

பண்டத்தரிப்புச் சந்தியில் இருந்து சண்டிலிப்பாய்ச் சந்தி வரைக்கும் உள்ள வீதியின் நடுவில் மிகவும் பெரிய குழிகள் நீண்டகாலமாகக் காணப்படுகின்றன. அதைவிட அந்த வீதியானது, மின்கம்பங்கள் இருந்தும் இருளில் மூழ்கியிருக்கிறது. பகல் நேரங்களைவிட இரவு நேரங்களில் இந்த வீதியில் விபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள், பயணிகள், வாகனங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. மக்களின் நலன் மற்றும் நோயாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த வீதியைப் புனரமைத்து தருமாறு இந்த வீதியுடன் தொடர்புபட்ட பிரதேச சபை, பிரதேச செயலர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியோரைத் தயவாகவும் தாழ்மையுடனும் கேட்டுக்கொள்கிறார்கள் அந்த ஊர் மக்கள்.

கு.வைகுந்தன்
சண்டிலிப்பாய் வீதி

## மலத்தொற்றுப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்குமா?

குடாநாட்டின் நிலத்தடி நீரில் மலத்தொற்றும், நைதரேற் இரசாயனமும் கலந்திருப்பதால் அதனை அருந்துவது உகந்ததல்லவெனக் கூறப்பட்டுள்ளது.

இங்கு வீட்டுக்கு வீடு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவுகள் யாவும் நிலத்தின் கீழேயே சேமித்து வைக்கப்படுவதால் நீர் மாசடையக் காரணமாகி விட்டது.

பெருமளவை புத்திஜீவிகள் யாழ்ப்பாணத்தில் இருப்பதாக நாம் பெருமைப்பட்டுக் கொள்கின்றோம். ஆனால் இங்குள்ள நிலத்தடி நீருக்கு ஏற்படப்போகும் பெரும் ஆபத்துத் தொடர்பாக இவர்களால் அனுமானிக்க முடியாமல் போனமை ஏன் என்பதுதான் விளங்கவில்லை. இவர்கள் ஏற்கனவே இது தொடர்பாக எச்சரிக்கை விடுத்து மாற்று நடவடிக்கை எடுத்திருந்தால் இன்று இந்தப் பேரவலம் நடந்திருக்காது.

மக்கள் இன்னும் கூடத் தமது தேவைகருதி புதிது புதிதாக மலசலகூடங்களை அமைத்து வருகின்றனர். இதற்கொரு மாற்றுவழி கிடைக்கும்வரை இது தொடரவே செய்யும்.

ஆகவே. இனியும் காலதாமதம் செய்யாது.மாற்று நடவடிக்கை எடுப்பதுதான் இதற்கான நிரந்தரத் தீர்வாக அமையும்.

- ம.வாசுகி சுழிபுரம்.

## வரணி, பனை அபிவிருத்திச் சபை வீதி புனரமைக்கப்படுமா?

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டவரணி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க வீதி மிக நீண்ட காலமாக (சுமார் 60-70 வருடங்களாக) புனரமைப்புச் செய்யப்படாததால் பிரயாணிகள் மிகவும் இக்கட்டான சூழலில் அந்த வீதியில் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமல்லாமல், இந்த வீதியில் பனை அபிவிருத்திச் சபை அமைந்துள்ளதால் தினமும் பல வாகனங்கள் தேவை நிமித்தம் வரவேண்டியுள்ளது. இது, ஜே/340 கிராம அலுவலர் பிரிவு மக்கள் பாடசாலை மாணவர்கள், அருகில் உள்ள கண்ணகை ஆலயத்துக்கு செல்லும் அடியார்கள் எனப் பலர் பிரயாணம் செய்யும் முக்கிய வீதியுமாகும். தற்போது இந்த வீதியில் பனை அபிவிருத்திச் சபையினர் புதிய கட்ட வேலைகள் அமைக்கவுள்ள நிலையில் கட்டடப் பொருள்களைக்கூட சுலப மாகக் கொண்டுவந்து சேர்க்க பெரும் அவலமுறுவதைக் காணமுடிகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த வீதியையும் அபிவிருத்தி செய்து இத்தனை குறைகளுக்கும்தீர்வுகண்டுபுனரமைப்புசெய்யமுன்வரவேண்டுமென பாதிக் கப்பட்ட மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அ.புவனவதி, வரணி வடக்கு.

## மக்களின் சக்தி உதயனின் கரங்களில்

30 ஆண்டுகால உதயன் பத்திரிகைக்கு வாழ்த்துக்கள். எவர் எவரோ-என்னென்னவோ அறிக்கை விடுகிறார்கள் என்று பயந்து அவன் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மக்களின் சக்தி அவனது கரங்களிலேயே உள்ளது. எனவே அவனால் எந்தவொரு சூழ்நிலையையும் கையாள முடியும். எமது உதயனோ முப்பது ஆண்டுகால அனுபவம் உள்ளவன். சிறந்த தலைமைத்துவத்தால் வழிநடத்தப்படுபவன். எந்தவொரு விடயத்தையும் நன்கு சிந்தித்து நடந்து வந்ததால் அவன் புகழ் கொடிகட்டிப் பறக்கிறது. இவற்றை நான் மிகைப் படுத்தி எழுதவில்லை. எனது அடிமனதிலுள்ள கருத்தையே எழுதுகிறேன். தமிழ் மக்கள் என்னைவிட அனுபவசாலிகள். இதனை அங்கீகரிப்பார்கள் என நம்புகின்றேன்.

சாவகச்சேரியூரான் சி.ஜெயகணேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*அமைப்பில் சேராவிட்டால் கடத்துவோம்*

# ஈராக் அழகிக்கு ஐ.எஸ். மிரட்டல்

40 வருடங்களுக்குப் பின்னர் ஈராக் அழகியாகப் பட்டம் வென்ற இளம் பெண்ணுக்கு இஸ்லாமிய அரசு எனப்படும் ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. தமது அமைப்பில் சேரவேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவரைக் கடத்திவிடுவோம் என்றும் அழைப்பில் பேசியவர் மிரட்டியுள்ளார். 1972ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆண்டுதான் ஈராக்கில் அழகிப் போட்டி நடத்தப்பட்டது. இது இஸ்லாத்துக்குப் புறம்பானது என்று கூறும் ஐ.எஸ்., பெண்கள் ஏனைய ஆடவர்களுக்குத் தமது உடலைக் காண்பிக்கக்கூடாது என்று வலியுறுத்துகின்றது. ஐ.எஸ். அமைப்பின் மிரட்டலால், 20 வயதேயான சாமா காசிம் அப்துல் ரஹ்மான் கவலையடைந்திருக்கிறார். என்றாலும் அவரது அழகிப் பயணம் தொடரும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ)

# போகோஹறத்தின் அட்டூழியம் முடிவு

அபுஜா, டிசெ. 25

நைஜீரியாவில் அட்டூழியம் செய்து வந்த போகோஹறம் அமைப்பினரை நைஜீரிய இராணுவம் தோல்வியடையச் செய்துள்ளதாக அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்துள்ளார். "அவர்கள் இனி முன்பு போன்று செயற்பட முடியாது. பொது மக்களுக்கோ இராணுவத்தினருக்கோ அவர்களால் அச்சுறுத்தல் இருக்காது. தாக்குதல் நிகழாது" என அவர் மேலும் தெரிவித்தார்.

தொழில்நுட்ப ரீதியிலான எமது பலமே நாம் போரில் வெல்லக் காரணம் எனவும் அதிபர் மொகம்மது புகாரி தெரிவித்தார். மேம்படுத்தப்பட்ட வெடிபொருள்களைக்கொண்டு மட்டுமே இனி அவர்களால் தாக்குதல் நடத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

நைஜீரியாவின் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் 6 வருடங்களாக போகோஹறம் படையினர் பெரும் அட்டூழியங்களில் ஈடுபட்டு வந்தனர். இஸ்லாமிய அடிப்படைவாதத்தைப் பரப்புவதாகக் கூறிக்கொண்டு மக்களை வதைத்தனர்.

இடம்பெற்ற போரில் 17 ஆயிரம் பேர் உயிரிழந்ததுடன் 2 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வீடுகளை விட்டு வெளி



யேறியுள்ளனர். ஜிகாதிகள் எனத் தங்களை அழைத்துக் கொண்ட போகோஹறம் படையினர் தற்கொலைத் தாக்குதலின்மூலம் இராணுவத்தினரைத் தாக்கி வந்தனர். இப்போது அதுவும் தடுக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

அவர்களுக்கு எதிரான தொடர் நடவடிக்கைகளின் பின்னர் இப்போது அவர்களின் பூர்வீகமான பொர்னோ மாநிலத்திற்குள் அவர்கள் முடக்கப்பட்டுவிட்டார்கள் என்று ஜனாதிபதி புகாரி தெரிவித்தார்.

"நைஜீரியா மீள் ஒழுங்கமைக்கப்பட்டு சீரமைக்கப்படவுள்ளது. போரை நடத்துவதற்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் எமக்கு உதவின. அந்த நாடுகளின் பயிற்சியும் வழிகாட்டலும் இந்தப் போரில் வெல்ல எமக்கு உதவின" என்றார் அதிபர். (உ-ரி4)

# அருமையான கண்டுபிடிப்பு

சாதாரண தண்ணீரை பழச்சாறு, சோடா போன்ற பானங்களின் சுவையோடும் நறுமணத்தோடு குடிக்க முடியுமா?

முடியும் என்கிறார் ஐசாக் லாவி. 'ரைட் கப்' என்ற பெயரில் பிளாஸ்டிக் கப்களை உருவாக்கியிருக்கிறார் ஐசாக். இந்த கப்பில் தண்ணீர் ஊற்றிக் குடித்தால் சுவையாகவும் நறுமணத்துடனும் இருக்கும். நாம் சாப்பிடும் உணவுகளின் சுவையை எமக்கு 80 சதவிகிதம் தெரிவிப்பது நறுமணம்தான். மூக்கையும் கண்களையும் மூடிக்கொண்டால் எந்தச் சுவையையும் சரியாகச் சொல்ல முடியாது என்று கூறும் அவர் பிளாஸ்டிக் கப்களில் நறுமணத்தைக் கலந்து உருவாக்கி யிருக்கிறார்.

தண்ணீர் ஊற்றிக் குடிக்கும்போது கப்களில் உள்ள நறுமணம் மூக்குக்கு வரும். சாதாரண தண்ணீரைச் சுவைக்கிறோம் என்றே தெரியாது. நறுமணத்தை உணர்ந்த மூளை, அது சுவை-யான பானம் என்று நம்பிவிடுகிறது. ஒரு கப்பின் ஆயுள் காலம் 6 மாதங்கள். அதற்குப் பிறகு வேறு ஒரு கப் வாங்க வேண்டியதுதான். "எனக்கு நீரிழிவு நோய் வந்தது. மருத்துவர் இனிப்பு நிறைந்த எந்தப் பானத்தையும் குடிக்கக் கூடாது என்று கூறிவிட்டார். வெறும் தண்ணீர் எனக்கு சலிப்பைத் தந்தது. இதற்கு ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். 6 ஆண்டுகள் தீவிரமான ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, வெற்றிகரமாக 'ரைட்' கப்பை உருவாக்கிவிட்டேன். உடல் நலத்துக்கும் தீங்கில்லை என்கிறார் ஐசாக்.

# ஆத்திரமூட

## மன்னிப்புச் சபை அறிக்




சிரியாவில் ரஷ்யா நடத்திய நேரடித் தாக்குதல்களில் 200 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் இது போர்க் குற்றமாகக் கொள்ளப்படத்தக்கது என்றும் தெரிவித்து சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த கடைசி அறிக்கையை "ஆத்திர-மூட்டும்" செயல் என்று கண்டித்துள்ளது ரஷ்யா.

ரஷ்யாவின் தாக்குதலில் எந்தப் பொதுமகனும் கொல்லப்படவில்லை என்று ரஷ்ய பாதுகாப்பு மற்றும் காவல் குழுவின் தலைவர் விக்டர் ஒசேரோவ் தெரிவித்தார். சிரியாவில் ரஷ்யா எடுத்துள்ள வகிபாகம் குறித்து சர்வதேச சமூகத்திடம் மறைப்பதற்கு ரஷ்யாவிடம் எதுவுமேயில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

தாக்குதல் இலக்குகளை மற்றைய நாடுகள் கண்காணிப்பது மிக இலகு என்று குறிப்பிட்டுள்ள அவர், பொதுமக்கள்

> ரஷ்யா சிரியாவில்
> தீவிரவாத நடவடி
> ஆத்திரமூட்டும் மற்றொரு
> பாதுகாப்பு மற்றும் காவல்
> தலைவர் விக்டர் ஒசேரோ

இலக்கு வைக்கப்பட்டிருந்தா
ஐ.நா. ஊடாகவே அவர்க
இது தொடர்பில் முறையிட
ருக்க முடியும், அறிக்கை
ஊடாக அல்ல என்று அவ
மேலும் தெ[illegible]த்தார்.
"நாம் சிரியாவில் மேற்கொண்
வரும் எதிர்த் தீவிரவாத நடவடி



உலகிலேயே கிறிஸ்தவர்கள்தான் பாதிக்கப்பட்ட மக்கள் என்று தெரிவித்திருக்கிறார் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் திருச்சபையின் தலைவர் கார்டினல் வின்செண்ட் நிக்கோலஸ். புருணேயில் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு விதிக்கப்பட்ட தடையைச் சுட்டிக்காட்டிய அவர். இதுபோன்ற பல அச்சுறுத்தல்கள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன என்றார். புத்திசாலித்தனம் அது இது என்பதை விட்டுவிட்டு கிறிஸ்தவர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். கிறிஸ்தவர்கள் என்பதற்காக பெண்கள் பாலியல் அடிமைகளாக்கப்படுவதற்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# படகு கவிழ்ந்ததில் 13 அகதிகள் சாவு

## *கிறீஸில் பரிதாபச் சம்பவம்*

கிரீஸ் நாட்டுக் கடல் பகுதியில் அகதிகளை ஏற்றிச் சென்ற சிறிய படகு கவிழ்ந்ததில் 7 குழந்தைகள் உள்ளிட்ட 13 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து கடலோரக் காவல் படையினர் கூறும்போது, துருக்கியிலிருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கி சென்றுகொண்டிருந்த சிறிய பிளாஸ்டிக் படகொன்று கிரீஸ் கடல் பகுதியில் திடீரென விபத்தில் சிக்கியது.

இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்தில் தேடுதல் வேட்டை நடத்தியதில் 13 பேரை சடலமாகவும், 15 பேரை உயிருடனும் மீட்டுள்ளோம். மேலும் காணாமல்போனவர்களைத் தேடி வருகிறோம் என்றார்.

# தீயில் உடல் கருகி 25 பேர் இறப்பு; சவூதி மருத்துவமனையில் சோகம்

சவூதி அரேபிய மருத்துவமனையில் ஏற்பட்ட தீவிபத்தில் 25 பேர் உயிரிழந்தனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். ஜாசன் பொது மருத்துவமனையில்தான் இந்தப் பரிதாப விபத்து இடம்பெற்றது.

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜாசன் மருத்துவமனையில் முதல் தளத்தில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்றுச் சிகிச்சைப் பிரிவில் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளது. 107 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் தனியார் மருத்துவமனைகளிலும், அரசு மருத்துவமனைகளிலும் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணத்தை அறிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொரு
# அமெ.

## ஊழல் .ஒழி

பீஜிங், டிசெ. 25
ஊழல் குற்றங்
அமெரிக்காவுக்கு
தாரத் தப்பியோடி
அனுப்ப வேண்
யுள்ளது சீனா.
[illegible]னாவின் [illegible]
பிங் நடைமுறை
வில் இருந்து ஊ
வடிக்கையின்
கோரிக்கை எழுப்
"ஊழல் ஒழிப்பி
கவனமெடுத்து
உள்நாட்டு நடவடி
பட்டுள்ளன. அதே
குத் தப்பியோடிய
கொண்டு வருவ
சம்பந்தப்பட்ட அ
கின்றோம். சட்ட
சம்பாதித்தவற்
சிக்கின்றோம்.
வேண்டும். அவ
நாடும் இடமளிக்
ரிக்கத் தலை
உள்ள சீன தூத
வான் தெரிவித்த
சீனாவில் அரச
கும் உள்ளூர்

# தென்ஆபிரிக்கத
# வடகொரிய அதி

பிரிட்டோரியா, டிசெ.25

காண்டா மிருகக் கொம்பை சட்ட விரோதமாக விற்பனை செய்த குற்றச்சாட்டில் வட கொரிய தூதரக அதிகாரி தென் ஆபிரிக்காவில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். நாட்டின் வெளியுறவுச் செயலக அதிகாரிகள் இதனை உறுதிப்படுத்தினர்.

நாட்டைவிட்டு வெளியேற்

றப்பட்ட குறித்த தூத
அதிகாரி கடந்த மே
மொசம்பியாவில்
செய்யப்பட்டார். கா
மிருகக் கொம்பு வி
யில் சட்டவிரோதமா
டார் என் அவர் மீது
சாட்டப்பட்டது. ஆசி
கறுப்புச் சந்தையில் கா
மிருகக் கொம்பு அ
விலைக்கு விற்கப்ப
விசேடமாக மருத்து

# ...ட்டும் செயல்

## ...றிக்கைக்கு ரஷ்யா பதில்



...யாவில் மேற்கொண்டுவரும் எதிர் ...நடவடிக்கையை விரும்பாத சிலரின் ...றொரு செயல் இது என்றார், ரஷ்ய ...காவல் குழுத் ...சேரோவ்.

...ருந்தால் ...அவர்கள் ...றையிட்டி ...அறிக்கை ...று அவர் ...ர். ...கொண்டு ...த நடவடிக்

...க்கையை விரும்பாத சிலரின் ஆத்திரமூட்டும் மற்றொரு செயல் இது" என்றார் அவர்.

கடந்த செப்ரெம்பர் 30ஆம் திகதி முதல் சிரியாவில் ரஷ்யா நடத்திய தாக்குதல்களில் சந்தேகத்திற்குரிய 25 வான் தாக்குதல்களை அலசி ஆராய்ந்து 28 பக்க அறிக்கை ஒன்றை விடுத்திருந்தது சர்வதேச மன்னிப்புச் சபை. அதில் பாதிக்கப்பட்டவர்களின் நேரடியான செவ்விகள், வாக்குமூலங்கள் என்பனவும் வெளியிடப்பட்டிருந்தன.

இந்தத் தாக்குதல்களில் பல பொதுமக்கள் இலக்குகள் மீது நடத்தப்பட்ட தெளிவான தாக்குதல்கள் என்று மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டுகின்றது. கிளர்ச்சிப் படைகள் இல்லாத இடங்கள், பொதுமக்கள் மட்டுமே இருக்கின்றனர் என்று உறுதிப்படுத்தப்பட்ட இடங்கள்கூடத் தாக்கப்பட்டதாக அறிக்கை குறிப்பிட்டுக் காட்டுகின்றது. பல தாக்குதல்களின்போது கிளர்ச்சியாளர் மீதான தாக்குதல்களில் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய சேதங்கள் குறித்து கவனத்தில் கொள்ளப்படவே யில்லை என்றும் அறிக்கைகுற்றஞ்சாட்டுகிறது. ஒவ்வொரு கிளர்ச்சியாளரையும் வெற்றிகரமாகக் கொல்ல 16 பொது மக்களை ரஷ்ய தாக்குதல்கள் கொன்றுள்ளதாக அறிக்கை முடிவு செய்துள்ளது. (உ)

## ...ாருளாதார தப்பியோடிகளை ...மெ. திருப்பி அனுப்பவேண்டும்

### ...ல் ஒழிப்பின் ஒரு பகுதியாக சீனா வலியுறுத்து

...செ. 25

...குற்றங்களைச் செய்துவிட்டு ...காவுக்குத் தப்பியோடிய "பொருளா...ப்பியோடிகளை" அந்த நாடு திருப்பி ...வேண்டும் என்று வலியுறுத்தி ...சீனா.

...ன் ...போதைய அதிபர் சி ஜின் ...டைமுறைப்படுத்தி வரும் 'சீனா ...நந்து ஊழலை ஒழிப்போம்' நட...யின் ஒரு பகுதியாக இந்தக் ...கை எழுப்பப்பட்டுள்ளது.

...ஒழிப்பில் சீனா அரசு பெரும் ...மடுத்து வருகிறது. அதற்கான ...டு நடவடிக்கைகள் முடுக்கி விடப் ...ன. அதேநேரம் வெளிநாடுகளுக் ...யோடிய குற்றவாளிகளைத் திரும்பக் ...டு வருவதற்கு அந்த நாடுகளின் ...ப்பட்ட அதிகாரிகளுடன் பேசி வரு...ம். சட்டவிரோதமாக அவர்கள் ...ந்தவற்றை திரும்பப் பெற முயற்...றோம். அவர்கள் தண்டிக்கப்பட ...ம். அவர்களுக்கு எந்தவொரு ...இடமளிக்கக்கூடாது" என்று அமெ... தலைநகர் வொஷிங்ரனில் ...சீன தூதரக அதிகாரி சூ கைகு- ...தரிவித்தார்.

...ல் அரச பங்களிப்புடன் வெளியா...ள்ளூர் பத்திரிகையான சைனா டெய்லிக்கு "முக்கியமான 5 பொருளாதார தப்பியோடிகளை நாட்டுக்குத் திரும்ப அழைத்துவருவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன" என்று ஊழல் ஒழிப்புத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்ததைத் தொடர்ந்தே தூதரக அதிகாரியிடம் இது தொடர்பில் வினவப்பட்டது. பொருளாதார திருடர்களின் நாடு கடத்தலுக்காகத் தாம் காத்திருக்கின்றனர் என்றும் அந்த அதிகாரி சைனா டெய்லியிடம் தெரிவித்திருக்கிறார்.

சீனாவினுடைய ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் பலர் பெருந் தொகைப் பணத்துடன் அமெரிக்கா போன்ற வெளிநாடுகளுக்குத் தப்பியோடி விட்டார்கள், அல்லது சொத்துக்களை அங்கு மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று நம்பப்படுகிறது. தற்போதைய அதிபர் சி ஜிங்பின் ஊழல் ஒழிப்புத் திட்டம் இத்தகையவர்களைக் குறி வைத்து இயங்குகின்றது.

இவ்வாறான பொருளாதாரத் திருடர்கள் எத்தனை பேர் அமெரிக்காவில் தஞ்சமடைந்துள்ளனர் என்பது தெளிவில்லை. குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்வது தொடர்பான ஒப்பந்தங்கள் எவையும் அமெரிக்கா - சீனா இடையே இதுவரையில் இல்லை. எனவே இது சாத்தியமானதா என்கிற கேள்வி நிலவுகிறது. (உ)

## ...கத் தூதரகத்திலிருந்து ...அதிகாரி வெளியேற்றம்

...த்த தூதரக ...ந்த மே மாதம் ...ாவில் கைது ...டார். காண்டா...ாம்பு விற்பனை ...ரோதமாக ஈடுபட் ...வர் மீது குற்றஞ் ...து. ஆசியக் ...தையில் காண்டா...ாம்பு அதிக ...விற்கப்படுகிறது. ...மருத்துவ பாவனைக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. கைது செய்யப்படும்போது வடகொரிய அதிகாரி 4.5 கிலோ எடையுள்ள காண்டாமிருகக் கொம்புகளையும், 99 ஆயிரத்து 300 அமெரிக்க டொலர் காசையும் தனது வாகனத்தில் வைத்திருந்தார் என்று தென்கொரிய அதிகாரிகள் கூறினர்.

பின்னர் அவர் 30 ஆயிரம் அமெரிக்க டொலர் பிணையில் விடுவிக்கப்பட்டார். வட கொரிய தூதரக அதிகாரிகள் மீது இது போன்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது இது முதல் தடவையல்ல. பல தடவைகள் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த மார்ச் மாதமும் பங்களாதேஷில் தங்கம் கடத்திப் பிடிபட்டனர்.உ-ரி4)

# 5,000 ஆண்டுகளுக்கு முன்பே பச்சை குத்திய கற்கால மனிதன்

## புதிய ஆய்வில் தகவல்



ஒடிசியின் உடல் தற்செயலாகவே கண்டுபிடிக்கப்பட்டது.

ரோம், டிசெ.25

ஒட்சி எனப்படும் கற்கால பனி மனிதனின் உடலில் காணப்படும் அடையாளங்களே மனித நாகரிகத்தின் பச்சை குத்துதலுக்கான மிகப் பழைய ஆரம்பம் என்று புதிய ஆய்வுகள் கூறுகின்றன.

இதன் மூலம் 5 ஆயிரத்து 300 வருடங்களுக்கு முன்பே மனிதன் தனது உடலில் பச்சை குத்தியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தாலி நாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள தன்னாட்சி அதிகாரமுள்ள தென் ரைரோல் மாகாணத்தின் பனிக்குன்றுப் பகுதியில் 1991ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி ஒடிசி கண்டுபிடிக்கப்பட்டது. உலகிலேயே அதிகம் ஆய்வு செய்யப்பட்ட உடலம் என்று ஒடிசி வர்ணிக்கப்படுகிறது. அது ஐரோப்பிய கற்கால மனிதனுக்குரிய பெரும் ஆதாரம் எனப்படுகிறது.

அதனது உடலத்தின் 19 உறுப்புகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து பல்வேறு இடங்களிலும் பச்சை குத்தப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 61 இடங்களில் பச்சை குத்திய அடையாளங்கள் உள்ளன.

### முன்னைய பச்சை

சிலி நாட்டின் எல் மோரோ என்ற பகுதியில் 1983ஆம் ஆண்டு தொல்பொருள் ஆய்வாளர்களால் இயற்கையாகவே பதனப்பட்ட 96 உடல்கள் (மம்மி) கண் டெடுக்கப்பட்டன. அவற்றில் ஒரு மம்மியின் மேலு தட்டில் 8 பச்சைப் புள்ளிகள் இருப்பதை ஆய்வாளர் கள் கண்டு பிடித்தனர். செஞ்சிரோ என அந்த மம்மிக்குப் பெயரிடப்பட்டது. அதன் வலப்புறம் 4 இடப்புறம் 4 என்ற ரீதியில் அவை குத்தப்பட்டிருந்தன. இதுவே உலகின் பழமையான பச்சை குத்தும் முறைக்கு ஆதாரமாக இதுவரை இருந்து வந்தது. தென்அமெரிக்காவின் பெரு நாட்டில் இருந்து சிலி வரையான கரையோரத்தில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட 9000 ஆண்டுகள் முதல் 3100 ஆண்டுகள் வரையான காலப் பகுதியில் வாழ்ந்த மீனவ சமூகத்தைச் சேர்ந்தவர்களது உடலங்களே இவை என ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.

### ஒடிசி பழமையானது

ஆரம்பத்தில் ஒடிசி 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று கணிக்கப்பட்டது. ஆனால் ஒடிசி கி.மு. 3 ஆயிரத்து 370 முதல் 3 ஆயிரத்து 100 வரையான காலப்பகுதியில் இறந்திருப்பது ரேடியா கோர்பன் சோதனைகள் மூலம் தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ஒடிசி 5,100 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்கி றார்கள் ஆய்வாளர்கள். அதற்கு முன்னர் முழுமையாக உடலை மறைக்கும் ஆடைகள், நன்கு தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள், நன்கு விருத்தியடைந்த உடலமைப்பு என்பவற்றுடன் எந்தக் கற்கால உடலமும் மீட்கப்பட்டிருக்கவில்லை.

1992 செப்ட் 25ஆம் திகதி மீண்டும் ஆய்வுகளை நடத்தினார்கள். அதில் ஒடிசியின் பல ஆயுதங்கள் கிடைக்கப்பெற்றன. அதில் செப்பு கூர் அலகுகளால் தயாரிக்கப்பட்ட கோடலி மிக முக்கியமானது. (உ)



உலகிலேயே அதிகம் ஆய்வு செய்யப்பட்ட உடலம் ஒடிசியினுடையது தான்.



கடும் சண்டையில் காயமடைந்ததில் அதிக குருதி வெளியேறியே ஒடிசி உயிரிழந்துள்ளார்.



அக்குபங்சர் பாதையை ஒட்டி பச்சை குத்துதலும் இடம்பெற்றிருக்கின்றன.



கண்டுபிடிக்கப்பட்ட ஒடிசியின் கோடரி 23 நிமிடங்களில் ஒரு பெரிய மரத்தை வெட்டும் வல்லமை கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளை வாரி வழங்கும் பன்றித் தலைச்சி அம்பாள் ஆலயம்

## இன்று ஆலயத்தின் தேர்த் திருவிழா

தென்னவன்

பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயம் என்றால் இந்துமக்கள் அனைவராலும் நினைவு கூரப்படுவது ஆலயத்தின் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவமாகும். பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் பக்தர்களின் பொங்கல் வழிபாட்டின்போது எழும் புகை, யாகசாலையில் எழும் புகை மண்டலத்துக்கு மேலானது என முன்னோர்கள் கூறுவார்கள். பங்குனி மாதத்தில் வரும் திங்கட்கிழமைகளில் யாழ்.குடா நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் அம்பாள் அடியார்கள், அந்தக் காலத்தில் மாட்டு வண்டில்களிலும், காலப்போக்கில் வாகனங்களிலும் வருகை தந்து தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றி விட்டுச் செல்வார்கள் . அன்னையின் திருத்தலத்துக்குஒருமுறைவருகைதந்தவர்கள், அதன் பின்னர் வருடத்தில் ஒருநாளாவது வராமல் சென்றது கிடையாது. அந்த அளவுக்கு அருள்வழங்கும்தெய்வமாகபன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் காட்சி தருவாள்.

### அடியார்களின் கூட்டம்

அந்தவகையில்,பிரசித்திபெற்றஅன்னைக்கு நடைபெறும் திருவிழாவைக் காணவரும் அடியார்களின் எண்ணிக்கை, கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தத் திருவிழா வரை அதிகரித்துச் செல்லுமே, தவிர குறைவடையாது. பன்றித்தலைச்சி கண்ணகை அம் பாளின் அருளுக்காக அலை மோதும் பக்தர் கூட்டம் பன்னெடுங் காலமாக இருந்து வருகிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் 250 வருடங்கள் பழைமை வாய்ந்த கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு ஆலய முகாமையாளராகவிருந்த அமரர் சின்னப்பா சிவ குரு என்பவரால் கடந்த 1946 ஆம் ஆண்டு பெரும் திருவிழாவுக்கு வழிசமைக்கப்பட்டு இன்று வரை எந்தவித குறையுமின்றி சிறப்பாக இடம்பெற்று வருகிறது.

### வெண்கற்களால் மூலஸ்தானம்

நீண்டகாலம் பழைமைவாய்ந்த பன்றித் தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் தற்போதைய இடத்தில் மூலஸ்தானம் வெண்கற்களால் அமைக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு வைகாசி 22 ஆம் திகதி வரை அமைந்திருந்தது.



1750 ஆம் ஆண்டு நாகர் கதிர்காமர் என்பவர் வெண்கற்களால் ஆலயத்தை அமைத்து பரம்பரையாகப் பூசை செய்து வந்தார். 1900 ஆம் ஆண்டு வேலாயுத உடையாரின் மகனான கதிர்காமர், கோயில் நிர்வாகத்தையும் பூசை முறைகளையும் ஏற்று முன்னைய சில முறைகளில் மாற்றங்களை மேற்கொண்டார். அந்தவேளையில் ஆலய வளாகத்தில் காணப்பட்ட அம்பாள், முருகப்பெருமான், பிள்ளையார், வைரவர் ஆலயங்களுக்கு பிராமணப் பூசகர்கள் மூலம் பூசைகள் செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்த வருடத்திலிருந்தே பங்குனித் திங்கள் பொங்கல் வேளைகளில் சுவாமி வெளி வீதி வருதல் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலத்தில் தினமும் ஆல யத்துக்கு விளக்கு வைத்தலுடன் பூசை நிறைவு பெறும்.

> அன்னையின் திருத் தலத்துக்கு ஒரு முறை வருகை தந்தவர்கள் அதன் பின்னர் வருடத்தில் ஒருநாளாவது வராமல் சென்றது கிடையாது.

1919 ஆம் அண்டு கதிர்காமரின் மகள் சின்னக்குட்டியும் அவரது கணவரான சின்னத்தம்பி சின்னப்பாவும் ஆலயபரிபாலகர்களாக பொறுப்பேற்றனர். அதன் பின்னர் இவர்களது மகனான சின்னப்பா செல்லத்துரை நிர்வாகத்தைக் கையேற்ற பின்னர் பல மாற்றங்களை கொண்டு வந்தார்.

### பூசைகளில் மாற்றம்

ஆரம்பத்தில், திங்கட்கிழமைகளில் அம்பாளுக்கு இருநேரப் பூசைகளும், ஏனைய நாள்களில் அபிசேகத்தடன் விளக்கு வைத்தலும் மாத்திரம் நடைபெற்றுவந்த முறைமையை மாற்றியமைத்து தினமும் இரண்டு நேர நித்திய பூசை செய்யும் வழக்கம் 1939 ஆம் ஆண் டிலிருந்து நடைமுறைக்கு வந்தது. சின்னப்பா செல்லத்துரை பரிபாலகராக இருந்த காலத்திலேயே ஆலயச் சுற்றாடலில் கண்ணகை அம்பாளுக்கு அர்த்தமண்டபம், மகாமண்டபம், தரிசனமண்டபம் போன்றவை அமைக்கப்பட்டன.

அதன் பின்னர் அவரது சகோதரரான சின்னப்பா சிவகுரு ஆலய பரிபாலகர் பொறுப்பை ஏற்றபின்னர், ஆலயத்தில் பல்வேறு முறைமைகள் ஆரம்பிக்கப்பட்டன எனலாம். 1943 ஐப்பசி 18 ஆம் திகதி நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்த சிவகுரு ஐயா 1946 ஐப்பசி மாதம் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் கண்ணகை அம்பாளுக்கு தாமிர விக்கிரகம் பிரதிஷ்டை செய்து மகாகும்பாபிசேகம் முதன்முதலாகச் செய்ததுடன் அந்த வருடத்தில் மார்கழி திருவெம்பாவையில் கொடியேற்றத் திருவிழாவையும் ஆரம்பித்து வைத்தார்.

---

# மனித நேயத்தின் - இமயம் எட்டாவது வள்ளல் எம்.ஜி.ஆர்.

வ.இ.செல்வக்குமார்,

உலகத்தில் எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் நிகழ்ந்திராத அற்புதங்களும் அர்ப்பணிப்புக்களும் எமது ஈழ மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. பலர் சரித்திரத்தில் இருக்கிறார்கள். சிலர் சரித்திரமாகவே இருக்கின்றார்கள். ஒரு மனிதனின் நிழல் மாத்திரம் தான் அவனைப் பின் தொடரும் என கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆயிரத்தில் ஒருவ னாக நடித்த மனித நேயத்தின் இமயமாக, எட்டாவது வள்ளலாக பலரது இதயங்களில் வாழும் மனிதப் புனிதர் எம்.ஜி.ஆர்.

### தனக்காக வாழ்ந்தவர்

தனக்காக மட்டும் வாழும் மனிதர்களை, காலவெள்ளம் சுவடுகள் அற்றுப் போகுமாறு செய்திருக்கின்றது. பிறருக்காக, மக்களுக்காக, தாய் திருநாட்டின் நலன்களுக்காக வாழ்ந்தவர்கள் உடல் மறைந்தாலும் அவர்களின் புகழ் குன்றாமல் என்றென்றும் நிலைத்து நிற்கிறது. தன்னிடம் உதவி கேட்டுவந்தவர்களுக்கு இல்லையென்று சொல்லாமல் அள்ளிக் கொடுத்தவர் இந்த வள்ளல். பூவுலகில் எழுபது வருடம் பதினொரு மாதங்கள் ஏழு நாள்கள் வாழ்ந்த காலப் பகுதி தமிழினத்தின் ஏழை எளிய சாதாரண சாமானிய மக்களின் பொற்காலம். அந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற சம்பவங்களின் சில பகுதிகள் மட்டுமே முதலா வது பகுதியாக அமைகிறது.

> காலம் தமிழினத் துக்கு வழங்கிய இந்த கற்பக விருட்சத்தை கணக்கிடாத கண மணிப் பெட்டகத்தைப் பற்றி அலுப்பில் லாமல் காலம் உள்ளவரை கைவலிக்க எழுதிக் கொண்டே இருக்கலாம்.

எம்.ஜி.ஆரின் குணங்களிலேயே அனைவராலும் போற்றப்பட்டது, அவரது மனித நேயம் தான். 1958 இல் வெளிவந்த 'தூங்காதே தம்பி தூங்காதே' (நாடோடி மன் னன் திரைக்காவியத்தில் வெளிவந்தது) என்ற அந்தப் பாடலை படத்துக்காக எழுதியவர் திரைப்படப் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஆவார். திரைப்படத் துறை யில் நன்றாக வளர்ந்து கொண்டிருந்த நேரத்தில் 1960 இல் இளம் வயதில் அவர் இறந்து விட்டார். அவருடைய குடும் பத்தினரை நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறி உத வியாக பெரிய தொகை நிதியை அளித்ததோடு மட்டு மல்லாது அந்தப் படத்தின் பாடல்களின் உரிமையையும் அவர்களுக்கு அளித்தவர், எம்.ஜி.ஆர்.

### உணவுக்கு அல்லற்பட்டவர்

எம்.ஜி.ஆர். சென்னை நகரில் மத்திய நிலையம் அருகில் உள்ள ஒரு வீட்டில்தான் தாய், சகோதரர் சக்கரபாணி ஆகியோரோடு வசித்து வந்தார். எம்.ஜி.ஆர். அன்றாடச் சாப்பாட்டுக்கே சில சமயம் கஷ்டப்பட்ட நேரம் அது. அன்னை சத்தியாவிடம் ஒருபிடி அரிசியைக் கொடுத்து கஞ்சி வைச்சு பிள்ளைகளுக்குக் கொடுங்க என்று சொன்னார், பக்கத்து வீட்டுஅம்மா. ஆனால், அவரிடம் அந்த அரிசியைப் பெற்றுக் கொள்ளவில்லை அன்னை சத்தியா. ஒரு ஜப்பானிய தம்பதியினர் வீட்டில் சமையல்காரராகப் பணிபுரிந்து வந்த ராமன் குட்டி என்றகுடும்பநண்பர்எம்.ஜி.ஆருக்கு ஐந்து ரூபா கொடுத்து உதவினார். அந்தப் பணத்தில் அரிசி வாங்கி குடும்பமே சாப்பிட்டது. எம்.ஜி.ஆர் அதனை மறவாது நினைவில் வைத்திருந்தார்.

### நன்றி மறவாத பண்பாளவர்

சிறந்த நடிகராகிய பின்பும் அவரைத் தேடினார் எம்.ஜி.ஆர். எங்கு தேடியும் அவர் கிடைக்கவில்லை. ஜப்பானியப் பெண் ஒருத்தியை திருமணம் செய்து அந்த நண்பர் ஜப்பானுக்கே சென்று விட்டதாகப் பின்னர் அறிந்து கொண்டார். "உலகம் சுற்றும் வாலிபன்" படத்துக்காக ஜப்பான் தலைநகரம் டோக்கியோ சென்றபோது "நாயர் ரீஸ்டால்" என்ற தேநீர் கடையைப் பார்த்ததும் வியந்து போனார். காரை நிறுத்தச் சொல்லி உள்ளே சென்று விசாரித்தார் எம்.ஜி.ஆர். பல ஆண்டுகள் தேடிய குடும்ப நண்பர் தேநீர்க் கடை உரிமையாளர் ராமன் குட்டி தான் என அறிந்ததும் எம்.ஜி.ஆருக்கு ஒரே மகிழ்ச்சி. வயதாகிவிட்ட போதிலும், ராமன்குட்டிக்கு எம்.ஜி.ஆர். மீது பாசம் குறையவே இல்லை. எம்.ஜி.ஆரின் வாழ்க்கை விடயங்கள் பற்றிக் கேட்டறிந்து மகிழ்ந்தார். தனது திருப்திக்கு அவருக்கு வேண்டிய பணம் கொடுத்த போதுதான் தனது மனம் நிறைவாக இருப்பதாகக் கூறினார். நன்றி மறவாமல் பல ஆண்டுகள் சென்றாலும், வேறுநாடு சென்றிருந்த போதும் தனக்கு உதவியவரைத் தேடிப் பணம் கொடுத்து மகிழ்ந்தவர் எம்.ஜி.ஆர்.



ஆயிரம் யுகங்கள் ஆனாலும் அம்மா என்கின்ற அமுதச் சொல் அலுத்துப் போய்விடுமோ? அதுபோல் ஆயிரம் கைகள் மறைத்துத் திரை போட்டாலும், ஆதவனை அப்புறப்படுத்தி விடமுடியுமோ! அப்படித்தான் ஒப்புவமை இல்லாத ஈடு இணையற்ற இதிகாச நாயகன் பாரி, ஓரி, காரி, பேகன், நள்ளி, ஆய், அஞ்சி என்கிற ஏழு வள்ளல்களோடு எட்டாவது வள்ளலாக சரித்திரத்தில் வாழ்பவர் எம்.ஜி.ஆர்.

காலம் தமிழினத்துக்கு வழங்கிய இந்த கற்பக விருட்சத்தை, கணக்கிடாத கணமணி பெட்டகத்தைப் பற்றி அலுப்பில்லாமல் காலம் உள்ளவரை கைவலிக்க எழுதிக் கொண்டே இருக்கலாம்.

நடிப்பதைத் தொழிலாகவும், கொடுப்பதைக் கொள் கையாகவும் கொண்டிருந்தவர் எமது கோமான் மனிதர்களுக்கு தசைகளால் மட்டுமே உடல் அமைந்திருக்கும். எமது வள்ளலுக்கு மட்டுமே தங்கம் கரைத்து வார்த்துப் பிர்மன் பிரத்தியேகமாக இதயத்தால் மேனி செய்தான்.

(தொடரும்....)

*கட்டுரையாளர் எம்.ஜி.ஆர். முன்னேற்றக் கழகத்தின், (வடபிராந்தியம்) தலைவராவார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபாரத் தமிழ்ஞானம் வளர்த்த குமாரசாமிப் புலவர்

கே.எஸ்.சிவஞானராஜா

தமிழன்னைக்கு மகுடம் சூட்டிய, இலக்கண இலக்கிய ஞானபானுவே சுன்னாகம் அ.குமாரசுவா மிப் புலவர் ஆவார். இவருடைய வரையான காலம், காலமான 1855 தொடக்கம் 1922 தமிழன்னை பூப்படைந்த காலம் என்று சொல்லலாம். காரணம், இவர் தமிழை அரவணைத்து இன்பம் கண்டதுபோல வேறுயாருமே சுகம் கண்டிருக்க மாட்டார்கள். தமிழைத் தோண்டத் தோண்டத் தான் தமிழமுது கிடைக்கும். நாம் தோண்டுவதும் இல்லை. தேடுவதும் இல்லை. எழுதுவதும் இல்லை. வாசிப்பதும் இல்லை. பார்ப்பதும் இல்லை. 1916 இலும், 1951 இலும் புலவரக வெளியீடாக, யாழ்ப்பாணம் சைவப்பிரகாச இயந்திர சாலையில், க.முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையால் பதிக்கப்பட்ட, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரின் தமிழ்ப்புலவர் சரித்திர நூலை எவராவது பார்த்திருப்பீர்களாயின், தமிழன்னை பூரித்திருப்பாள். கிட்டத்தட்ட 208 புலவர்களை அதில் ஆவணப்படுத்தியுள்ளார். இத்தகு பணி வணங்குவதற்கு உரியது. நாம் எம்மை ஆவணப்படுத்திக் கொள்வதில் வெற்றியடைந்துள்ளோம். குமாரசாமிப் புலவரோ தமிழை ஆவணப்படுத்தி, நாம் படித்தின்புற, அர்த்தபுஷ்டியோடு படைத்துள்ளார். இவரது அத்திபாரங்களிலிருந்துதான் பல்கலைக்கழகங்கள் தமிழன்னையை அலங்கரித்து வருகின்றன. ஒவ்வொரு புலவர்களையும் மறப்பதில் எம்மைவிடக் கெட்டிக்காரர்கள் இருக்கிறார்களா என்பதை அறியமுடியாமல் இருக்கிறது.

### பிறப்பு

யாழ்ப்பாணம் உடுவிலில் வசித்த சிவபக்தி அடியவரான அம்பலவாணப்பிள்ளை என்பவருக்கும், சிதம்பரம் அம்மையாருக்கும் அருந்தமிழ்ப் புதல்வராக, 1855 ஆம் ஆண்டு, தை மாதம், 18 ஆம் திகதி, சுன்னாகத்தில் பிறந்தார். இவரது தந்தையாராகிய அம்பலவாணப்பிள்ளை அவர்கள் திருமுறைகளையும், புராணங்களையும்தமது இல்லத்தில்வருடந்தோறும் ஓதியும், ஓதுவித்தும் சிவமயமான தூய வாழ்வை ஒழுகி வந்தார்.

### சிறப்பு

முத்தகச் செய்யுள் பாடுவதிலும், படைப்பதிலும் வித்தகரான, வரகவி முத்துக்குமாரக் கவிராயர், சி.வை.தாமோதரம்பிள்ளைக்குக் குருவாக அமைந்தமை சி.வைக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே.


இதனாலன்றே, தமிழ் அமிழ்தானது. எப்படியெனில் செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், தண்டமிழ், மென்றமிழ், இன்றமிழ், தீந்தமிழ், மாண்டமிழ், நறுந்தமிழ், செழுந்தமிழ், பெருந்தமிழ், அருந்தமிழ், நற்றமிழ், சொற்றமிழ், மெய்த்தமிழ், திருத்தமிழ், சுவைத்தமிழ், சிவத்தமிழ், வடிதமிழ், முதுதமிழ், மூத்ததமிழ், தெய்வத்தமிழ், கன்னித்தமிழ், கவின்தமிழ், வல்லதமிழ், வாழுந்தமிழ், அழகுதமிழ், ஆளுந்தமிழ், இன்பத்தமிழ், ஈகைத்தமிழ், உவகைத்தமிழ், ஊட்டுந்தமிழ், எதுகைத்தமிழ், எழுச்சித்தமிழ் எனப் பலவாறாலும் போற்றித் தமிழன்னை துதிக்கப்படுகின்றாள். இத்தகு சீர்தகு வித்தகப் பரம்பரை சூழ்ந்திருக்க வாழ்ந்திடும் பரம்பரையில் பிறந்தமையால், அம்பலவாணரும் தனது பிள்ளைக்கு ஏடுதொடக்கி முதலில் மலாகம் ஆங்கில பாடசாலையில் சேர்ப்பித்தார். பின்னதாக அந்தப்பாடசாலையை விட்டு, பண்டித சிகாமணி முருகேச பண்டிதரிடம் இலக்கண இலக்கியங்களும், நாகநாத பண்டிதரிடம் சமஸ்கிருதமும், குருசீட பண்பாட்டோடு கற்றுத் தேறினார். அது மட்டுமன்றி, தாமாகவே நூல்களைத் தேடித் தேடிக் கற்று இரண்டிலுமே பாண்டித்தியமும் அடைந்தார். தமிழைப் பரோபகாரமாக்கினார். தமிழைப் பசிக்க, ருசிக்க, வசிக்கப் பாடுபட்டார். தமிழ் அன்னையோ தன்னை எலலோருமே அரவணைப்பதைக் கண்டு பூரித்தாள். பூத்தாள், பூப்பு அடைந்தாள். இலக்கணத்திலும் இலக்கியத்திலும் அக்குவேறு ஆணி வேறாக, ஐயம் திரிபற, நுணுகி நுணுகி, அணுகி அணுகி ஆனந்தம் அடைந்தாள். தமிழ் குமாரசாமிப் புலவரிடம் குடிபுகுந்தது. பட்டம் பெறுவதற்காகத் தமிழைப் பலாத்காரம் செய்வோரின் தொகையோ இங்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. தமிழ் இனிக்கும் தன்மை கொண்டதால், பட்டத்துக்கு மாத்திரமன்றி பௌத்திரமாக வாழ்ந்து பயன் கொழிப்பதற்காகவும் நாம் வாழ

> "கல்வி, செல்வம் காரணமாக அகங்காரங் கொண்டு பழிபாவங் களைத் தேடுதலும், புகழ், பொருள் காரணமாக ஆடம்பர வேடம் பூண்டு அவமானப்படுதலும் அறியாதவர். ஐயந் திரிபற விளக்கம் தருதலால், இவரைப் புலவர் சிந்தாமணி எனப் பாராட்டினர். இவருக்கு எத்தனை கலாநிதிப் பட்டங்கள் கொடுத்தாலும் தகும். இலக்கணமா? கட்டடங்களா? எது பெறுமதிமிக்கது என்று நாம் உணர இன்னும் பலகாலம் செல்லும்!"

வேண்டும். அகில இலங்கைக் கம்பன் கழகத்தார் தமிழ் அன்னை மனங்குளிர வருடம்தோறும் தமிழ்ப்பணி ஆற்றி வருவது கண்டு இந்த மண் அதனை முறையாகப் பதிவு செய்கிறது. இதில் முக்கியமான விடயம் யாதெனில், தமிழ் அன்னைக்குப் பல பிள்ளைகளை அணியணியாகக் கம்பன் கழகம் வளர்த்து விட்டிருக்கிறது. இவ் வாறான சிந்தனை குமாரசாமிப் புலவர் ஊடாக வந்திருக்கலாமோ என்று என்மனம் சிந்திப்பதில் தவறில்லையே? ஆன் மிகத்தில் பல வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளது. வழிவிடப்பட வேண்டியுள்ளது. புலவரைப் படித்தால் தமிழிலும் சமயத்திலும் கலவரமே வராது.

### ஆழ்ந்த புலமை

ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலரும், சி.வை.தாமோதரம்பிள்ளையும், குமாரசுவாமிப் புலவரின் அதீத தமிழ்ப் புலமையை வியந்து பாராட்டியதோடு அமையாமல், தமிழ் மணக்கும் பொறுப்புக்களை வழங்கி தமிழை இந்த மண்ணில் அனுபவிக்கச் செய்தனர். சி.வை.தாமோதரம்பிள்ளை, தம்மால் ஏழாலையில் தொடங்கப்பெற்ற சைவ வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராக 1878ஆம் ஆண்டில் குமாரசாமிப் புலவரை நியமித்தார். அன்றிலிருந்து சைவமும் தமிழும் தழைத்து ஓங்கியது. 1886 ஆம் ஆண்டு, நாகநாத பண்டிதர் இயற்றிய இதோபதேசம் என்னும் நூலை அச்சிடுவதற்காக சி.வை.தாமோதரம்பிள்ளையின் வேண்டுதலோடு சென்னையில் தங்கி அச்சிட்டு வெளியிட்டார். வெற்றி கண்டார்.




மேலும், உதயபானு, விஞ்ஞான வர்த்தனி, இலங்கை நேசன் ஆகிய பத்திரிகைகளில், இலக்கண இலக்கிய ஆராய்ச்சி சம்பந்தமான பற்பல விடயங்களை எழுதி ஒரு வாசக பரம்பரையையும், ஊடக ஆர்வலர்களையும், நீடுயர் தமிழ் விற்பன்னர்களையும் தோற்றுவித்தார். முறையாகச் செய்யுள் பிரபந்தங்களைப்பாடி மகிழ்ந்தார். அவற்றுள், வதுளைக் கதிரேசன் பதிகம் (1884), வதுளை மாணிக்க விநாயகர் பதிகம் (1884), மிலேச்சமத விகற்பக் கும்மி (1888), துணைவைப் பதிகம் (1888), அத்தியடி விநாயகர் ஊஞ்சல் (1897), அமராவதி பூதூர் பால விநாயகர் பதிகம் (1889), ஏக விருத்தபாரதாதி (1896), மேகதூதக் காரிகை (1896), மாவைப் பதிகம் (1900) என்பவை பிரதானமான நூல்களாகும். இந்த நூல்கள், கவிநயம் சொட்டும் ஓசை கொண்டனவாகவும், விழுமியப்பொருள் உடையனவாயும், படிப்பவர்க்கு இன்பம் பயப்பனவாயும் அமைந்துகாணப்படுகின்றன. இவற்றுடன், கலைசைச் சிலேடை வெண்பா, அரும்பதவுரை, யாப்பருங்கலப் பொழிப்புரை, திருக்கரசைப்புராணம் பொழிப்புரை, இலக்கணச் சந்திரிகை, ஆத்திசூடி வெண்பாக் கதைகள், கண்ணகி கதை, சூடாமணி நிகண்டுப் பதப் பொருள் ஆகிய நூல்களும் இந்தக் காலத்திலேயே இயற்றப்பட்டன.

### தமிழகராதி வெளியீடு

நீதிபதி கு.கதிரவேற்பிள்ளை தொகுத்த தமிழகராதியை வெளியிட ஆவனபுரிந்தார் புலவர். ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் த.கைலாயபிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க, அந்த வித்தியாசாலைத் தலைமையாசிரியராக 1902 ஆம் ஆண்டு முதல் இறுதிக் காலம் வரை பணியாற்றினார். மதுரைத் தமிழ்ச் சங்கம் இவரைத் தனது உறுப்பினராகச் சேர்த்து, செந்தமிழ்ச் சஞ்சிகையைப் பேறாக்கியது. மேலும், கம்பராமாயணம் பாலகாண்ட அரும்பதவுரை, நீதிநெறி விளக்கப் புத்துரை (1902), தண்டியலங்காரப் புத்துரை (1904), யாப்பருங்கலக் காரிகைப் புத்துரை (1912), வினைப்பகுபத விளக்கம் (1912), சாணக்கிய நீதி வெண்பா (1914), இலக்கியச் சொல்லகராதி (1914), தமிழ்ப் புலவர் சரித்திரம் (1916), சிவத்தோத்திரக் கவித்திரட்டு (1918), இதோபதேசம் (1920), சிசுபால சரிதம் (1921), இராமோ தந்தம் (1922), இரகுவமிச சரிதாமிர்தம் (1922) ஆகிய நூல்களை மாணவர்களுக்காகப் படைத்தார். கல்வி, செல்வம் காரணமாக அகங்காரங் கொண்டு பழிபாவங்களைத் தேடுதலும், புகழ், பொருள் காரணமாக ஆடம்பர வேடம் பூண்டு அவமானப்படுதலும் அறியாதவர். ஐயந்திரிபற விளக்கம் தருதலால், இவரைப் புலவர் சிந்தாமணி எனப் பாராட்டினர். இவருக்கு எத்தனை கலாநிதிப் பட்டங்கள் கொடுத்தாலும் தகும். இலக்கணமா? கட்டடங்களா? எது பெறு மதி மிக்கது என்று நாம் உணர இன்னும் பலகாலம் செல்லும்! இலக்கணங்களை நாம் தொலைத்து வருகின்றோம். சுன்னாகம், மயிலணியில், புலவரகம் பேணப்பட வேண்டும். இலக்கணத்தை இனியாவது நாம் படிக்க வேண்டும். இலக்கண இலக்கிய மகிமையோடு, புலவர் 1922.04.25 ஆம் திகதி சிவப் பேறடைந்தார். மயிலணி தமிழுக்கு ஒரு பயிலணியாக மாறக் காலம் கனிய வேண்டும். மனைவி சின்னாச் சியம்மையின் பிரார்த்தனை அவம் போகாது தவமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெட்டவர்கள் சகவாசம் தீமையே தரும்



தீராதவறட்சிதொடர்ந்ததால்மழையே நெடுங்காலமாக பெய்யவில்லை. அந்தக் காட்டில் வாழ்ந்த எல்லா விலங்குகளும் மெலிந்து காய்ந்து போயிருந்தன. ஆனால் அங்கு காணப்பட்ட நாகபாம்பு ஒன்று மட்டும் மெலியாமல் செழிப்பாக வாழ்ந்து வந்தது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலங்காக இறந்து கொண்டிருந்தன.

இதன் காரணமாக இந்த நாகபாம்பின் மேல் ஏனைய விலங்குகளுக்குச் சந்தேகம். நாங்கள் எல்லாம் இவ்வாறு கஷ்டப்படும்போது நாகபாம்பு மட்டும் எவ்வாறு செழிப்பாகக் காணப்படுகின்றது என்று.

அன்று வழக்கம்போல ஏனைய விலங்குகள் தாகத்தால் தவிர்த்துக் கொண்டிருந்தன. ஆனால் நாகபாம்பு நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தது. கோபமடைந்த புடையன் பாம்பு. இதை எப்படியாவது நாகபாம்பிடம்கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என எண்ணியது.

நாகபாம்பிடம் எவருக்கும் தெரியாமல் சென்றது புடையன் பாம்பு. நாங்கள் எல்லாம் நீரின்றி வாடிக் கிடக்கின்றோம். ஆனால் நீயோ எவ்வாறு இப்படிச் செழிப்பாக உள்ளாய் எனக்கேட்டது. ஆனால் நாகபாம்பு உண்மையைப் புடையன் பாம்பிடம் மறைக்க எண்ணி பொய் சொல்லி அதனைத் திசைமாற்றியது. புடையன் பாம்போ விடுவதாக இல்லை. துருவித் துருவிக் கெஞ்சிக்கேட்டது.

நாகபாம்பு நல்ல குணம் கொண்டிருந்ததால் புடையனுக்கு உதவ முன்வந்தது. ஆனால் அதற்குச் சில நிபந்தனைகளை விதித்தது. அவையாவன, நான் கூட்டிச் செல்லும் இடத்தில் உள்ள பிள்ளை உனக்கு எவ்வளவு அடித்தாலும் நீ அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும். இரண்டாவது, நீரைக் குடித்த பின் அந்தக் குழந்தையைஒன்றும் செய்யாமல்வரவேண்டும் என்பவையே அவையாகும். எல்லா நிபந்தனைகளுக்கும் ஆம்எனத்தலையாட்டியது புடையன்.

நாகபாம்பு அந்தக் குழந்தை குளிப்பதற்காக நிரப்பப்பட்டிருந்த வாளியைக் காட்டியது. குழந்தையின் தாய் உள்ளே செல்லும்நேரம்பார்த்து புடையன் பாம்பு தண்ணீரைக் குடித்தது. அவ்வாறு குடிக்கும்போது அந்தக் குழந்தை தன்னிடமிருந்த குவளையால் பாம்புக்குஅடித்தது. கோபமடைந்த புடையன் குழந்தையை உடனே தீண்டியது. குழந்தை அந்த இடத்திலே துடிதுடித்து இறந்து போயிற்று. இதனால் கோபமுற்ற நாகபாம்பு புடையனை அழிப்பதற்காக துரத்திக் கொண்டு சென்றது. புடையன் தனது நெடுநாள் நண்பனான முருங்கை மரத்திடம் உதவி கேட்டது. நீயும் பச்சை நானும் பச்சை என்னில் ஒளிந்து கொள் என்றது முருங்கை. உடனே புடையனும் அவ்வாறே செய்தது.

நாக பாம்பு வந்து முருங்கையிடம் இந்த வழி வந்த புடையனைக் கண்டாயா? கண்டால் உண்மையைச்சொல்என்றது. முருங்கையோ நண்பனைக்காக்க பொய்ச்சத்தியம்செய்தது. புடையனுக்கு வேளா வேளைக்கு கொட்டாவி வருவது வழமை. அந்த வேளையில் அதற்குக் கொட்டாவி வந்து விட்டது. தன்னை மறந்து கொட்டாவி விட்டது புடையன். மணத்தை வைத்து புடையனை தன்னுள் மறைத்து வைத்திருந்த முருங்கைக்கு உன்னை எவரும் இனிசமய ஆசார நிகழ்வுகளுக்கு பயன்படுத்த மாட்டார்கள் எனச் சாபமிட்டது நாக பாம்பு. கெட்ட நண்பரோடு சேர்ந்து தன் வாழ்க்கையை இழந்து கொண்டது முருங்கை.

*ரா.நிஷாங்கன்,*
*தரம் 10,*
*யா/ அத்தியார் இந்துக் கல்லூரி.*

## வரலாற்றில் இன்றைய தினம்

336 - உரோமில் முதலாவது கிறிஸ்மஸ் கொண்டாட்ட ஆவணத்தில் கையொப்பமிடப்பட்டது.
1000 - ஹங்கேரி முடியரசு ஸ்தாபிதம். ஹங்கேரி ஸ்ரீபன் I அவர்களால் கிறிஸ்தவ முடியாட்சியாக ஸ்தாபிதம்.
1643 - கிறிஸ்மஸ் தீவு கண்டுபிடிப்பு
1809 - முதலாவது கருப்பை சத்திரசிகிச்சை டாக்டர் எப்றைம் மக்டோவலால் மேற்கொள்ளப்பட்டு 22 இறாத்தல் கட்டி அகற்றப்பட்டது.
1868 - சிவில் போரில் ஈடுபட்ட படையினருக்கு அமெரிக்க ஜனாதிபதி அன்ட்றூ ஜோன்சன் நிபந்தனையற்ற மன்னிப்பு வழங்கல்.
1927 - வியட்நாம் தேசியக் கட்சி உருவாக்கம்.
1988 - 1838ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலை பல்கலைக் கழக சித்த மருத்துவ பயிற்சி வைத்தியசாலையாக அங்கீகரிப்பு.
1999 - நேபாளம் காத்மண்டிலிருந்து புறப்பட்ட விமானம் கடத்தப்பட்டு ஆப்கானிஸ்தானில் தரித்துள்ளது. 25 பயணிகள் விடுவிப்பு. 185 பயணிகள் 4 விமானப் பணியாளர்களுடன் கடத்தப்பட்ட நிலையில்.
2002 - ஜனாதிபதி - பிரதமர் இடையே முறுகல் நிலையில் இம்முறை கைதிகள் விடுதலையில் இழுபறி.
- புனிதப் போருக்குத் தயார் என சதாம் ஹூசைன் அறிவிப்பு.

2006 - ஆள் கடத்தல் கொலைகளுடன் அரசுக்குத் தொடர்பு என மேல் மாகாண சபை எதிர்கட்சித் தலைவர் சித்சிறி கஹபிட்டியதெரிவிப்பு.
- இலங்கை அரசுடன் இப்போதைக்குப் பேச்சு இல்லையென தமிழர் தேசியக் கூட்டமைப்பு அறிவித்ததன் மூலம் அரசின் குழிக்குள் விழாது கூட்டமைப்பு தப்பி விட்டதாக வடக்கு - கிழக்கு ஆயர்கள் அறிவிப்பு.

2009 - தென்பகுதியிலிருந்து யாழுக்குப் படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள். 2 நாள்களாக நெரிசலில் திணறும் யாழ்.நகரம்.
2011 - போர்க் குற்றங்களுக்கு முழுமையாகப் பதிலளிக்கும் புதிய அறிக்கையை எதிர்பார்ப்பதாக அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா பிராந்தியங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் இலங்கை உயர் அதிகாரிகளிடம் தொலைபேசியில் தெரிவிப்பு.
2013 - ஒரே நாளில் 279 பேர் விபத்தில் காயம். நத்தார் தினத்தன்று சம்பவம்.
- இலங்கையின் மக்கள் மீது கெடு பிடிகள் அகலவில்லையென அல்ஜசீரா தெரிவிப்பு.
- மனிதப் புதைகுழி மையமாக மாற்றப்பட்டுள்ள தமிழர் பிரதேசம் என உதயன் ஆசிரியர் தலையங்கம் கருத்து.
- தென்னாசியாவிலேயே உயரமான 116அடி உயரமான கிறிஸ்மஸ் மரம் கிளிநொச்சியில் அமைப்பு.

## பொன்மொழிகள்

- மனிதன் பிறந்தது வெற்றியடையவே. தோல்விக்கான காரணங்களைச் சொல்லிக் கொண்டிருக்க அல்ல.
  -ஹென்றி டேவுப்தோரோ
- பிறருக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பதைவிட எமது நடத்தையே அவர்களுக்கு முன்மாதிரியாக அமையும்.
  -கார்ட்டர்
- அடுத்தவர் இடத்திலிருந்தும் கோணத்திலிருந்தும் நாம் எம்மைப் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.
  -எம்ஸ்காட்பெக்
- நாளைக்கு என்று எதையும் ஒத்திப் போடாதே. ஏனெனில் இன்று அச்செயல் உனக்கு மகிழ்ச்சி அளிப்பதால் நாளையும் அதனைச் செய்வாய்.
  -ஜேம்ஸ்மைச்ரர்
- மற்றவர்களுக்குச் சொல்லிவரும் அதே அறிவுரைகளைக் கடைப்பிடிப்பவர்கள் வாழ்க்கையில் நிறைய வெற்றிகளைக் கண்டு வருகிறார்கள்.
  -கியூபெர்ட்கிரீன்
- பெரிய மனிதனாக ஆவதற்கு நிறைய நற்குணங்களை மட்டும் கொண்டிருந்தால் போதாது. அவற்றை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும்.
  -லாரோச்பெனகாட்ல்டு
- வாழ்க்கை இன்பமானதும் அல்ல, துன்பமானதும் அல்ல. தைரியத்தோடும் தியாக உணர்வோடும் ஈடுபட வேண்டிய ஒரு கடினமான தொழில்.
  -டி-டாக்குவெல்லி
- உயிரோடு உள்ளபோது தம் இதயத்தை இன்ப உலகுக்கு அனுப்பாதவன் உயிர் போன பின் இன்ப உலகுக்குப் போக முடியாது.
  -பிப்ல்சன்
- எமக்கு நாமே விதித்துக்கொள்ளும் ஒவ்வொரு கட்டுப்பாடும் எம்மைச் சுதந்திர மனிதர்களாக மாற்றுகின்றது.
  -ஜே.பி.டபிள்யூ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆட்சியிலும் ஏமாற்றம்

தேசிய மருந்துப்பொருள்கள் சட்டம், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு எட்டு மாதங்கள் கடந்து விட்டன. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மருந்துப்பொருள்களின் விலைகள் 60 சதவீதம் குறையப் போவதாக அப்பொழுது வெற்றிக்களிப்புடன் கூறினார். ஆனால், மருந்துப்பொருள்களின் விலைகள் இன்னமும் குறையவில்லை. விலை குறையும், குறையும் என்று எதிர்பார்த்திருந்த மக்கள், தற்பொழுது நம்பிக்கை இழந்து விட்டனர். ஏமாற்றம் அடைந்துள்ளனர். மருந்துப் பொருள்களின் விலைகள் குறையாததற்கான காரணம் கண்டறியப்பட வேண்டும். நியாயமான விலையில் மருந்துப்பொருள்கள் மக்களைச் சென்றடைவதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு உடனடியாக ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும்.

நாளாந்தம் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவால் வாழ்க்கையைக் கொண்டுநடத்த முடியாது திண்டாடுகின்றனர் நாட்டு மக்கள். அத்தோடு சேர்த்து, மருந்துப் பொருள்களின் விலை அதிகரிப்பால் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். சுகாதார அமைச்சு மருந்துப் பொருள்களின் விலையைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எழுபது வயதுக்கு மேற்பட்ட ஒருவர் மாதா மாதம் மருந்துக்காக இன்று நானூறு ஆயிரம் ரூபா முதல் ஆறாயிரம் ரூபாவரை




செலவிடும் நிலைமை இருந்து வருகிறது. சிலர் பத்தாயிரம் ரூபா கூடச் செலவிடுகின்றனர். மருந்துப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்குமானால், மருந்துக்காகச் செலவிடும் பணத்தை இவர்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.

இந்த அரசாங்கம் பதவி ஏற்றபின்னர், நாட்டு மக்களின் நலன்கருதி நாட்டில் நல்லாட்சிக்கான காரியங்களில் குறிப்பிடத்தக்க அளவு செயற்பட்டுள்ளது. ஆகவே, குறைந்த விலையில் மருந்துப் பொருள்களைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்த சுகாதார அமைச்சர், தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுள்ளவராக உள்ளார். கடந்த ஆட்சிக்காலத்தில், மருந்துப் பொருள் இறக்குமதி விற்பனையில் குறிப் பிட்ட சிலர் ஆதிக்கம் செலுத்தினர். இதன் காரண மாக மருந்துப்பொருள்களின் விலைகள் எகிறிக் கொண்டிருந்தன. விலை குறைப்புக்கு எவரும் முயற்சிசெய்யவில்லை. ஒரு சிலரின் ஏகபோக நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பாதிக்கப்பட்டனர்.

புதிய ஆட்சியில் தமக்கு நிவாரணம் கிடைக்கும், மருந்துப்பொருள்களின் விலைகள் குறையும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது மருந்துப்பொருள்களின் விலை குறையும் என்று மக்கள் நம்பினர். ஆனால், இதுவரை மலிவான விலையில் மருந்துப்பொருள்கள் இன்னமும் கிடைக்காதமை ஏமாற்றம் அளிக்கிறது. அரசாங்கம் மருந்துப் பொருள்களின் விலையை 60 சதவீதமாகக் குறைக்க முடியாவிட்டாலும், 40 சதவீதமாகவாவது குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

# கோபத்தைக் கட்டுப்படுத்துவதால் ஆயிரம் நன்மைகள்

**நிலா, ஏழாலை.**

கோபம் என்பது உடல், உள, சமூக, உளவியல் ரீதியாகவும், உணர்ச்சி பூர்வமான, எமக்கு உண்டாகும் எதிர்மறையான சூழ்நிலை காரணமாகவும் உண்டாகும் உணர்வாகும்.இது நாம் சொல்வதை மற்றவர் மதிக்காத போது, எம்முடைய தேவைகளை அல்லது பிரச்சினைகளை உரியவர் உடனே தீர்த்துவைக்காதபோது, நாம் செய்யும் அல்லது சொல்லும் விடயம் தவறு என்று மற்றவர்கள் முன்னிலையில் விமர்சிக்கும் போது, எதிர்பார்ப்பது கிடைக் காமல் ஏமாற்றம் அடையும்போது, ஒருவர் காரணம் இல்லாது திட்டும் போது, போன்ற சந்தர்ப்பங்களில் எம்மை அறியாது பேசத்தூண்டும் பிரதிபலிப்பே கோபமாக வெளிப்படுகிறது. கோபம் சம்பந்தப்படுபவரையே அழித்து விடும் அளவுக்குச் சக்திமிக்கது.

கோபம் வரும் போது தன்னை அடக்குபவனே உண்மையான பலசாலி என்பது முன்னோர் வார்த்தை. அதனால் தான் கோபம் பாவத்தைத் தேடும் என்பார்கள். உண்மையான மனிதத்துவம் என்பது சமூகத்துடன் ஒன்றி வாழ்தலேயாகும். எப்பொழுதும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பது, தட்டிக்கொடுத்தல், பாராட்டுதல், உதவுதல் என்பதாகும். இதற்கு முக்கியமானது பொறுமையாகும். ஒரு மனிதனின் வெற்றிக்கு தடையாக இருப்பது கோபமாகும்.

கோபம் கொள்வதால் எமது சிந்தனை, கவனம், அவதானம் என்பவை சிதறடிக்கப்படுகின்றன. சரியான நேரத்தில் செய்ய வேண்டிய செயல்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. எம்மைச் சுற்றியிருப்பவர்களைப் பற்றியும், சூழ்நிலையைப் பற்றியும், சிந்திக் காது செய்யும் செயல்கள் பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், வாழ்வின் சந்தோசத்தை குழி தோண்டிப் புதைத்து விடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் எமது உறவுகளில் விரிசலும், நம்பிக்கைத் தன்மை குறைந்து விடும் வாய்ப்பும் அதிகம். இதனால் முறையாகச் சிந்திக்க முடியாத நிலை ஏற்படுவதுடன், மன இறுக்கமும், தளர்வு நிலையும் ஏற்படும். இதனால் உடல், உள ரீதியாகப் பாதிப்பு ஏற்படுவதுடன், நோய்கள் உங்களை இலகுவில் தாக்கும் வாய்ப்புகள் அதிகமாகின்றன.கோபம் வரும் நேரங்களில் மனிதன் தன்னிலை இழக்கின்றான்.இதனால் தான் கோபப்படும் போது அதிகம் வியர்த்தல், நடுக்கம், தூக்கமின்மை, ஓய்வின்மை, தலைவலி, நெஞ்சு வலி, மாரடைப்பு, இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. எனவே ஆரோக்கியமாக வாழ, கோபம் கொள்வதை இயன்றவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

ஏன் எனக்கு கோபம் வருகிறது? சின்னச் சின்ன விசயங்களுக்கெல்லாம் ஏன் கோபப்படுகிறேன்? என்று உங்கள் மனதை அடிக்கடி கேளுங்கள். உங்கள் கேள்விக்கு உங்களிடமே பதில் கிடைக்கும்.தேவையான விடயங்களுக்கு மட்டும்தான் கோபப்படுகிறீர்களா? அல்லது தொட்டதற்கெல்லாம் கோபப்படுகிறீர்களா?

தேவையற்ற கோபத்தைத் தவிர்த்து நடப்பது ஆரோக்கியம் தரும். உங்கள் கோபம் நியாயமானதா? இந்த விடயத்தில் நான் எதற்காகக் கோபப்படவேண்டும் என்று நினையுங்கள்.

> “ஏன் எனக்கு கோபம் வருகிறது? சின்னச் சின்ன விசயங்களுக்கெல்லாம் ஏன் கோபப்படுகிறேன்?”

கோபம் தானாகத் தணிந்து விடும்.

உங்களைக் கோபப்படுத்த வேண்டும் என்றே சிலர் எதாவது வார்த்தையாலோ அல்லது செயற்பாட்டினாலோ சீண்டிப் பார்ப்பார்கள்.நீங்களும் அந்தத் துண்டுதலால் தான் கோபப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறீர்கள். எனவே அப்படியான நபர்களிடம் அல்லது அப்படியான சந்தர்ப்பங்களை முழுந்தளவு விலக்கி நடந்து கொள்ளுங்கள்.அல்லது அப்படிக் கோபப்படுபவர்களை எதிர் கொள்ள வேண்டியிருந்தால், அவர்கள் என்ன சொன்னாலும்,செய்தாலும் கோபத்தை வெளியே காட்டிக் கொள்ளாமல் பதிலுக்குப் புன்னகைத்து விட்டுச் செல்லுங்கள்.

கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களா ? அதனை எப்படிக் கட்டுப்படுத்துவது? என்ற கவலை வேண்டாம்.நீங்கள் நினைத்தால் மட்டுமே அது முடியும். மற் றவர்கள் முன்னால் கோபப் படாமல் அதனை தவிர்க்கும் இலகுவான வழிகள் நிறையவே உள்ளன. முயற்சி செய்து பாருங்கள். கோபம் வரும்போது மந்திர உச்சாடனம் செய்யுங்கள், கோபம் வரும் போது தண்ணீர்



குடியுங்கள்,
கொஞ்ச நேரம் அமைதியாக இருங்கள்
அந்த இடத்தை விட்டு நகருங்கள்
முகத்தைக் கழுவுங்கள்
முடியுமானவரை ஒன்று முதல் இலக்கத்தைத் தொடர்ந்து எண்ணுங்கள்
கண்களை மூடிக் கைகளை இறுகப் பொத்தி விட்டு சிறிது நிமிடத்தில் தளர்த்திக் கொள்ளுங்கள்
தியானம் செய்யுங்கள்

பொறுமையாக இருங்கள். அவசரப்படாதீர்கள். அமர்ந்திருந்தால் எழுந்து நடவுங்கள், சுய கட்டுப்பாட்டை இழக்காதீர்கள், முடிந்தளவு பொறுமையுடன் இருங்கள், மௌனமாக இருங்கள், உங்களைக் கோபப்படுத்தியவரைப் பார்க்காது விலகியிருங்கள், அதிகம் வார்த்தைகளைக் கொட்டாதீர்கள், முடிந்தால் உங்களுக்குப் பிடித்த இசையை ரசியுங்கள், உங்களுக்குப் பிடித்தமான அன்புக்குரியவரை மனத்திரையில் பாருங்கள், செய்யும் வேலையை அக்கறையுடனும், விருப்புடனும் செய்யவும். வீட்டில் இருந்தால் கண்ணாடி முன் நின்று பாருங்கள், அதிகம் கோபப்படும் வேளைகளில் கண்ணாடியில் உங்களைப் பாருங்கள். அப்போது புரியும். நான் கோபப்பட்டால் இப்படித் தான் இருப்பேனா? என்று வெட்கப்படத் தோன்றும். முடிந்த அளவு மேற்குறிப்பிட்ட விடயங்களை கோபப்படும் போது முயற்சி செய்து பாருங்கள். கோபம் தணிந்தபின் அந்தச் சம்பவத்தை அசை போட்டுப் பாருங்கள்; காரணம் இல்லாமல் கோபப் பட்டு விட்டேனே என்று உங்களுக்கே சிரிப்பு வரும். இந்த சின்ன விசயத்துக்காகவா கோபப்பட்டேன் என்று நினைக்கத் தோன்றும். அதேபோன்று உங்களைக் கோபப்படுத்தியவர் வெட்கித் தலை குனியும் நிலை ஏற்படும். பதிலுக்கு நீங்கள் கோபப் பட்டால், சில நேரங்களில் உறவு விரிசல்கள் ஏற்படுவது மட்டுமல்ல, மாறாத வடுவாக மற்றவருக்கு காயத்தையும்,உங்களில் வெறுப்பையும் ஏற்படுத்தி விடும்.இதனால் சின்னக்கோபம் சில வேளைகளில் உறவு முறிவை ஏற்படுத்த வாய்ப்பாகி விடும், உங்களால் முடிந்தவரை மற்றவர்களுடன் கோபப்படாது அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். அதிகம் கோபப்படுபவர்களைப் பார்த்து மற்றவர்கள் சுடுமூஞ்சி அல்லது விடியாத முகம் என்று குறை கூறுவது வழமை. நீங்கள் முடிந்தளவு மற்றவர்களுடன் நல்லுறவைப் பேண முயற்சி செய்யுங்கள்.

எனவே முடிந்தளவு கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள். கோபம் ஏற்படும்போது எளிய முறைகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு நெருக்கமான ஒருவர் கோபப்பட்டால் அதற்கான காரணத்தைக் கண்டறியுங்கள்.அதனைச் சரிப் படுத்த முயற்சி செய்யுங்கள்.அவரைப் புரிந்து கொள்ளுங்கள். வீட்டிலும், அலுவலகத்திலும், வெளியிடங்களிலும் இயன்றளவு கோபத்தைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்ளுங்கள். இதுவே எமக்கும் ஏனையோருக்கும் நல்லுறவைப் பேண உதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அன்றாடப் பணிகளை விரைவாக நிறைவேற்றுவீர்கள். தொழிலில், இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பாதுகாப்புக் குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**இடபம்:** பிறரிடம் இனிமையாகப் பேசிப் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். அரச வகையில் நன்மை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**மிதுனம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், முயற்சிக்கேற்ப முன்னேற்றம் ஏற்படும். பணியாளர்கள் வெளியூர் செல்ல நேரிடலாம். சட்ட திட்டங்களை மதித்து நடக்கவும்.

**கடகம்:** கிடைக்கும் வாய்ப்பைச் சாதுரியமாகப் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்தி தரும். பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். விருந்து உண்டு மகிழ்வீர்கள்.

**சிங்கம்:** உங்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் உதவி செய்வார்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். உறவினர் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**கன்னி:** திட்டமிட்டுச் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். குடும்பச் செலவு அதிகரிக்கும். சீரான ஓய்வு உடல்நலத்தைப் பாதுகாக்கும்.

**துலாம்:** புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். தொழிலில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள், பணம், நகை, இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**விருச்சிகம்:** மனசாட்சிக்கு முக்கியத்துவம் தருவீர்கள். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**தனுசு:** நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தொழில், வியாபாரத்தில், பணவரவு அதிகரிக்கும். பெண்களால் நன்மை ஏற்படும். உறவினர் சொந்தம் பாராட்டிப் பழகுவர்.

**மகரம்:** பொது இடங்களில் அதிகம் பேச வேண்டாம். தொழிலில், மிதமான ஆதாயம் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்களைக் கவனத்துடன் பாதுகாக்கவும்.


**கும்பம்:** முன் யோசனையுடன் பணிபுரிவது அவசியம். தொழில், வியாபாரத்தில், இலாபம் சுமாராக இருக்கும். உறவினர் வகையால் செலவு ஏற்படலாம். தெய்வ வழிபாடு மன அமைதியைத் தரும்.

**மீனம்:** பகைவரும் நட்புப் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில், வருமானம் உயரும். பெண்களால் நன்மை உண்டாகும். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும்.



# நடிகர்களின் புது முடிவு

ஒரு நேரத்தில் ஒரு படம் மட்டுமே நடிப்பது என்ற ரீதியில் முன்னணி நடிகர்கள் இதுவரை தங்களது படங்களை ஒப்புக்கொண்டு நடித்து வந்தனர். ரஜினியைப் பொறுத்தவரை, கடந்த பல ஆண்டுகளாகவே 3 வருடத்துக்கு ஒரு படம் என கணக்கு வைத்து நடித்து வந்தார். அந்த முறையைத் தற்போது ரஜினி உள்ளிட்ட பெரும்பாலான நடிகர்கள் மாற்றிக்கொண்டுள்ளனர். ரஞ்சித் இயக்கத்தில் "கபாலி" படத்தில் நடித்து வரும் ரஜினி, அதேசமயம் சங்கர் இயக்கும் புதிய படத்திலும் நடிக்கிறார். "ஐ" படத்துக்காக 3 வருடம் வேறு படங்களில் நடிக்காமல் உடல் தோற்றத்தை மாற்றி நடித்த விக்ரம், தற்போது ஆனந்த் சங்கர் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்கிறார். அத்துடன் "திரு" இயக்கத்தில் புதிய படத்தில் நடிப்பதற்கும் ஒப்புக் கொண்டிருக்கிறார். நடிகர்சங்கத் தேர்தல் பணி, மழை வெள்ள நிவாரணம் எனத் தீவிரமாக இருந்த கார்த்தி, "தோழா", "காஷ்மோரா" என 2 படத்தில் நடித்து வருகிறார். "வீர சிவாஜி" படத்தில் நடித்து வரும் விக்ரம் பிரபு, குமாரவேலன் இயக்கத்தில் "வாகா" படத்திலும் நடித்து வருகிறார்.






பெண்: வாழ்த்து அட்டை உள்ளதா?
கடைக்காரர்: இருக்கிறது.
பெண்: நான் உன்னை மட்டும் காதலிக்கிறேன் என்று எழுதிய அட்டை உள்ளதா?
கடைக்காரர்: இருக்கிறது.
பெண்: அப்படியானால் 12 வாழ்த்து அட்டை தாருங்கள்.
கடைக்காரர்: ????

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 8 | | | 1 | | |
| | | | 7 | | | | | |
| | 6 | 2 | | 4 | 3 | | 7 | |
| | | | | | | | 6 | 7 |
| 3 | | 6 | | | | 5 | | 2 |
| 8 | 4 | | | | | | | |
| | 9 | | 3 | 5 | | 7 | 1 | |
| | | | | | 2 | | | |
| | | 7 | | | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 4 | 3 | 7 | 5 | 2 | 6 | 1 |
| 1 | 7 | 5 | 4 | 2 | 6 | 9 | 8 | 3 |
| 3 | 6 | 2 | 1 | 8 | 9 | 5 | 7 | 4 |
| 4 | 2 | 8 | 6 | 9 | 3 | 7 | 1 | 5 |
| 7 | 3 | 9 | 5 | 1 | 8 | 4 | 2 | 6 |
| 6 | 5 | 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 9 |
| 2 | 9 | 6 | 8 | 5 | 1 | 3 | 4 | 7 |
| 5 | 1 | 7 | 2 | 3 | 4 | 6 | 9 | 8 |
| 8 | 4 | 3 | 9 | 6 | 7 | 1 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**The Dark Knight** @theNocturnal_

அதுல அம்மா செண்டி மென்ட்!
இதுல அப்பா!
அதுல இன்ஜினியர்..!
இதுல தமிழன்.!
ஊருல இருக்கறவனெல்லாம் பயித்திகாரன்னு நினைச்சே படம் எடுப்பீங்களாடா..!?



இந்த உலகத்திலேயே இதை விடச்சிறந்த அலாரம் இதுவரைக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. கதைத்துக் கொண்டிருக்கும் போதோ தூங்குறதுன்னா சும்மாவா..?

படித்ததில் பிடித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 140 | 120 | 140 | 120 | 140 | 120 | 120 |
| கத்தரி | 160 | 240 | 200 | 200 | 200 | 160 | 110 |
| கரட் | 200 | 260 | 200 | 220 | 300 | 300 | 220 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 30 | 30 |
| பயிற்றை | 150 | 280 | 250 | 220 | 260 | 300 | 250 |
| பாகல் | 300 | 360 | 400 | 360 | 320 | 380 | 350 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 80 | 90 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 100 | 80 | 80 | 90 | 100 | 80 |
| சி.வெங்காயம் | 140 | 140 | 140 | 180 | 160 | 180 | 120 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 40 | 80 | 40 |
| தக்காளி | 200 | 200 | 150 | 160 | 140 | 140 | 150 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 60 | 60 | 40 |
| கீரை | 40 | 40 | 40 | 40 | 40 | 50 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 50 | 80 | 40 | 60 |
| பச்சை மிளகாய் | 1000 | 800 | 800 | 750 | 700 | 1000 | 700 |
| புடோலை | 140 | 100 | 140 | 120 | 120 | 160 | 120 |
| கோவா | 120 | 200 | 140 | 150 | 160 | 160 | 150 |
| வெண்டி | 200 | 350 | 200 | 140 | 140 | 120 | 120 |
| போஞ்சி | 300 | 180 | 300 | 300 | 280 | 320 | 250 |
| லீக்ஸ் | 150 | 150 | 200 | 180 | 160 | 200 | 160 |
| தேங்காய் | 50 | 45 | 40 | – | 45 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 80 | 70 | 90 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 140 | 180 | 120 | 60 |
| வல்லாரை | 30 | 30 | 30 | 20 | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 500 | – | 500 | 360 | 400 | – | 350 |
| இராசவள்ளி | 240 | 160 | 250 | 180 | 160 | 160 | 200 |



## இது புதுசு

### பட்டியாலா பஞ்சாபி

யாழ்ப்பாணத்தில் பஞ்சாபியின் உபயோகம் அதிகம். தற்போதுள்ள வரத்துக்களில் வட நாட்டு வடிவமைப்பான 'பட்டியாலா' பிஜாமாவுடன் துப்பட்டாவும் விற்பனை செய்யப்படுகிறது. விரும்பிய நிறத்தில் வாங்கிப் பொருத்தமான டொப்புடன் அணியமுடியும். இது, 1900 முதல் 2100 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இதைப் போல டொப் துணிகளும் தனியாக 500 முதல் 700 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.



## சமையலுக்கு ஏற்ற பாத்திரங்கள்

தினமும் சாப்பிடும் உணவு, சரிவிகிதத்தில் இருக்கிறதா, சத்தானதா என்று யோசிக்கும் நாம், அன்றாடம் சமையலுக்குப் பயன்படுத்தும் பாத்திரங்கள் சரியானவை தானா என்று யோசிப்பது இல்லை. அவசர கதியில் இதற்கெல்லாம் ஏது நேரம் என்று, சமைக்கவும் சாப்பிடவும் தொடங்கிறோம்.

சமையலுக்குப் பயன்படுத்தப்படும் நவீனமான பாத்திரங்களில் ஒளிந்து இருக்கும் ஆபத்துக்கள் எவை, எந்த வகைப் பாத்திரங்கள் பாதுகாப்பான சமையலுக்குத் தேவை, அவற்றை எப்படிப் பயன்படுத்தலாம் என்பது குறித்துப் பார்ப்போம்.

**மண் பாத்திரம்**

மண்பாத்திரங்களில் சமைக்கும்போது உணவின் மீது வெப்பம் மெதுவாக, ஒரே சீராகப் பரவுகிறது. மேலும், மண்பாத்திரங்களில் உள்ள நுண்துளைகள் மூலம் நீராவியும், காற்றும் உணவில் ஊடுருவி, சரியான முறையில் சமைக்க உதவுகின்றன. இதனால், அவற்றில் சமைக்கும் உணவு, ஆவியில் வேகவைத்த உணவைப் போன்ற தன்மையைப் பெறுகிறது. இதனால், சமைத்த உணவு பல மணி நேரம் வரை கெடாமல் இருக்கும்.

**இரும்புப் பாத்திரம்**

பல காலமாக சமையல் பாத்திரங்கள் செய்யப் பயன்படுத்தப்பட்டு வரும் இரும்பு, சமையலுக்கு ஏற்றது. இதில், சமைக்கும்போது வெப்பம் சீராகப் பரவுவதோடு, நீண்ட நேரம் வெப்பத்தைத் தக்கவைத்துக்கொள்ளும். கொஞ்சம் இரும்புச் சத்து உணவோடு கலந்து உடலில் சேரும்.

(தொடரும்)

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 400 | 300 | 250 | - |
| கணவாய் | 450 | 600 | 500 | 600 | 650 | - |
| பாரை | 400 | 500 | 500 | 500 | 500 | 400 |
| சுறா | 400 | 600 | 150 | 600 | - | - |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 500 | - |
| விளை | 550 | 500 | 400 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 350 | 300 | 300 | 400 | - |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | 350 | 200 |
| கிளாக்கன் | 300 | 300 | 300 | 400 | - | - |
| ஓரா | 300 | 450 | - | 400 | - | 350 |
| திரளி | 200 | 300 | 150 | 350 | 100 | - |
| நகரை | 150 | 250 | 200 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 150 | 150 | 120 | 100 | - |
| ஒட்டி | 180 | 150 | 200 | 300 | 250 | 300 |
| திருக்கை | 150 | 350 | 300 | 300 | 200 | - |
| பாலை | 350 | 200 | - | 400 | 300 | - |
| வாளை | 100 | 150 | 200 | 350 | 200 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 100 | 50 | - |
| மதனம் | 150 | 200 | 400 | 250 | 100 | 300 |

## நாளை

மார்கழி -10
சனிக்கிழமை 26.12.2015
திதி: பிரதமை பி.ப.04.42
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப.12.56
ராகுகாலம்: 09.27-10.57 வரை
சுபநேரம்: 03.27- 04.57 வரை
ஆர்திராதரிசனம்




## பால் வடை

**தேவையானவை:**

பச்சரிசி – 2 கப்,
பசும்பால் – 3 கப்
உப்பு – ஒரு கரண்டி
நெய் – பொரிக்க.

**செய்முறை:**

பச்சரிசியைக் கழுவி வைக்கவும். பாலைக் காய்ச்சி, அதில் களைந்த அரிசியைப் போட்டு அரை வேக்காடாக வேக வைக்கவும். பிறகு அதைக் கெட்டியாக வடை மா பதத்தில் அரைத்து உப்புச் சேர்க்கவும்.

சட்டியில் நெய் ஊற்றி, காய்ந்ததும் மாவைச் சின்னச் சின்ன வடைகளாகத் தட்டிப் போட்டு, பொரித்து எடுக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபிடெல்லுடன் பங்காளியாக யூனியன் அஷூரன்ஸ் இணைவு

தேசிய கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநரான மொபிடெல்லின், நடமாடும் நிதித் தளமான எம் காஸ், யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சீ உடன் பங்காளியாக இணைந்துள்ளது. யூனியன் அஷூரன்ஸ், தனது ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணங்களின் வசூல் செயற்பாட்டுக்காக, எம் காஸ் தளத்தை, ஆயுள் காப்புறுதி ஆலோசகர்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இந்தப் புதிய சேவையின் ஊடாக யூனியன் அஷூரன்ஸ் ஆலோசகர்களுக்கு தமது வாடிக்கையாளர்களின் ஆயுள் காப்புறுதிக் கொள்கைகளை துரிதமாகவும், சுலபமாகவும் புதுப்பித்துக்கொள்ள முடியும். அதேவேளை, வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவுகளைச் செலுத்திய அதே கணத்தில், தமது கொடுப்பனவை உறுதி செய்யும் முகமாக குறுந்தகவல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஏற்பாடானது, காப்புறுதிக்கான மாதாந்த தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தும்போது வாடிக்கையாளர்களுக்கு வசதி, பாதுகாப்பு மற்றும் தெளிவு போன்ற விடயங்களுக்கு உத்தரவாதமளிக்கிறது.

இந்த முயற்சியானது, இலங்கையில் முதல் முறையாக அறிமுகப்படுத்தப்படுவதுடன், மொபிடெல் எம் காஸ் ஆனது, அதன் சேவைகளை யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சீயின் கொடுப்பனவு வசூல் செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தும் நோக்கத்திற்காக வழங்குகின்றது. அத்துடன், தமது காப்புறுதிச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பயனுள்ளதும், பொருத்தமானதுமான ஒரு நுட்பத்தையும் உருவாக்கவுள்ளது. நிறுவப்பட்ட எம் காஸ் தளத்தின் ஊடாக வழங்கப்படும் தொழில்நுட்ப உதவிகளுடன் யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சீ வழங்கும் காப்புறுதி தொடர்பான தீர்மானங்கள் தமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு மிகத் திறமையான முறையில் ஆதரவை வழங்குகின்றன.

இந்த முன்னெடுப்புக்காக மொபிடெல் எம் காஸ் வழங்கும் தொழில்நுட்ப வளங்களும், அறிவும் பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக காப்புறுதித் தீர்மானங்களை நாடும் எதிர்கால சந்தைகளை ஊக்குவிப்பதற்காக யூனியன் அஷூரன்ஸ் பீஎல்சீ யின் வளர்ச்சித் தகைமைகளை மேலும் அதிகரிக்கும். உயர் தரம் மிக்க mCash தொழில்நுட்பமானது, நகர்ப்புறங்களுக்கு மிகத் தொலைவில் அமைந்துள்ளதும் பின்தங்கியதுமான பிரதேசங்களின் வர்த்தக வாய்ப்புகளுக்கு உறுதுணையாக அமையும்.

துரித வளர்ச்சியுடனும், அதிகரித்து வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையுடனும் மொபிடெல்லானது, நாடளாவிய ரீதியில் மிக உறுதியான ஓர் இடத்தைப் பிடித்துள்ளது. அதன் எம் காஸ் ஆனது, நிதிக் கொடுக்கல் வாங்கல்களை மிகத் துரிதமாகவும், சுலபமாகவும் மேற்கொள்வதற்காகவும், தமது வாடிக்கையாளர்களுக்கு நடமாடும் நிதிக் கணக்குகளைப் பேணுவதற்கும் வசதியளித்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்கப்பட்ட **எம் காஸ்** ஆனது, வைப்புச் செய்தல், மீளப்பெறல், நிதி மாற்றீடு செய்தல், பொதுச் சேவைகள் பட்டியல்களை செலுத்துதல், காப்புறுதித் தவணைக் கட்டணங்கள் மற்றும் லீசிங் கொடுப்பனவுகள், அரச நிறுவனங்களுக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், நன்கொடைகளை வழங்குதல் மற்றும் நாளாந்த பொருள்கள் சேவைகளின் கொள்வனவு போன்றவை அடங்கலாக பரந்த அளவிலான சேவைகளை வழங்குகிறது. (து)

வணிகம்

# கல்விக்கு வலுவூட்டும் சி.டி.பி. சிசு திரி




சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பிஎல்சி, அதன் சமூக பொறுப்புணர்வுத் திட்டத்தின் முக்கிய பகுதியான கல்விக்கான ஆதரவுடன், சி.டி.பி "சிசு திரி" திட்டத்தின் 8ஆம் திட்டத்தின் ஊடாக தேசிய பரீட்சைகளில் உயர் சாதனையீட்டிய மாணவர்களுக்கு 46 புலமைப் பரிசில்களை வழங்கியுள்ளது. சி.டி.பி நிறுவனமானது, அனைவராலும் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வை டவுன் ஹோல் கொழும்பு 10 இல் ஒழுங்கு செய்திருந்ததுடன், பிரதம விருந்தினர்களான, ஆலோசகர் குழந்தைகள் மனநல பேராசிரியர் ஹேமமாலி பெரேரா மற்றும் சி.டி.பியின் தலைவர் ஹெர்சேல் குணவர்தன ஆகியோர் தேசத்தின் எதிர்காலத்துக்கு தமது பங்களிப்பை வழங்கவுள்ள குறித்த மாணவர்களைக் கௌரவித்திருந்தனர்.

சி.டி.பி. பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் நாணயக்கார தெரிவித்ததாவது, "சி.டி.பியைப் பொறுத்தவரை, நாம் எப்போதும் வலுவூட்டி வரும் நிலையான வளமாக கல்வி திகழ்கிறது. இதுவே துடிப்பான மற்றும் சக்தி வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் என்பதை நாம் நன்கறிந்துள்ளோம். இளம் தலைமுறையினர் தரமான கல்வியைப் பெறுவதை உறுதி செய்யவேண்டியமை எம்மைப்போன்ற கூட்டாண்மை நிறுவனங்களின் பொறுப்பாக இருக்க வேண்டும். எந்தவித பொருளாதார நெருக்கடிகளுமின்றி, மாணவர்கள் தங்கள் கல்வியை தொடர்வதற்கான வசதியை நாம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்" என்றார்.

> "சி.டி.பியைப் பொறுத்தவரை, நாம் எப்போதும் வலுவூட்டி வரும் நிலையான வளமாகக் கல்வி திகழ்கிறது. இதுவே துடிப்பான மற்றும் சக்தி வாய்ந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் என்பதை நாம் நன்கறிந்துள்ளோம்."

இந்தத் திட்டத்தின் மூலம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வெற்றியாளர்களுக்கு 50,000 ரூபா வீதம் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தோற்றும்வரை வழங்கப்படும். அதேபோல க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் உயர் சித்தி எய்தும் மாணவர்களுக்கு தலா 30,000 ரூபா வீதம் அவர்கள் ஜீ.சி.ஈ உயர் தரப் பரீட்சையில் தோற்றும் வரை வழங்கப்படும். சி.டி.பி நிறுவனமானது நிதித் தொகையை மாணவர்களின் கணக்கிலிடாமல் பெற்றோரிடம் ஒப்படைக்கின்றமையினால் அதன் அனுகூலங்களை மாணவர்கள் நேரடியாக அனுபவிக்க முடியும். (து)

# நுட்பம்



## உலகின் முதலாவது இணையத்தளத்தின் வயது 25

இன்று உலகே சுருங்கி ஒரு கிராமம் போல் தோற்றமளிப்பதற்கு இணையத்தளம் முக்கிய காரணமாக விளங்குகின்றது.


இவ்வாறான இணையத்தளத்தை முதன் முதலில் ரிம் பேர்னர்ஸ் லீ என்பவர் அறிமுகம் செய்திருந்தார்.

அதாவது சுவிற்ஸர்லாந்தில் உள்ள சிரீன் எனும் ஆய்வு மையத்தில் பணிபுரிந்த இவர், 1990ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி முதன் முதலாக வேல்ட் வைட் வெப் (World Wide Web (WWW) எனும் நெறிமுறையை அறிமுகம் செய்து தற்போதைய இணையத்தளங்களுக்கு அடித்தளமிட்டிருந்தார்.

இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், தற்போது உலகெங்கிலும் சுமார் 4 பில்லியன் வரையான இணையத்தளங்கள் அல்லது இணையப் பக்கங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (து)

## ஸ்பேஸ் எக்ஸ் நிறுவன ரொக்கெட் வெற்றிகரமாகத் தரையிறக்கம்

விண்வெளிப் பயணத்தை முடித்தபின்னர், ரொக்கெட்டை மீண்டும் தரையில் பாதுகாப்பாக இறக்கும் சாதனையை தனியார் நிறுவனமான விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் ஸ்பேஸ்- எக்ஸ் படைத்துள்ளது. 75 மைல் உயரத்தில் மணிக்கு 600 மைல்கள் வேகத்தில் பறந்து கொண்டிருந்த ரொக்கெட் தனது அதிசயத்தை ஆரம்பித்தது. ரொக்கெட்டின் முன்பகுதி பிரிந்து விண்ணுக்கு ஏவப்பட்டது. அதன் பால்கன்-9 கலம் செங்குத்தாக தரையிறக்கப்பட்டது. ரொக்கெட்டுக்களை மீளவும் பயன்படுத்துவதற்கான திட்டத்தில் இது ஒரு பெரிய முன்னேற்றமாகும். விண்வெளிச் சுற்றுலாவுக்கான திசையில் மேலும் எம்மை அது முன்னகர்த்தியுள்ளது. (து)



## வெள்ளைக் காண்டாமிருகம் சாவு

உலகின் அரிய வகைக் காண்டாமிருகங்களில் ஒன்றான வடக்கு வெள்ளையினக் காண்டாமிருகமொன்று, அமெரிக்காவில் மரணமடைந்துள்ளது. இவ்வினத்தில், இன்னமும் மூன்றே மூன்று காண்டாமிருகங்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன.

கலிபோர்னியாவின் சான் டியாகோவில் உள்ள பூங்காவொன்றிலேயே, இந்தக் காண்டாமிருகம் உயிரிழந்துள்ளது.

41 வயதான, நோலா என்ற இந்தப் பெண் காண்டாமிருகம், 1989ஆம் ஆண்டில், அந்தப் பூங்காவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. அது முதல், அங்கேயே வசித்து வந்துள்ளது.

1,800 கிலோ கிராம் எடையுள்ள அந்தக் காண்டாமிருகம், அண்மைக்காலமாக, தொடர்ச்சியான மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வந்தது. எனினும், அதன் உடல்நிலை மோசமடைந்து, தற்போது உயிரிழந்துள்ளது.

அவற்றின் கொம்புகளுக்காகக் கொல்லப்படுவதன் காரணமாக, வட வெள்ளையின காண்டா மிருகங்கள், காடுகளில் அழிந்துள்ளதாக 2008ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது.



நான்கு மாத்திரம், பூங்காக்களில் பாதுகாப்பாகக் காணப்பட்டன. இதில், நோலா உயிரிழந்துள்ள நிலையில், ஏனைய மூன்றும், கென்யாவிலுள்ள சரணலாயமொன்றில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 இலக்கங்களைக் கொண்ட அடையாள அட்டை அறிமுகம்

கொழும்பு,டிசெ.25
அடுத்து வருடம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து 12 எண்களைக் கொண்டுள்ள புதிய தேசிய அடையாள அட்டையொன்று விநியோகிக்கப்படுமென ஆள்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட 9 எண்களைக் கொண்டுள்ள தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக, புதிதாகப் பெறப்படும் அனைத்துத் தேசிய அடையாள அட்டைகளும் 12 எண்களையே கொண்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தேசிய அடையாள அட்டைக்கு அமைய, இலக்கத்தின் ஆரம்பத்தில் அடையாள அட்டைக்கு உரிய நபரின் பிறந்த தினத்துடன், முழுமையான ஆண்டும் முடிவுறும். அத்துடன் இலக்கத்தின் முடிவில் இதுவரையிலும் குறிப்பிடப்பட்டுள்ள வீ எழுத்தும் நீக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஜ-22)

## போனஸ் கொடுப்பனவாக ரூ.37,500; முன்வைத்த பிரேரணை நிராகரிப்பு

கொழும்பு,டிசெ.25
நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் ஊழியர்களுக்கு போனஸ் கொடுப்பனவு ஒன்றாக 37 ஆயிரத்து 500 ரூபாவைப் பெற்றுக் கொடுக்கும் பிரேரணையை நிதி அமைச்சு நிராகரித்துள்ளது.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களுக்கு 37 ஆயிரத்து 500 ரூபாவை போனஸ் கொடுப்பனவாகப் பெற்றுக் கொடுக்கும் பிரேரணையை அமைச்சர் ரவூப் ஹக்கீம் அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, அந்தளவு தொகையொன்றை வழங்குவதற்கு அனுமதி வழங்க முடியாதெனவும், 25 ஆயிரம் ரூபாவை போனஸ் கொடுப்பனவாக வழங்குவதற்கு மாத் திரம் அனுமதிக்க முடியுமெனவும் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

## இலங்கையில் 2030 இல் எயிட்ஸை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு.டிசெ.25
2030 ஆம் ஆண்டாகும் போது எச்.ஐ.வி மற்றும் எயிட்ஸ் தொற்றை இலங்கையில் இருந்து முற்றாகவே ஒழிப்பதற்கான விரிவான வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய நாடு கள் அமைப்பின் எச்.ஐ.வி. எயிட்ஸ் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் தேசிய முகாமையாளரான மருத்துவர் தயானாத் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதுவரையிலும் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றின் காரணமாக உலகில் 39 மில்லியன் பேர் சாவடைந்துள்ளனர். உலகில் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளோரில் பெருமளவிலானோர் தென்னாபிரிக்காவைச் சார்ந்துள்ள நாடுகளில் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை சட்ட உதவிகள் ஆணைக்குழுவால் ஹெக்ரப் கொப்பேகடுவ விவசாய ஆய்வுகள் நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த எச்.ஐ.வி. எயிட்ஸ்தொற்றைஒழித்துவிடும் வேலைத்திட்டத்துக்காக இடம்பெற்றிருந்த ஊடகச் சந்திப்பொன்றில் வைத்தே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 25.11.2015 சிவபதமடைந்த அன்புத் தெய்வம்.

**அமரர் நடராசா கிருபாகரன்**

தோற்றம் 1955.09.28 — மறைவு 2015.11.25

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு 25.12.2015 வெள்ளிக் கிழமை - காலை 6மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். மேலும்

அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு துயர் பகிர்ந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு தயவாக கேட்டுக்கொள்கின்றோம்.

புதுவளவு சமரபாகு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**தம்பு துரைசிங்கம் (தம்பியன்)**



மண்ணுலகில் 10.01.1934 — விண்ணுலகில் 19.12.2015

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு, சந்தன மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கோயில்வீதி, பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட தம்பு துரைசிங்கம் (தம்பியன்) 19.12.2015 சனிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - மரகதம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான ஜோசப் - மேரிமாக்கிறட் (ராசமணி) தம்பதிகளின் அன்பு மருமகனும், எல்வினா ஜெயமணியின் (பிரான்ஸ்) பாசமிகு கணவரும், ரவி (கனடா), றூபன் (பிரான்ஸ்), றமிலா (ஜேர்மனி), றதினி (பிரான்ஸ்), றொணி (கனடா), றெமி (பிரான்ஸ்), றேணுகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கொன்செப்ராராணி (கனடா), சாந்தி (பிரான்ஸ்), ஜோண் (ஜேர்மனி), ஜோர்ஜ் (பிரான்ஸ்), கின்சா (கனடா), செல்வம் (பிரான்ஸ்), யூட் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், லிண்டா, லிதியா,லொய்க், லெவின், ஜொணி, காலஞ்சென்ற ஜொனக்சன் மற்றும் ஜெனுசா, ஜெனிபர், கிரேசியா - கேதீஸ், மார்சியன், டாமியன், செறினா, ஜொய்லின், ஜிப்சன், பிரண்டன், பிராஜன், பிறிட்னி, திபானி, ஆஸ்லி, கோட்னி ஆகியோரின் பாசமிகு பேரனும், பாலசிங்கம் (கொழும்பு), காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் பூமணி (கனடா), காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் அஞ்சலா (கனடா), இம்மானுவேல் (யாழ்ப்பாணம்),காலஞ்சென்ற ரெட்ணசிங்கம் மற்றும் றுக்கு மணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் 28.12.2015 திங்கட்கிழமை "Eglise STE Genevieve" ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் Avenue Francois Mitterand 95140 Garges - les - Gonesse" சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: 28.12.2015 காலை 6 மணிக்கு யாழ்.புனித புவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
ஜெயமணி
(மனைவி- பிரான்ஸ் - 0033 950 231 711)

(67034)
(11,15,18)

தகவல்: துரைசிங்கம் அருள்ராசா
(பேரமகன்)
15/1, சோமசுந்தரம் அவனியூ,சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.

### கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதிய தலைவரும், கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுநிலை அதிபருமாகிய

திரு அ.பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவி

**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**
(ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எம்மையெல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது நிதியத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
நம்பிக்கை நிதியம்,
கொக்குவில்.

(67038)
(11,15,18)

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**லிங்கநாயகம் சாரங்கன்(சாரு)**



மலர்வு 22.06.1989
உதிர்வு 28.12.2012

திதி : 25.12.2015(பூரணை)

அன்பின் நிறைகுடமான எம் அன்புத் தெய்வமே ! சாரு
ஆண்டுகள் மூன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் மறையாது
எம் நெஞ்சை விட்டு
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

03 ஆம் வட்டாரம், நெல்லவரை,
நெடுந்தீவு.

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

**திருமதி மேரி மாகிறேற்றம்மா இம்மனுவேல் இக்னேசியஸ் இரத்தினராசா (செல்வமலர்)**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிமாகிறேற்றம்மா இம்மனுவேல் இக்னேசியஸ் இரத்தினராசா 23.12.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இம்மனுவேல் இக்னேசியஸ் இரத்தினராசா (சின்ன பவா) அவர்களின் பாசமிகு மனைவியும் லூர்த்துமேரி பெனடிக்ற்றம்மா (பொன்ரோஸ்மலர்) அவர்களின் அன்புச் சகோதரியும் திலகன், துளசி, கஸ்தூரி, காலஞ்சென்ற திருக்குமார் மற்றும் தீபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் கிருஷா, அருள்தேவன், நரேஷ்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியாரும், குறிஞ்சிமலர், அறிஞன், இளநிலா, நிர்மலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நாளை(26.12.2015) சனிக்கிழமை அவரது இல்லத்திலிருந்து புனித தோமையார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10.00 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய சந்தை வீதி,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 735 1900

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
**R.T . சம்பந்தர்**
(பட்டயக் கணக்காளர், கிறிஸ்டன் எம்.என்.எஸ். முன்னாள் பங்காளர், தொண்டமானாறு , மலேசியா))

மலர்வு 29.07.1923 — உதிர்வு 26.11.2015

கடந்த 26.11.2015 மலேசியாவில் காலமான எமது குடும்ப அன்பின் சிகரம் R.T சம்பந்தர் அவர்களின் 31 ஆம் நாள் நினைவும் பிரார்த்தனை வழிபாடும் 26.12.2015 மலேசியாவில் நடைபெறும். அவரின் நினைவையொட்டி இங்கு 26.12.2015 சனிக்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் விசேட வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து ஆலய வீதியிலுள்ள வைத்திலிங்கம் மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

எங்கள் குடும்ப அன்பின் சிகரமே உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்- மலேசியா
மனைவி - திலகராணி சம்பந்தர்
பிள்ளைகள் - மாலதி. சுமதி. வசந்தி
முரளிதரன்(அவுஸ்திரேலியா)
சிவகுமாரன் (தம்பி-கனடா)

தங்கை - சடாட்சரதேவி
பேறாமகள் - S.சுதாமினி
தொண்டமானாறு.

msambanthar@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்ச்சைக்குரிய

கஜபா படைப்பிரிவைச் சேர்ந்த இவர், 2007ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை - விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டப் போரை முன்னெடுத்த இலங்கை இராணுவத்தின் வன்னி 57ஆவது படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கியிருந்தார்.

இந்த இறுதிக்கட்டப் போரில் பொதுமக்கள் இலக்கு வைத்துத் தாக்கப்பட்டதற்குப் பொறுப்பாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டுகளுக்கு இவர் உள்ளாகியிருக்கிறார்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், ஜேர்மனியில் இலங்கைக்கான துணைத் தூதுவராகவும், முல்லைத்தீவுப் படைகளின் தலைமையகத் தளபதியாகவும் மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் பதவி வகித்திருந்தார்.

புதிய அரசு பதவிக்கு வந்ததையடுத்து, இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் நியமிக்கப்பட்ட போது, சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அதற்குக் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தன.

55 வயதுக்குப் பின்னரும் இவருக்கு சேவை நீடிப்பு வழங்கவேண்டும் என்றும், போர்க்குற்ற விசாரணையில் இருந்து அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் நாடாளுமன்றில் கோரியிருந்தார்.

இதேவேளை, மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்படவுள்ளதாகவும் முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், இவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்னமும் சேவை நீடிப்பு உத்தரவை வழங்காத நிலையில், இன்றுடன் ஓய்வுபெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## அரசியல்

கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்ற நல்லெண்ணத்தை மையமாகக் கொண்டு இன்றைய கிறிஸ்மஸ் தினத்தில் விசேட வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

இவ்வாறு யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி, சமாதான ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் ஆணைக்குழு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் 15 சிறைச்சாலைகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடைக்கால நிர்வாக அமைப்புக்களில் வேலை பார்த்தவர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உணவு கொடுத்தவர்கள் என்றவாறு பல குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அவ்வாறு மகசீன் சிறைச்சாலையில் 8 பெண் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்களில் 4 பேர் வழக்குத் தொடரப்படாத நிலையில் 23 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 14 பேர் வழக்குத் தொடரப்படாமல் 3 வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். 120 பேருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளது. அவர்கள் 3 தொடக்கம் 8 வருடங்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். மேலும் 95 பேருக்கு வழக்கு நடைபெற்று வருகிறது. மற்றையவர்களுக்கு சிறப்பு நீதிமன்றங்களில் 3 தொடக்கம் 5 வருடங்களாக வழக்கு நடைபெறுகின்றது.

இதுதவிர, கடத்தப்பட்டுக் காணாமற்போகச் செய்யப்பட்ட 15 இற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்த அரசாங்கம் தீர்வு கொடுக்கும் என நாங்கள் நம்பவில்லை.

இந்நிலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையாவது, நல்லாட்சி அரசு என கூறிக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களின் அதிக ஒத்துழைப்புடன் ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும்.

அண்மையில் யாழ்.குடாநாட்டில் காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் நடைபெற்றிருந்த போது, காணாமற்போன தங்கள் உறவினர்கள் சிலர் சிறைகளில் இருப்பதாகச் சாட்சியங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன.

எனவே காணாமற்போன பலர் அவ்வாறு இருக்கலாம். எனவே தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவேண்டும். இவர்கள் 2016 ஆம் ஆண்டு பிறப்பதற்கு முன்னர் விடுதலை செய்யப்படவேண்டும். அதனை வலியுறுத்தியதாக இன்றைய கிறிஸ்மஸ் தினத்தில் இறைவனை பிரார்த்தியுங்கள் என்று அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (வ-4,101)

## உள்ளகப்

முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைப் பொறிமுறைக் கட்டமைப்பு தொடர்பாக பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல்களும் ஆலோசனைகளும் இடம்பெற்று வருகின்றது.

குறித்த தீர்மானம் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் அரசினால் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றைப் பல்வேறு கட்டங்களாகவே முன்னெடுக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. மிகவும் உயர்ந்த மட்டத்தில் இந்த விடயம் குறித்து அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

அடுத்த மாதம் இந்த விடயம் குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கும் வகையில் தற்போது ஆலோசனைகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக உள்ளக விசாரணைப் பொறிமுறைக் கட்டமைப்பை முன்னெடுப்பது குறித்து அரசு ஏற்கனவே ஓர் அடிப்படைத் திட்டத்தை முன்வைத்துள்ளது.

அந்தத் திட்டத்தின்படி பொது மக்கள் மத்தியில் கலந்துரையாடல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. முதற்தடவையாக அரசு இந்த விடயம் குறித்து விரிவான முறையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

அத்துடன் இராஜதந்திர ரீதியிலும் அரசு பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துவருகின்றது. விரைவில் இந்த விடயத்தில் இறுதி இணக்கப்பாட்டுக்கு வர முடியும். அதன் பின்னர் உள்ளக விசாரணைக் கட்டமைப்பை முன்னெடுக்க முடியும் என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## புனர்வாழ்வுக்குப்

டுள்ள கோவிந்தசாமி சுந் தரமணியின் பெயரும் உள்ளடக் கப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் கடந்த 10 ஆம் திகதி கண்டி உயர் நீதிமன்றத்தில் அவர் முற்படுத்தப்பட்ட போது, அவரை எதிர் வரும் மே மாதம் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இதன் போது, சுந்தரமணி, தனது பெயர் புனர்வாழ்வு வழங்கப்படுவோர் பட்டியலில் இருந்தது என்பதை சட்டத்தரணி ஊடாக நீதிபதிக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தரப்புச் சட்டத்தரணியிடம், அவ்வாறு ஏதாவது பெயர்ப் பட்டியல் உள்ளதா என்று நீதிபதி வினவிய போது, சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அவ்வாறு எந்தவொரு பெயர்ப் பட்டியலும் வழங்கப்படவில்லை என்று அரச தரப்புச் சட்டத்தரணி பதிலளித்ததை தொடர்ந்து, அவரது விளக்கமறியல் நீடிப்பை நீதிபதி உறுதிப்படுத்தினார். (த-5)

## மகிந்த

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும் விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்நிலையில், அரசின் மேற்படி யோசனை தொடர்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கருத்து வெளியிடும்போது கூறியவை வருமாறு:

அரசமைப்புச் சீர்திருத்த நடவடிக்கை பற்றி கவனம் செலுத்தி வருகின்றோம். அதற்காக முன்வைக்கப்படவுள்ள யோசனை குறித்தும் ஆழமாக ஆராய்ந்து வருகின்றோம். எனவே, இதுபற்றி எமது நிலைப்பாடு ஜனவரி முதல் வாரத்தில் அறிவிக்கப்படும்- என்றார்.

இந்த அறிவிப்பு ஜனவரி 4ஆம் திகதி வெளியிடப்படும் என்றே அறியமுடிகின்றது. அத்துடன், அரசின் திட்டம் தொடர்பில் ஆராய்வதற்கும், யோசனைகளைத் தயாரிப்பதற்காகவும் பீரிஸ், உதய கம்மன்பில ஆகியோர் தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. (த-சி)


### விற்பனைக்கு

42- மிற்சுபி கன்ரர் விற்பனைக்குண்டு
தொடர்பு: 077 4944653
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.




### வீடு வாடகைக்கு

தொடர்பு: 077 844 9687

திருநெல்வேலி, ஆடியபாதம் றோட், கேணியடி வைரவர் கோயில் அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
(67052)
(11,15,18)

### தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் இரண்டு பேர் கொண்ட வைத்திய குடும்பம் ஒன்றிற்கு தங்கி இருந்து பணிபுரியக் கூடிய பணிப்பெண் தேவை.
தொடர்பு: 071 1035422

### பிரத்தியேக வகுப்புக்கள்

குடியுரிமை, வணிகமும் கணக்கீடும் தரம் 10, 11இற்கும் கணக்கீடு, பொருளியல் உயர்தர வகுப்புக்கும் 6-11வரை விஞ்ஞானமும் கற்பிக்கப்படும்.
077 832 1677, 077 906 4595

### வீடு வாடகைக்குண்டு

யாழ். நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 4598750

### மணமகள் தேவை

1972 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள்தேவை.
மணமகன் எந்தவிதமான தீயபழக்கமுமற்றவர்
தொடர்பு: 077 0465650

### Drums Set விற்பனைக்கு

தொடர்பு: 077 698 0573

நல்ல நிலையிலுள்ள ஒரு கைப்பாவனையிலுள்ள Drums Set (Link) உடன் விற்பனைக்கு உண்டு.
தேவாலயங்கள்,
இசைக் குழுக்களுக்கு ஏற்றது. (67056)
(11,15,18)

### SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 439
சீட்டிழுப்பு திகதி 2015.12.24
வெற்றி இலக்கங்கள்
28 29 56 60 G
அடுத்த சீட்டிழுப்புக்கான ஜக்பொட்
ரூ. 41,206,800/=

### ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு எண் 1222
சீட்டிழுப்பு திகதி 2015.12.24
வெற்றி இலக்கங்கள்
18 28 47 53 P
அடுத்த சீட்டிழுப்புக்கான ஜக்பொட்
ரூ. 37,590,360/=

### கண்ணீர் அஞ்சலி

யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்த இசை ஆசிரியர்
திருமதி ஜனார்த்தனி பிரபாகரனின்
(யா/வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்)
தந்தையார்
**வேலுப்பிள்ளை ஆறுமுகம்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.
இசை ஆசிரியர் கழகம்
யாழ் கல்வி வலயம்.
(67057)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

கரணவாய் அண்ணா சிலையடியைச் சேர்ந்த
லயன் பரமானந்தம் மகாராணி தம்பதியரின்
கனிஷ்ட புத்திரி
**செல்வி லக்சனா**
20.12.2015 அன்று கிழக்கு
பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
பொதுப்பட்டமளிப்பு விழாவில்
**கலைமாணி B.A பட்டம்**
பெற்றமையையிட்டு அவரை நெஞ்சம்
நிறைய வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
சுகந்தன் - வனிதா குடும்பம்.
ஜெகநாதன் - அனுராதா குடும்பம்.
ரசித்குமார் - லக்சிதா குடும்பம்.



### துயர் பகிர்கின்றோம்



யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர்
திரு. அ.பஞ்சலிங்கம் அவர்களின்
அன்புத் துணைவியாரும் உரும்பிராயைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்
கொண்ட இளைப்பாறிய உரும்பிராய்
இந்துக்கல்லூரியில் விஞ்ஞான பாட
ஆசிரியையாகக் கடமையாற்றிய
**திருமதி பரமேஸ்வரி பஞ்சலிங்கம்**
அவர்களின் மரணச்செய்தி கேட்டு
ஆழ்ந்த துயரடைகின்றோம். அத்துடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !
கனிஷ்ட வாழ் ஆனந்தி - றஞ்சன் தம்பதியினரின் அனுசரணையில்
நடைபெறும் முன்பள்ளிகளின் ஆசிரியர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைத் தாக்கியதுடன் மிரட்டினார் ஹிருணிகா

## கடத்தப்பட்டவர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 25

வாகனத்தில் கடத்தப்பட்ட என்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா தாக்கியதோடு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் அவரது அலுவலகத்தில் வைத்து எச்சரித்தார் என்று கடத்தப்பட்ட நபர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஹிருணிகாவின் ஆள்கள்தான் தன்னைக் கடத்தியதாகக் கூறும் அவர், இன்னமும் 2 பேர் இது வரை கைது செய்யப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆனால் கடத்தலுக்கும் தனக்கும் தொடர்பு இல்லை எனக் குற்றச் சாட்டைக் ஹிருணிக்கா மறுத்துள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்குச் சொந்தமான டிப்பெண்டர் ரக வாகனத்தில் சென்றவர்களால் தெமட்டகொட ஆடை விற்பனை நிலையத்தில் பணியாற்றிய 34 வயதுடைய அமில பிரியங்கர அமரசிங்க என்பவர் க...திச் செல்லப்பட்டிருந்தார். அவ்வாறு கடத்தப்பட்டுக் கடுமையாக தாக்கி, விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இளைஞனே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது: -

நான் பணிபுரியும் நிறுவனத்தில் வைத்து என்னைக் கடத்தினார்கள். அதன்போது கடை முகாமையாளர் கடத்தல்காரரை யார் என்று கேட்க பொலிஸ் என்று கூறியுள்ளனர். அடையாள அட்டையைக் காட்டுமாறு அவர் கேட்க, அவசியமில்லை என்று அவரைத் தள்ளி விட்டு என்னைக் கடத்தி வந்துவிட்டனர்.

வாகனத்தினுள் வைத்து என்னைக் கடுமையாகத் த...கினர். எங்கே கொண்டு செல்கின்றீர்கள் என்று நான் கேட்க, பொலிஸ் நிலையத்துக்குத்தான் என்று கூறிய போதும், அந்த டிபென்டர் வாகனம், நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகாவின் அலுவலகத்தில் நிறுத்தப்பட்டது. அங்கு ஏராளமான மக்கள் முன்பாக என்னைக் கழுத்தைப் பிடித்து இழுத்துச் சென்றனர்.

என்ன வேலை செய்திருக்கின்றாய் என்று ஹிருணிகா கத்தினார். இந்த மனிதன் எனக்கு நன்றாக உதவி செய்திருக்கின்றார். அவர், கூறுவதை என்னால் மறுக்க முடியாது. கூறியதை நம்பாமலும் இருக்க முடியாது. என்னுடைய தேர்தலுக்கு நன்றாக உதவியிருக்கின்றார். ஆகையால், தான் உன்னைத் தூக்கினேன் என்று அவர் என்னிடம் கூறினார்.

எனக்கு அதிகாரங்கள் இருக்கின்றன. சட்டமும் தெரியும். எந்த நேரத்திலும் உன்னைத் தூக்க முடியும். அதுதான் தூக்கிக் கொண்டு வந்தேன் என்றார். சட்டம் தெரியுமாயின், ஏன் என்னைப் பொலிஸில் ஒப்படைக்கவில்லை? என்று கேட்க, தனக்குப் பலமிருக்கின்றது பொலிஸ் தேவையில்லை என்றார்.

அதன் பின்னர் ஒரு அலைபேசி அழைப்பு வந்தது. என்னிடம், அதனைத் தந்து, எனது முகாமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதனை, மீளப் பெற்றுக் கொள்ளுமாறு கூறு என்றனர். எனது முகாமையாளரிடம் கூறிவிட்டு என்னை அழைத்து வந்திருக்கலாம். எந்தவிதமான காரணங்களும் இன்றித் தானே, என்னைக் கடத்தி வந்தீர்கள். என்னால் மீளப்பெற்றுக் கொள்ள முடியாது என்றேன்.

முறைப்பாட்டை, மீளப்பெற்றுக் கொள்ளுமாறும் இல்லையென்றால், போதைப் பொருள் குற்றத்துக்கான நான்கு வருடங்கள் சிறையில் அடைக்க முடியும் என்றும் கூறினர். பின்னர் ஓட்டோவில் ஏற்றித் தனியாக அனுப்பிவிட்டனர் –என்றார்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் ஒருவரை கடத்த ஆதரவு வழங்குகின்றமை மற்றும் கடத்தியவரை அச்சுறுத்துகின்றமை தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளரான பிரதீபா மஹானாஹேவாவிடம் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோது, குற்றவியல் சட்டத்தின் 353 சரத்திற்கமைய, எவரேனும் ஒரு இடத்தில் இருந்து இன்னுமொரு இடத்திற்கு பலவந்தமாக அழைத்து செல்லப்படுதல், அல்லது அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி அழைத்து செல்லும் செயற்பாடானது கடத்தலாகவே கருதப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எவரேனும் இந்த குற்றத்திற்கு ஆதரவு வழங்குவாராயின் அவரும் தவறிழைத்தவராகவே கருதப்படுவார். இதற்காக 7 வருடச் சிறை தண்டனை வழங்க முடியும். அதுமாத்திரமின்றி கடத்திச் செல்லப்பட்டு அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் நடத்தப்படுமாயின் அந்தத் தண்டனையானது அதிகரிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (த-4)

### தனியார்

உறவுகள் அமைச்சர் ரவிந்திர சமரவீரவினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கே அமைச்சரவை அனுமதியை வழங்கியுள்ளது.

இதன்படி அடுத்த வருடத்தில் இருந்து தனியார் துறையினருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா வேதன உயர்வு வழங்கவேண்டும். தனியார் துறையில் பணிபுரியும் சேவையாளர்களின் ஆகக்குறைந்த வேதனத் தொகை தொடர்பில் சட்டம் ஒன்றுக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கயந்த கருணாதிலக குறிப்பிட்டார். (த-5)

# ஒருவகை மீனை உட்கொண்ட குடும்பஸ்தர் ஒவ்வாமையால் சாவு

## வேலணையில் சம்பவம்

பேத்தை எனும் ஒரு வகை மீனை உட்கொண்ட குடும்பஸ்தர் ஒருவர் ஒவ்வாமையினால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேலணை 4ம் வட்டாரப்பகுதியினைச் சேர்ந்த நாகேஸ்வரன் பதஞ்சலி (வயது–34) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

நேற்றுமுன்தினம் குறித்த மீனினை சமைத்து உட்கொண்டவருக்கு இரவு 10 மணியளவில் ஒவ்வாமை ஏற்பட்டு வாந்தியுடன் கூடிய தலை சுற்று ஏற்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்தார்.

எனினும் குறித்த குடும்பஸ்தர் சிகிச்சை பயன் இன்றி நேற்றுமுன்தினமிரவு 11 மணியளவில் உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(வ–107)

### சீனா செல்கிறார் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அடுத்த மாதம் நடுப்பகுதியில் சீனாவுக்கான உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் இவர், வெளிநாட்டுக்கு மேற்கொள்ளும் முதலாவது பயணம் இதுவென குறிப்பிடப்படுகின்றது. (வ)

# மரண அறிவித்தல்கள்

## சிறீரஞ்சன் ஜதுர்சன்

(யா/இந்துக் கல்லூரி 2013ஆம் ஆண்டு உயிரியல் பிரிவு மாணவன்)



இக்கிராளை கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாக வும் கொண்ட சிறீரஞ்சன் ஜதுர்சன் நேற்று (24.12.2015) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிறீரஞ்சன் நாகலோஜினி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் அஜிதாவின் அன்புக் கணவரும், ரிஹாசன், நிதுஷா, ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரமோகன், லலிதாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், பரஞ்சோதி, காலஞ்சென்ற வள்ளிப் பிள்ளை, கந்தையா, காலஞ்சென்ற சுபத்திரை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2015) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இக்கிராளை, கந்தரோடை. குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

மலர்வு 04 04 1928



உதிர்வு 23 12 2015

## திருமதி.இரத்தினம் திருவிளங்கம்


யாழ்ப்பாணம், இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் திருவிளங்கம் அவர்கள் 23 . 12 . 2015 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா நாகமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி, செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருவிளங்கம் (புகையிரதத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும், சந்திராதேவி யோகராஜா, மாலினிதேவி, ஸ்ரீஸ்கந்தராஜா, சகலகலாதேவி, கௌரிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், நேசமலர், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் செல்வராணி, காலஞ்சென்ற தேவராஜா, சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சண்முகலிங்கம் (சண்யோ), விஜயலஷ்மி, விசாகரட்ணம், ரமணி, சுதாகரன், மோகன் ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரசாந்த், சுமித்திரா, துஷித்தா, கோகுலன், ரஜீவ்சாந்த், அர்ச்சனா, பவித்ரா, கிரிகரன், கணேந்திரன், பிரியந்தி, நிறோமி, சுகந்திரா, பிரியங்கா, கோபிணி, சிந்துஜனன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், திவ்யேஷ், ரிசிகேஷ் ஆகியோரின் அன்பு பூட்டியும், சரஸ் அவர்களின் அன்பு பராமரிப்பாளரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 25.12.2015 வெள்ளிக்கிழமை அன்று கொழும்பு - பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 27.12.2015 ஞாயிற்றுக் கிழமை அன்று இணுவில் தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"இரத்தின வாசம்",
வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு, இணுவில்.

தகவல்: குடும்பத்தினர்.



## திருமதி செல்லம்மா பரமநாதர்

சரசாலை வடக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பரமநாதர் நேற்று (24.12.2015) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், மயில்வாகனம் -வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மயில்வாகனம் பரமநாதரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனை வியும், சகுந்தலாதேவி, அருள்மொழித் தேவி, மணிமேகலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயராஜா, நாகபாஸ்கரன் (ஓய்வு பெற்ற அஞ்சலர்), சிவஞானம், நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயபாரதி, கவிதா-ரஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அபித்திராவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.12.2015) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரசாலைவடக்கு,
சாவகச் சேரி. 077 6452245
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ரூபா பந்தயத்தால் இரண்டு வருடங்கள் தடை


ஆஸ்திரேலியா – நியூசிலாந்தில் கடந்த பெப்ரவரி – மார்ச் மாதங்களில் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதி ஆட்டம் தொடர்பாக பொது இடத்தில் பந்தயம் பிடித்த ஆஸ்திரேலிய வீராங்கனை ஒருவருக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.



இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா – நியூசிலாந்து அணிகள் மோதின. புகழ்வாய்ந்த மெல்பேர்ண் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்று உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்த ஆட்டத்தின் முடிவு எப்படி இருக்கும் என்பது குறித்து ஆஸ்திரேலிய பெண்கள் அணியின் ஏஞ்சலா ரியாகெஸ் (வயது – 24), இலங்கை மதிப்பில் 1000 ரூபாய் அளவில் பந்தயம் பிடித்துள்ளார். இது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த பந்தயம் ஆஸ்திரேலியா கிரிக்கெட்டின் ஊழல் தடுப்பு விதிமுறையை மீறுவதாக இருந்ததால், அவருக்கு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பந்தயம் பிடித்ததன் நோக்கமோ அல்லது பணத் தொகையோ முக்கியம் அல்ல எனவும், பொது இடத்தில் பந்தயம் பிடிக்கக் கூடாது என்பதே நிபந்தனை என்றும் ஆஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை குறித்த வீராங்கனையின் தடை தொடர்பாக் கருத்துத் தெரிவித்துள்ளது.

(ம)

# தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகத்தை கேள்விக்கு உட்படுத்திய கெயில்




மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் அதன் வீரர்களுக்கும் இடையில் முறுகல் நிலை தொடர்ந்து கொண்டேயுள்ளது. பொலார்ட், பிராவோ, சமி போன்ற அனுபவ வீரர்கள் ஓரங்கட்டப்பட்ட நிலையில் அந்த அணி தற்பொழுது தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறது. இந்த நிலையில் தீவுகளின் நிர்வாகத்தை பலர் கடுமையாகச் சாடி வருகின்றனர். அந்த வரிசையில் இணைந் துள்ளார் தீவுகளின் அதிரடி வீரரான கெயில்.

தீவுகளின் கிரிக்கெட் நிர்வாகம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த கெயில் – மேற்கிந்தியத் தீவுகளுக்கு என பெருமையான கிரிக்கெட் வரலாறு உண்டு. அந்த வரலாற்றை மழுங்கடித்துக் கொண்டிருக்கிறது தற்பொழுது உள்ள கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை. அனுபவ வீரர்களின் புறக்கணிப்பு தற்பொழுது தேவைதானா என்று அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதனால் எமது தரப்படுத்தல்கள்தான் பின்னடைவைச் சந்தித்துக் கொண் டிருக்கின்றன என்பதை அவர்கள் உணர வேண்டும். பிராவோ, பொலார்ட், சமி, சந்தர்போல் போன்றவர்கள் ஏன் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டனர் என்று தெரியவில்லை. அவர்கள் மீண் டும் இணைக்கப்பட வேண்டும். மாறாக இதே நிலைமை தொடர்ந்தால், உலகக்கிண்ணத் தொடர்களில் பங்கேற்க தகுதிகாண் ஆட்டங்களில் விளையாட வேண்டிய நிலை தீவுகளுக்கு ஏற்படும் – என்றார்.

(ம)


# பெண்கள் இரட்டையர் பிரிவில் மிர்சா—கிங்கிஸ் இணைக்கு விருது

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் பெண்கள் பிரிவில் சிறந்த இணையாக சானியா – கிங்கிஸ் இணையைத் தெரிவு செய்துள்ளது. சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் சிறப்பாகச் செயற்படும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கிக் கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் இந்த வருடத்தின் சிறந்த பெண்கள் இணையாக சானியா – கிங்கிஸ் இணையைத் தெரிவு செய்துள்ளது. இந்த வருடத்தில் ஒட்டுமொத்தமாக 9 கிண்ணங்களைக் கைப்பற்றியதாலேயே சானியா கிங்கிஸ் இணைக்கு இத்தகைய கௌரவம் கிடைத்துள்ளது. இவர்கள் கைப்பற்றிய ஒன்பது கிண்ணங்களில் விம்பிள்டன் கிண்ணமும் அடங்குகிறது.



(ம)

# ரி—20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவை பாக். வீழ்த்த வேண்டும்



ரி-20 உல்கக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் அணி இந்தியாவைவீழ்த்தி வரலாறு படைக்க வேண்டும் என்று பாகிஸ்தானின் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இதில், பரம எதிரிகளான இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டம் மார்ச் 19ஆம் திகதி தர்மசாலாவில் நடக்கிறது.

> “இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடனே பாகிஸ்தான் அணி ஒவ்வொரு முறையும் உலகக் கிண்ணத் தொடரில் காலடி எடுத்து வைக்கிறது.”

உலகக் கிண்ணத் தொடர்களில் பாகிஸ்தான் அணி, இந்தியாவை இதுவரை வென்றதில்லை. இதனை மாற்றி அடுத்து வரும் ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் இந்தியாவை வீழ்த்த வேண்டும் என பாகிஸ்தான் அணியை அந்த அணியின் முன்னாள் தலைவர் இன்சமாம் உல் ஹக் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் – “இந்தியாவை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்துடனே பாகிஸ்தான் அணி ஒவ்வொரு முறையும் உலகக் கிண்ணத் தொடரில் காலடி எடுத்து வைக்கிறது. இதுவரை காலமும் அது சாத்தியப்படாமை பரிதாபமான விடயம். இந்தியாவை வீழ்த்தியதில்லை என்ற வரலாற்றை பாகிஸ்தான் அணி இந்தமுறை உடைக்க வேண்டும்”– என்றார்.

(ம)

## எதிர்பார்த்ததே!

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனம் சிறப்பாகச் செயற்படும் வீரர், வீராங்கனைகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கிக் கௌரவிப்பது வழக்கம். அந்த வகையில் இந்த வருடத்தின் சிறந்த வீராங்கனையாக செரீனா வில்லியம்ஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த வருடம் நடைபெற்ற சர்வதேச அந்தஸ்துப் பெற்ற தொடர்களில் அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் ஒன்றைத் தவிர ஏனைய அத்தனையையும் செரீனா கைப்பற்றியிருந்தார். இதனால் சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் அசைக்கமுடியாத புள்ளிகளின் வித்தியாசத்தில் முதலிடத்தில் உள்ளார். இதனாலேயே செரீனாவுக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.



1978ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரும் இந்த விருதை, செரீனா வில்லியம்ஸ் கைப்பற்றுவது இது ஆறாவது தடவையாகும்.

(ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட மேசைப் பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாணவர்கள் கூடிய ஆதிக்கம்





யாழ்ப்பாணம், டிசெ. 25
இலங்கை மேசைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசியமட்ட மேசைப் பந்தாட்டத் தொடரில் 15வயது, 21வயது ஆண்கள் பிரிவிலும், 18வயது பெண்கள் பிரிவிலும், யாழ். மாவட்ட மாணவர்கள் சம்பியனாக தெரிவாகியுள்ளனர்.
யாழ். மத்திய கல்லூரியில் கடந்த 19ஆம் திகதியும் 20 திகதியும் இடம்பெற்ற இந்தத் தொடர்களில் 15வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டங்களில் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் துசியந்தனும், 21வயதுப்பிரிவு ஆண்களுக்கான ஆட்டங்களில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவன் அ.றொசானும் சம்பியனாகத் தெரிவானார்கள்.
21வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டங்களில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி நர்மதா சம்பியனாகத் தெரிவானார்.
(ம-23)

# 2019 உலகக்கிண்ணம்வரை டோனியின் தலைமைத்துவம் தேவை



இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லியிடம் பல அரிய திறமைகள் இருப்பதாகத் தெரிவித்து வந்த கங்குலி, ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளின் தலைவரான டோனிதான் தற்பொழுது இருக்கும் தலைவர்களில் சிறந்தவர் என்றும், 2019ஆம் ஆண்டின் உலகக்கிண்ணத் தொடர் வரை டோனியே தலைவராக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.
டோனி தொடர்பாக கருத்துத் தெரிவித்த கங்குலி "டோனி ஒரு சிறந்த தலைவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் டோனியின் தலைமைத்துவத்தை விட கோக்லியின் தலைமைத்துவத்தை நான் ரசிக்கிறேன். கோக்லியின் ஆக்ரோச அணுகுமுறைதான் இதற்குக் காரணம். அதற்காக டோனியின் தலைமைத்துவத்தில் மாற்றுக் கருத்து உண்டு என்று விளங்கிக் கொள்ளக்கூடாது. டோனி அமைதியை விரும்புபவர். அவர் ஒரு சிறந்த தலைவர். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை இந்திய அணி கைப்பற்றும். டோனி இருக்கும்வரை இந்திய ஒருநாள் மற்றும் ரி-20 அணிகளுக்குத் தலைவரைத் தெரிவுசெய்ய வேண்டிய தேவையோ அல்லது அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவையோ இல்லை. 2019ஆம் ஆண்டின் உலகக்கிண்ணத் தொடர்வரை டோனி தலைவராக நீடிக்க வேண்டும் - என்றார்.
(ம)

# இன்றைய மோதல்கள்



**எவ்.ஏ. தொடர் (வடமராட்சி)**
கரணவாய், டிசெ. 25
எவ்.ஏ. கிண்ணத்தொடரில் வடமராட்சி லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)

**றோயல் வி.கழகத் தொடர்**
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம், வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து 5ஸ்ரார் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது

**எவ்.ஏ. தொடர் (பூநகரி லீக்)**
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பள்ளிக்குடா ஜொலி போயிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பள்ளிக்குடா ஜொலி போயிஸ் அணியை எதிர்த்து மன்னார் கில்லறி அணி மோதவுள்ளது. (ம-23)

# தேசியமட்ட மேசைப்பந்தாட்டத் தொடர் வடமாகாண பெண்கள் அணி சம்பியன்







யாழ்ப்பாணம், டிசெ. 25
இலங்கை அரச திணைக்கள மேசைப்பந்தாட்ட சங்கம் நடத்திய இருபாலாருக்குமான தேசியமட்ட மேசைப்பந்தாட்டத் தொடரில் 40 வயது தொடக்கம் 45வயதிற்கு இடைப்பட்ட பிரிவில் வடமாகாண கல்வித்திணைக்கள பெண்கள் அணி சம்பியன் ஆனது.
யாழ். மத்திய கல்லூரியின் மேசைப்பந்தாட்டத் திடலில் கடந்த 21ஆம், 22ஆம் திகதிகளில் இடம்பெற்ற இந்தத் தொடரில் 40 வயது தொடக்கம் 45 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் சிறிமைதிலியும், இரட்டையர் ஆட்டத்தில் சிறிமைதிலி-பிரிந்தா இணையும் களமிறங்கி கிண்ணத்தைக் கைப்பற்றினர்.
25 வயது தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில் வடமாகாண கல்வித்திணைக்கள அணியின் வீராங்கனை வித்தியராணி, வெள்ளிப் பதக்கத்தைத் தனதாக்கிக் கொண்டார். குழுநிலைப் போட்டியில் சி பிரிவில் இரு பிரிவுகளிலும் (ஆண், பெண்) வடமாகாண கல்வித்திணைக்கள அணி வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியது.
(ம-23)

# ஆஸியை வீழ்த்த கபிலின் வியூகம்

முதல் 15 பந்துப்பரிமாற்றங்களுக்குள் 3 இலக்குகளைக் கைப்பற்றினால் இந்தியாவால் ஆஸ்திரேலியாவை வீழ்த்த முடியும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார் முன்னாள் இந்திய அணித்தலைவரான கபில் தேவ்.
இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் ஜனவரி மாதம் ஆரம்பமாகிறது. குறித்த தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே கபில்தேவ் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் "டோனி களத்தடுப்பு வியூகங்களை கச்சிதமாக அமைக்க வேண்டும். முதல் 15 பந்துப்பரிமாற்றங்களில் மூன்று இலக்குகளைக் கைப்பற்றுவது அவசியம். முதல் பந்துப்பரிமாற்றத்தை அஸ்வினைக் கொண்டு ஏதேனும் இரு ஆட்டங்களில் ஆரம்பிக்க வேண்டும். சுழலுக்கு ஆஸ்திரேலியா பலவீனமானது என்பதை இந்தியா பயன்படுத்த வேண்டும். இந்த நுட்பங்களை இந்தியா சிறப்பாகப் பயன்படுத்தி விளையாடினால் ஆட்டத்தின் முடிவு இந்தியாவுக்குச் சாதகமாக அமையும் - என்றார்.
(ம)


# யுனைற்றட் அணியை இலகுவாக வீழ்த்தியது ஆர்சனல்

இங்கிலாந்து பீறீமியர் லீக் தொடரில் மன்செஸ்டர் யுனைற்றட் அணியும், ஆர்சனல் அணியும் மோதிய நேற்றைய ஆட்டத்தில் ஆர்சனல் அணி வெற்றி பெற்றுள்ளது.
ஆட்டத்தின் ஆரம்பத்தில் யுனைற்றட் தனக்கு கிடைத்த வாய்ப்பை வீணடித்தது. நீண்ட இழுபறியின் பின்னர் 33ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்து முன்னிலை வகிக்க ஆரம்பித்தது ஆர்சனல். பின்னர் முதற்பாதியின் இறுதி நிமிடத்தில் மேசூத் ஒசிலிடம் இருந்து பந்தைப் பெற்ற ஒலிவர் ஜிரோட், அதைக் கோலாக்கி ஆர்சனலுக்கு 2:0 என்ற முன்னிலையை ஏற்படுத்தி வைத்தார். இரண்டாவது பாதியின் 82ஆவது நிமிடத்தில் பதில்கோலைப் பதிவுசெய்தது மன்செஸ்டர் யுனைற்றட். இருப்பினும் வேறெந்தக் கோல்களும் பதியப்படாத நிலையில் 2:1 என்று வெற்றிபெற்றது ஆர்சனல்.
(ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை மலிங்க இல்லை இலங்கைக்குப் பின்னடைவு



இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நாளை நடைபெறவுள்ள ஒருநாள் தொடரில் இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க பங்கேற்க மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், நாளை ஆரம்பமாகிறது. டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் பறிகொடுத்ததால் ஒருநாள் தொடரை இலங்கை அணி கைப்பற்ற முனைப்புக் காட்டும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாகவும் முழங்கால் பகுதியில் உள்ள வலி காரணமாகவும் மலிங்க தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களிலும் இருந்து விலகுகிறார். காயம் காரணமாகப் பிரசாத்தும், ஊக்க மருந்துச் சர்ச்சையால் பெரேராவும் விலகியுள்ள நிலையில், மலிங்கவின் விலகல் இலங்கையை மேலும் பாதித்துள்ளது. இதனால் நியூசிலாந்துக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

விசேட கருத்தரங்கு
Dec 30 இல் நடைபெறவுள்ள
வடமாகாண பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சை
January 02 இல் நடைபெறவுள்ள
தேசிய பாடசாலைக்கான பட்டதாரி ஆசிரியர் போட்டிப் பரீட்சை
காலம்- சனி, ஞாயிறு, திங்கள்
9.00 - 4.00 pm
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P. கமல்தாசன்
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P. 077 4696695

விசேட கருத்தரங்கு
இம் மாதம் 30 ஆம் திகதி நடைபெற இருக்கிறது.
வடமாகாண ஆசிரியர் தெரிவு
சனி, ஞாயிறு, திங்கள்
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
ஆஸ்பத்திரி வீதி, கொமர்சல் வங்கி அருகில்

இறைச்சிக் கோழி மலிவு விற்பனை
M.S.V பாம்
அம்மன் றோட், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்
T.P:077 8380158

V2 TRAVELS & TOURS
DHL FedEx aramex
0768226243

# 19 வயதுக்கு உட்பட்ட உலகக்கிண்ணம் அறிவிக்கப்பட்டது இலங்கை அணி

பங்களாதேஷில், ஜனவரி 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பத்தொன்பது வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரில், பங்கேற்கும் இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற இலங்கை, இந்தியா, இங்கிலாந்து அணிகள் விளையாடிய முத்தரப்புத் தொடரில், இலங்கை அணியில் விளையாடிய வீரர்களில் ஐவர் நீக்கப்பட்டு, சரண நாணயக்கார சேர்க்கப்பட்டுள்ளார். சரித் அசலங்க அணித்தலைவராக நீடிப்பதோடு, சகலதுறை வீரரான சம்மு அசான் உபதலைவராக நீடிக்கிறார்.

உலகக் கிண்ணத் தொடரின் லீக் பிரிவில் இலங்கை அணி கனடா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய அணிகளுடன் 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ளது. இலங்கை அணி, தனது முதலாவது ஆட்டத்தைக் கனடாவுடன் ஜனவரி 28ஆம் திகதி எதிர்கொள்கிறது. அணியின் விவரம் - கவீன் பண்டார, சலிந்து உசான், சம்மு அசான் (உபதலைவர்), சரித் அசலங்க (தலைவர்), அவிஸ்க பெர்னாண்டோ, வனிது ஹஸரங்க, கமிந்து மெண்டிஸ், சரண நாணயக்கார, விசாட் ரந்திக, லகிரு சமரக்கோன், அசித பெர்னாண்டோ, லகிரு குமார, ஜெஹான் டானியல், தமித சில்வா, திலான் நிமேஸ். (ம)

ICC UNDER19 CRICKET WORLD CUP BANGLADESH 2016

## அண்டர்சன் சந்தேகம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட்டில் இங்கிலாந்து அணியில் இருந்து அண்டர்சன் விலகும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் 2 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரிலும் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் பங்கேற்பது சந்தேகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலில் ஏற்பட்ட தசைப் பிடிப்புக் காரணமாகவே அவர், இந்த ஆட்டத்தில் பங்கேற்பது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

# 140 கோடி மதிப்பில் கட்டப்பட்ட ரொனால்டோவின் கனவு இல்லம்

போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல்மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ இலங்கை மதிப்பில் கிட்டத்தட்ட 140 கோடி ரூபாவுக்கு புதிய வீடு ஒன்றைக் கட்டியுள்ளார்.

8ஆயிரத்து 500 சதுர அடியில் 8 படுக்கை அறை, நீச்சல் குளம், சிறிய கால்பந்து மைதானம், ஹெலி இறங்கு தளம், உடற்பயிற்சிக் கூடங்கள், சிறிய சினிமா அரங்கு என அத்தனை வசதிகளும் இந்த வீட்டில் உள்ளதாக தெரிவித்துள்ள ரொனால்டோ, இந்த வீட்டை தனது கனவு இல்லம் என்றும் வர்ணித்துள்ளார்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.




## மானிட விடுதலைக்கான வழியைக் காட்டும் நத்தார்

*ஜனாதிபதியின் கிறிஸ்மஸ் வாழ்த்து*



இயேசுவின் பிறப்பு, அவர் இந்த உலகுக்கு வழங்கிய பிரபஞ்ச அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு பற்றிய புதிய போதனைகளுடன், மானிட விடுதலைக்கான வழியையும் காட்டுகிறது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நத்தார் பண்டிகை இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேலாக நீடிக்கும் அன்பு மற்றும் அறம் பற்றிய பாடங்களை எமக்குப் போதிக்கும் ஒரு பலமான குரலைக்கொண்ட இயேசுவின் பிறப்பைக் குறித்து நிற்கிறது. இயேசு பாலகர் செம்மறி ஆடுகளுக்கு மத்தியில் ஒரு தொழுவத்தில் பிறந்து, இடையர்களே அவருக்கு முதல் முதல் காணிக்கை செலுத்தியதிலிருந்து மனிதாபிமானம், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு மற்றும் பணிவு பற்றிய கிறிஸ்தவச் செய்தியை கண்டுகொள்ளமுடியும்.

இயேசுவின் தத்துவம் நித்தியமானதும், பிரபஞ்சம் தழுவியதுமாகும். ஒருவரது நம்பிக்கைக்குப் புறம்பாக, நாம் எல்லோரும் எமக்கும், மற்றவருக்கும் இந்த உலகில் உண்மையானதும் நீடித்ததுமான ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் ஒரு கடமை உணர்வைக் கொண்டுள்ளோம்.

நத்தார் உணர்வையும் அது உட்பொதிந்துள்ள கொடை, பகிர்வு, மன்னிப்பு மற்றும் ஏனையவர்களைப் பராமரித்தல் ஆகிய மனிதாபிமான பெறுமானங்களை மனதிற்கொண்டு, இலங்கையில் முப்பது வருடகால போரின்போது பாதிக்கப்பட்ட மக்களை நாடிச்சென்று அவர்களது வாழ்க்கையைச் சிறப்பானதாக மாற்றக் கைகொடுப்போம்.

இயேசுவின் பிறப்பு, அவர் இந்த உலகுக் வழங்கிய பிரபஞ்ச அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு பற்றிய புதிய போதனைகளுடன் மானிட விடுதலைக்கான வழியைக்காட்டுகிறது. நத்தார் மணி எழுப்பும் நாத ஓசையும், பண்டிகைத் திருப்பாடல் ஒலிகளும், இப்பண்டிகையையும், இன்று நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தையும் குறித்து நிற்கிறது. இலங்கைவாழ் கிறிஸ்தவ மக்களுக்கு மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த எனது நத்தார் வாழ்த்துக்கள்– என்றுள்ளது. (த)

## நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு பாலன் பிறப்பால் கிடைக்கட்டும்

*யாழ் ஆயரின் கிறிஸ்மஸ் செய்தி*



மீள்குடியேற்றம் – அரசியற் கைதிகளின் துரித விடுலை – புனர்வாழ்வு பெற்றவர்களின் பாதுகாப்பு – அவர்களுக்கான வாழ்வாதாரம் போன்றவைமுன்னுரிமைபெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து யாப்பினால் உறுதி செய்யப்படுகின்ற நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு தேவையாகின்றது என யாழ்.ஆயர் மேதகு ஜஸ்ரின் பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது நத்தார்ச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்,

உலகக் கத்தோலிக்கத் திருச்சபையோடு இணைந்து மீண்டும் ஒரு முறை – இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் – என்ற லூக்கா நற்செய்தியாளரின் வார்த்தைகளைக் கொண்டாடும் கிறீஸ்து பிறப்பின் பெருவிழாக் காலம் இது. முதலில் நன்மனது கொண்ட எல்லா மக்களுக்கும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன் என்ற அந்த அறிவிப்பானது இன்னும் பல மகிழ்வின் அறிவிப்புக்களை எம்மக்கள் அனைவருக்கும் அறிவிக்க வேண்டும் என்பதே எமது வாழ்த்தும் வேண்டுதலுமாகும்.

எமது முதலாவது கிறிஸ்மஸ் செய்தியை வெளியிடும்போது பல எண்ணங்கள் மனதிற் தோன்றுகின்றன. மூன்று தசாப்த காலப் போர் முடிந்து பல விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டு சீர்செய்யப்பட்டு விட்டாலும் – முதலாவதாகச் சீர்செய்யப்பட்டிருக்க வேண்டிய – மனித உணர்வையும் மனித வாழ்வையும் தொடுகின்ற – சில அடிப்படை விடயங்கள் இன்னமும் சீர்செய்யப்படவில்லை என்பது வேதனை தருவதாகவுள்ளது. மீள்குடியேற்றம் – அரசியற் கைதிகளின் துரித விடுலை – புனர்வாழ்வு பெற்றவர்களின் பாதுகாப்பு – அவர்களுக்கான வாழ்வாதாரம் போன்றவை முன்னுரிமை பெறுகின்றன. இவற்றைத் தொடர்ந்து யாப்பினால் உறுதி செய்யப்படுகின்ற நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு தேவையாகின்றது.

இவை பற்றி இலங்கை ஜனாதிபதியை சில தினங்களுக்கு முன்னர் யாழ் ஆயர் இல்லத்திற் சந்தித்தபோதும் குறிப்பிட்டிருந்தோம். ஆறுதலாக அவை பற்றித் தெளிவாக அவருக்குத் தெரியப்படுத்தி விரைவான நடவடிக்கையை எடுக்கத் தூண்டுவோம்.

பிரான்சீஸ் பாப்பரசர் இரக்கத்தின் ஆண்டை அறிவித்துள்ளார். இந்த இரக்கத்தின் ஆண்டானது பாவமன்னிப்புப் பெற்று ஆண்டவரோடும் அயலவரோடும் ஒப்புரவாகும் காலமாகும். இலங்கை வாழ் இரண்டு இனங்களும் அன்புறவில் இணைந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒரு புதிய வாழ்வைத் தொடங்க நல்லெண்ண அரசானது, இக்காலத்தில் முழுமையான செயற்பட வேண்டுமென அன்பு அழைப்பு விடுக்கிறோம்.

புதிய ஆண்டு நம்பிக்கையின் ஆண்டாக – நல்லெண்ண அரசின் செயற்பாடுகளை வேகப்படுத்தும் ஆண்டாக – அனைவருக்கும் இறை இயேசுவின் அருளையும் ஆசீரையும் அள்ளி வழங்கும் ஆண்டாக மலர இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறோம்– என்றுள்ளது. (த)

## புதியதொரு நம்பிக்கை நத்தாரில் கிடைக்கட்டும்

*எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்து*



அனைத்து இலங்கை வாழ் மக்களும் உண்மையான சமாதானத்தையும், நம்பிக்கை இழந்து வாழ்பவர்கள் ஒரு புதிய நம்பிக்கையை நத்தார் செய்திக்கூடாகக் கண்டு கொள்ளவும் வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பலவிதமான மாற்றங்களைக் கண்ட ஓர் ஆண்டின் நிறைவையும் நத்தார் தினத்தையும் நினைவு கூருகின்ற இந்தவேளை இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கு எனது இனிய நத்தார் தின வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் குடும்பத்தாரோடும் உறவினர்களோடும் இந்தப் பண்டிகை நாள்களை கொண்டாடுகின்ற தருணத்தில் இழப்பிலும் தனிமையிலும் வாடும் உறவுகளையும் எமது மனதில்நினைத்துக் கொள்ள மறவாதிருப்போமாக.

ஒப்புரவாகிய நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் முன்செல்லுகின்ற இந்தத் தருணத்தில், மெய்ச் சமாதானம், நம்பிக்கை, மனிதநேயம் போன்ற நத்தார் தினத்தின் உண்மையான பண்புகள் எமது நாட்டில் தொடர்ந்தும் பாதுகாத்து பேணப்பட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். இந்த நத்தார் தினத்திலே அனைத்து இலங்கை வாழ் மக்களும் உண்மையான சமாதானத்தையும், நம்பிக்கை இழந்து வாழ்பவர்கள் ஒரு புதிய நம்பிக்கையை நத்தார் செய்திக்கூடாகக் கண்டு கொள்ளவும் வேண்டும் என வாழ்த்துகின்றேன்–என்றுள்ளது.

## காரிருளில் பிரகாசிக்கும் இறையொளி எம்மவரின் இருளைப் போக்கட்டும்

*தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் நத்தார் ஆசிச் செய்தியில் தெரிவிப்பு*



எம்மைப் பிடித்துள்ள காரிருள் நீங்கிட வரலாற்றில் தலையீடு செய்திட்ட இறைவன் ஏற்ற விமோசனத்தை அருளுவாராக என தென் இந்திய திருச்சபைப் பேராயர் பேரருட் கலாநிதி டீ.எஸ். தியாகராஜா தனது நத்தார் செய்தியில் கூறியுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

இந்த கிறிஸ்மஸ் காலத்தில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன். கிறிஸ்மஸ் என்பது கடவுள் கிறிஸ்துவில் மானுடத்தைத் தேடிவந்த நிகழ்வாகும். இது கடவுளுக்கு மானுடம் அவசியம், தேவை என்பதை சுட்டி நிற்கின்றது. மானிடக் கூட்டுறவில் கடவுள் கொண்டுள்ள வாஞ்சையையே இது எடுத்தியம்புகின்றது. மட்டுமல்ல, கடவுள் மானிடத்தைத் தமது சாயலில் படைத்த படியினால், அந்த சாயல் மங்காமல் பாதுகாப்பதும் அவர் பணியாகின்றது. எனவே கதறியழும் மானுடத்தை அதன் சாயல் இழந்துபோகாவண்ணமாகப் பாதுகாப்பதும் கடவுள் தமது குமாரனை அனுப்பியதன் இன்னொரு நோக்கமாகும்.

ஆதலால், எங்கெல்லாம் மானுட மாண்பு மறுக்கப்படுகின்றதோ, எங்கெல்லாம் மானுடத்திலுள்ள இறை சாயலுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் கடவுள் தலையிடுகின்றார். ஒவ்வொரு தடவையும் கிறிஸ்மஸ் கொண்டாடப்படும்போது இவ்வுண்மையையே நாம் உள்வாங்கிக்கொள்ளுகின்றோம். கடவுளோடு உறவாடுவதும், அந்த உறவுக்கு எந்தவகையிலும் பங்கம் வராமல் மானுட உறவுகளைப் பேணிக்கொள்வதும் எம்மொவ்வெருவர் மீதும் விழுந்த சுமையாகும். இன்று நம்மவர்கள் அனுபவிக்கின்ற சொல்லொண்ணா வேதனைகள், உபத்திரவங்கள், அவலங்கள் அனைத்திநின்றும் விடுதலை கிட்டும் என்று எம்மை நம்பிக்கையுடன் வைத்திருப்பதே கிறிஸ்மஸ் நமக்குத் தரக்கூடிய செய்தியாகும். இந்நம்பிக்கையை உடைய மக்களாகிய நாம், அனைத்து மக்களுக்கும் இந்நம்பிக்கையை ஊட்டிட இறைவன் அழைக்கின்றார். எம்மைப் பிடித்துள்ள காரிருள் நீங்கிட வரலாற்றில் தலையீடு செய்திட்ட இறைவன் ஏற்ற விமோசனத்தை அருளுவாராக–என்றுள்ளது.

## இயேசு பாலகன் பிறந்தார்

நித்திலமே நிலையான தென்றே நினைப்பவர்
நிம்மதியைத் தேடியே அலைகின்றார் உலகினில்
நித்தம் பணம்பொருள் சேர்ப்பதிலே ஆவல் கொண்டோர்
சத்திரத்தில் தங்கிடவும் இடம் கொடுக்கவில்லை
முத்தொளி புன்முறுவல் மாட்டுத் தொழுவத்தில்
மரிமைந்தர் இயேசு பாலனாகப் பிறந்தவர்
தத்துவமாய்த் தம்பிறப்பால் உணர்த்தும் செய்தி
எத்தனை பேர்கள் உணர்ந்துள்ளார் தம்வாழ்விலே

அன்புநீதி அமைதி சமத்துவ வாழ்வினையே
அகிலத்தில் கொண்டு வந்த இயேசு பாலன்
துன்பங்கள் இறையன்பின் அடையாளம் என்பதை
தூயபிறப்பின் மூலம் காண்பித்தார் உலகினிற்கே
பொன்பெருமை செல்வங்கள் காண்பதில்லைக் கடவுளை
பிறரன்பு உள்ளவரே கண்டுகொள்வார் இறைவனை
நன்மனம் கொண்ட இடையர் ஞானிகளும்
பாலகனைக் கண்டு பாதம் பணிந்து வணங்கினர்

அன்ரனி பீற்றர்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்
யாழ்.கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்திகள்

## சமாதானம்-விடுதலைக்கு தொடர்ந்து பிரார்த்திப்போம்

*நத்தார் செய்தியில் உலகத் தமிழர் பேரவைத் தலைவர் தெரிவிப்பு*



நானும் நீங்களும் தொடர்ந்து சமாதானத்திற்காக விடுதலைக்காகப் பிரார்த்திப்போம் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் கலாநிதி எஸ். ஜே.இம்மானுவேல் அடிகள் நத்தார் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார். அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்னுமொரு புத்தாண்டை இறைவன் நமக்குக் கொடுக்கின்றார். அனைத்தையும் ஈந்தருளும் பரம ஈஸ்வரனுக்கு நன்றி. அவரே உங்கள் அனைவரையும் ஆசீர்வதித்து, உங்கள் வாழ்விற்கு ஒளி கொடுத்து வழி நடத்துவாராக.

இந்த நாள்களில் கிறீஸ்துவின் பிறப்பை நினைவுகூர்ந்து உலகமெங்கும் கிறிஸ்மஸ் விழா கொண்டாடுகின்றனர். ஒருவருக்கொருவர் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் தெரிவிக்கின்றனர். இவ்வுலகில் வாழும் எல்லா மனிதர்களின் மனதிலும் சமாதானத்திற்காக ஒரே தாகம் மேலெழுகின்றது. தமிழர்களாகிய எமக்கு உண்மையான சமாதானம் எமது விடுதலைத் தாகத்துடன் பின்னிப் பிணைந்து இருக்கின்றது. எமது வாழ்த்துக்களும் அவ்வாறே அமைகின்றன. ஆனால் சர்வதேசத் தலைவர்களோ, தம்முடைய சொந்த நலன் அடிப்படையிலே மேலும் மேலும் போருக்கும் அழிவுக்குமே நம்மை இழுத்துச் செல்கின்றனர். எமது நாட்டுத் தலைவர்களும் உண்மையை புரிய, நீதியை ஒத்துக்கொள்ள, பொறுப்பை ஏற்க, துணிவின்றி பின்வாங்குகின்றனர்.

நானும் நீங்களும் தொடர்ந்து சமாதானத்திற்காக விடுதலைக்காகப் பிரார்த்திப்போமாக. அதே நேரத்தில் எம்மால் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்வோமாக. இறைவன் தகுந்த நேரத்திலும், வகையிலும் எமக்கு உகந்ததைத் தருவார். ஆனால் நாம் ஒவ்வொருவரும் செய்யக் கூடியதொன்று இருக்கின்றது. அதாவது எமக்கென்று ஒரு சிறிய உலகம் இருக்கின்றது. அது நாமும், நமது சூழலும், நமது தொடர்புகளும். இந்த சிறிய உலகத்தில் நாம் ஒவ்வொருவரும் உண்மையான சமாதானத்தையும் விடுதலையையும் ஆரம்பிக்கலாம்.

இந்தச் சுய சமாதானத்தையும் விடுதலையையும், நாமே எம்மில் முதல் அடைவதற்கு, நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய சில வழிகளை நான் கூறுவேன்.

1. சகலத்தையும் படைத்து வழி நடத்தும் இறைவனையும் அவர் திட்டத்தையும் ஏற்று நடப்பது.

2. இறைவன் எமக்கு வாழ்வும், அன்பும், இரக்கமும், மதிப்பும் கொடுப்பது போல், நானும் என் உலகில் உள்ளவர்க்கு, என்னை சூழ்ந்தவர்க்கு அவைகளைக் கொடுக்க முயற்சிப்பது.

3. எல்லாத்தமிழர்களையும்சமமாகமதித்துஅவர்களுக்குரிய உரிமைகளை வழங்கி வாழவேண்டும்.

இவைகளைச் செய்வதற்கு மிகச் சிறந்த ஓர் உதாரணம் – நாம் எல்லோரும் நாளுக்கு நாள் அனுபவிக்கும் சூரியன். இறைவன் பரம ஈஸ்வரன் என்ற பண்புகளை சூரியனே நமக்கு தெளிவாகக் காட்டுகின்றது.

சூரியன் எல்லையற்றவகையில், தொடர்ச்சியாக ஒளியை, வெப்ப சக்தியை சகல படைப்புகளுக்கும் சமமாகக் கொடுத்துக் கொண்டே இருக்கிறது. அதே போல், நாமும் எமது வாழ்வை, அன்பை, இரக்கத்தை, உந்து சக்தியை மற்றவர்க்கு கொடுப்பதே எமது வாழ்வில் சுய சமாதானத்தையும் சுய விடுதலையையும் அடைய சிறந்த வழியாகும்–என்றுள்ளது.

## நத்தார் பண்டிகையே நீ வருக !



நாதன் பிறந்த நாளாம்
நத்தார் பண்டிகையே
நல்லதே நீ கொண்டு வருக !
நாள் தோறும்
அமைதி நிலவிட நீ வருக !
நயவஞ்சகத்தால்
நசுக்கப்பட்ட
நம்மவர் கனவுகளை
நாள் தோறும்
உயர்த்திட நீ வருக !
வேசத்தால் வேலிபோடும்
பாசமில்லா மனிதர்களை
பாருக்கு காட்டிட நீ வருக !
நாள் தோறும்
எமக்காக வாழ்ந்தவர் அவரே
நன்றியோடு
அவர் புகழ் பாடி நீயும்
நேர்மைகள் சுமந்து வருக...

– இளையவள்.

## நம்பிக்கையில் மலரட்டும் நத்தார்



கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. என்ற நம்பிக் கையில் பிறக்கட்டும்நத்தார் விழா. அஞ்சாதீர் உங்களுக்காக ஒரு மீட்பர் பிறந் துள்ளார் என வயல் வெளியில் காவல் இருந்த இடையருக்கே முதல் செய்தி கிடைத்தது. இதுவே இன்றுவரை நினைவுகூரும் நத்தார் விழாவாகக் கொண்டாடப் படுகிறது.

பால இயேசு பாரினில் பிறந்த செய்தி இல்லங்கள் தோறும் பாலன் குடில், நத்தார் மரம், வாழ்த்து மடல், விருந் தோம்பலால் மக்கள் மகிழ்ந்து இன, மத, மொழி கடந்த உலக விழாவாக கொண்டாடப்பட்டபோதும், பால இயேசு பிறந்த காலம் யேசுவின் பெற்றோர் பிறந்த மண்ணில் சத்திரத்திலும் இடமில்லாது மாடடை குடிலே தஞ்சமானது. அகதி வாழ்வு, சிறுவர்களைத் துன்புறுத்தும் ஏரோது அரசனின் அரச பயங்கரவாதம் சூசையும் மரியாளும் பாலகனைக் காக்க பட்டதுயர்கள் இன்றும் எமது மக்களின் வாழ்வில் தொடர் கதையாகவே தொடர்கிறது. இவை எமது இறைநம்பிக்கையால் வெல்ல பாலன் இயேசுவிடம் அரண் புகுவோம்.

ஏழைகள் நாம் என ஏங்கிவிட வேண்டாம். ஏழ்மையில் பிறந்த பால இயேசுவின் சாயல்களே பேறு பெற்றோர். சத்திரத்தில் பிறந்த இயேசு பாலன் சரித்திர நாகனானவரர். நம் துயர்போக்க பிறந்தார் துன்புறும் மக்கள் துயர் தீர்க்க இரக்கத்தின் ஆண்டில் துணைக் கரங்களாக மாறும் ஒவ்வொருவரது சிறுசெயல்களும் எம்மக்களின் நம்பிக்கை வாழ்வை மலரவைக்கக் கிடைத்த சந்தர்ப்பங்களே, என நத்தார் விழாவை அர்த்தமுள்ளதாக்குவோம். இறைவனின் இரக்கம் எம்மனங்களால் வெளிப்பட உதவிடும் கரங்களாக வாழ்த்துக் கூறுவோம். நற்செயல்களால் நம் மனித நேயத்தை மலர வைப்போம்.

செ.யோசப்பாலா
செயலாளர்,
கத்தோலிக்கக் கலை இலக்கிய வட்டம்

## புத்தாண்டில் புதுயுகம் மலரட்டும்



மக்கள் மனதில் மகிழ்ச்சியைத் தரும் விழா புத்தாண்டு விழாவாகும்.

இந்த ஆண்டு நல்ல ஆண்டாக இருக்கும். இதை நலம் தரும் ஆண்டாக மாற்றுவது ஒவ்வொருவர் கையிலும் உள்ளது. எங்கே தர்மம் நிலைப்படுகிறதோ அங்கே அதர்மம் குறைகிறது. நாளடைவில் தர்மம் பெருகப் பெருக, அதர்மம் அழிகிறது. அதர்மத்தால் வந்த அழிவும் அழிகிறது.

ஆன்மிகம்தான் பெண்களுக்குப் பாதுகாப்பு. எவ்வளவுக்கு எவ்வளவு பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு உலகம் அழிவிலிருந்து காப்பாற்றப்படும்.

வெற்றுப் பேச்சாலும், சொல்லாலும், எதையும் சாதிக்க முடியாது. தொண்டாலும் செயலாலும் தான் எதையும் சாதிக்க முடியும்.

அன்பைச் சொல்லாலும், செயலாலும் வெளிப்படுத்த வேண்டும். உள்ளத்து அமைதிதான் நிலையானது. கவர்ச்சியைக் கண்டு ஏமாறக்கூடாது. ஆன்மாவைச் சுத்தமாக வைத்திருக்க மனதைச் சுத்தமாக்க மௌனமும், தியானமும், தொண்டும் வழிகாட்டிகள். கைகாட்டி கள் வழியே சென்றால் எவரிடமும் கைகட்டி நிற்கும் நிலை வராது.

ஆத்திரப் போக்கை விட்டு அன்புப் புதையலை உள்ளத்தில் நிறைத்து மன ஒற்றுமையுடனும், மன அமைதியுடனும், மன நிம்மதியுடனும் அனைவரும் வாழ இந்தப் புத்தாண்டுத் திருநாளில் புதுயுகம் மலர அனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றோம்.

சர்வேஜனகா சுகினோபவந்து. இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க. ஸ்ரீசுபஸ்வரம்

